

ஈஸ்டர் திருநாள் வாழ்த்துக்கள்


# புதுவிதி
PUTHU VITHI

விலை 20/=

பக்கங்கள் 24

20 ஏப்ரல் 2019

புதுமை : 03 விதி : 150


'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'



## வன அழிப்பை மறைக்க மரநடுகை



பேராலயத்தை விழுங்கிய பெருநெருப்பு!



தலைவன் என்றாலே கெத்துதான்...!



அன்னை இட்ட தீ!



தேடும் கண்கள்

# பேராலயத்தை விழுங்கிய பெருநெருப்பு...!

பரிஸ் நகரின் தனித்துவம் மிக்க அடையாளங்களில் ஒன்றான புராதன கத்தோலிக்க தேவாலயத்தின் (Notre-Dame de Paris) பெரும் பகுதிகளை தீ விழுங்கி விட்டது. 856 ஆண்டுகள் பழமைவாய்ந்த இந்த அருங்கலைப் பொக்கிஷம் முழுமையாக தீயில் அழிவதைத் தடுக்க பெருமெடுப்பிலான தீயணைப்புப் பணி முழுவீச்சில் நீடிக்கின்றது.

தேவாலயத்தில் கடந்த சில நாட்களாக மறுசீரமைப்பு வேலைகள் நடைபெற்று வந்த சூழ்நிலையில் திங்கட்கிழமை இரவு ஏழு மணியளவில் அங்கு தீ மூண்டிருக்கிறது. இந்தத் தீயால் 13, மற்றும் 19 ஆம் நூற்றாண்டு கால கட்டட வேலைப்பாடுகள் அமைந்த பகுதியை தீ நாசமாக்கின. ஆலயத்தின் அழகிய முகடுகளில் தீ கொளுந்து விட்டெரியும் காட்சிகள் உலகெங்கும் ஒளிபரப்பாகியுள்ளன.

பிரதமர், அமைச்சர்கள், எலிஸே மாளிகை அதிகாரிகள் சகிதம் ஜனாதிபதி மக்ரோன் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று அனர்த்தத்தைப் பார்வையிட்டார் கள். ஈஸ்டர் காலத்தில் கத்தோலிக் கர்களை மட்டுமன்றி பிரான்ஸ் முழுவதும் சகல மக்களையும் உணர்வு ரீதியில் பெரிதும் பாதித்திருக்கிறது இந்தத் தீ அனர்த்தம்.

**வரலாறு**

பரிஸ் நகரத்தில் இருந்த வர லாற்றுப் புகழ்மிக்க நொத்தர் டாம் (Notre-Dame-de-gup];) போராலயம் தீக்கிரையான சம்பவம் பிரான்ஸின் வரலாற்றில் முக்கியமான துன்பியல் நிகழ்வாக பதியப்படும். பிரெஞ்சு குடியரசு தனது வரலாற்றுச் சின்னங்களை அதிக கவனத்துடன் பராமரித்து வந்த போதிலும் இந்த பேராலயத்தைக் காப்பாற்ற முடியாமல் போய்விட்டது.

856 ஆண்டு கால பழமை வாய்ந்த இந்தப் பேராலயம் கி.பி. 1760 வரை மன்னர்களின் அனுசரணையுடன் அரசியலிலும் பிரெஞ்சு மக்களது வாழ்வியல் தளத்திலும் செல்வாக்கு செலுத்தும் ஒரு அமைப்பாக இருந்து வந்தது. பிரெஞ்சுப் புரட்சியின் பின்னர் குறிப்பாக கி.பி. 1793 அளவில் மதத்தை அரசியலில் இருந்து வேறுபடுத்தி வைக்கும் நடைமுறை ஆரம்பித்தபோது இந்தப் பேராலயம் அரசு மீதும் மக்கள் மீதும் ஆளுமையைச் செலுத்தும் தனது பிடிமானத்தை இழந்தது.

பிரெஞ்சு புரட்சிக் காலகட்டத்தில் இந்த பேராலயத்தின் பெரும் பகுதி புரட்சியாளர்களின் தேவைகளுக்காக பயன்படுத்தப்பட்டது. அத்துடன் அந்தக் காலகட்டத்தில் இடம்பெற்ற மோதல்களில் இந்தப் பேராலயத்தின் பல பகுதிகள் சிதைவடைந்தன. புரட்சிக்குப் பின்வந்த அரசு இந்தப் பேரா்லயத்தைப் புதுப்பிப்பதற்கும் அதன் இருப்பையும் அதிகாரத்தையும் பழைய நிலைக்கு கொண்டுவருவதற்கும் விரும்பவில்லை.

கி.பி. 1801 இல் நெப்போலியன் பொனபாட் ஆட்சிக்கு வந்த பின்பு பேராலயத்தைப் புதுப்பிப்பதற்கான ஒப்பந்தம் ஒன்று செய்யப்பட்டு வேலைகளும் நடந்தன.

ஆனால், நெப்போலியனின் மறைவுக்குப் பின்பு இந்தப் பேராலயம் மீண்டும் அரசின் ஆதரவை இழந்தது. பிரான்ஸில் புகழ்பெற்ற எழுத்தாளரான விக்டர் ஹூகோ கி.பி. 1831 ஆம் ஆண்டு இந்தப் பேராலயத்தின் அவலநிலை பற்றி ஆதரங்களுடன் நூல் ஒன்றை எழுதி வெளியிட்டார்.

அதைத் தொடர்ந்து செல்வந்தர்களினதும் மக்களினதும் நிதிபங்களிப்புடன் இந்த பேராலயத்தைப் புதுப்பிக்கும் பணிகள் நடந்தன. அதன்பின் முதலாம் இரண்டாம் உலக யுத்த காலத்தில் இந்தப் பேராலயம் மீண்டும் அதிக பேரழிவுகளைச் சந்தித்து.

1944 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் நாசி ஆக்கிரமிப்பிலிருந்து பிரான்ஸ் விடுதலையான பின்பு ஆட்சிக்கு வந்த ஜெனரல் சாள்ஸ்



து ஹோல் இந்த பேராலயத்தைப் புனரமைப்பதற்கு முன்வந்தார். 26.08.1944 அன்று பிரெஞ்சு குடியரசின் விடுதலையைக் கொண்டாடும் முகமாக மிகப்பெரிய ஆராதனை நிகழ்வொன்றை இந்தப் பேராலயத்தில் நிகழ்த்தினார்.

இன்றைய நவீன பிரெஞ்சு குடியரசில் இந்தப் பேராலயம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பொக்கிசமாகப் பார்க்கப்பட்டது. அதனுடைய மதப் பாரம்பரியம் வழிபாட்டு சுதந்திரம் என்பன அங்கீகரிக்கப்பட்டாலும் மன்னர் காலத்தைப் போல அரசியலிலும் மக்களது வாழ்வியலிலும் அதிகாரம் செலுத்தும் இந்த பேராலயத்துக்கு வழங்கப்படவில்லை. வரலாற்று பொக்கிசத்தை பேணிப்பாதுகாப்பது என்ற அடிப்படையில் இந்த பேராலயத்தின் கட்டிட புனரமைப்புக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. அதேநேரம் தீவிரவாத அச்சுறுத்தலிலிருந்து இந்தப் பேராலயத்தைப் பாதுகாப்பதிலும் அதிக கவனம் செலுத்தப்பட்டது. பல்வேறு வரலாற்றுச் சான்றுகளை தன்னகத்தே கொண்ட இந்த பேராலயம் இன்று தீக்கிரையாகிப் போனது ஒரு வரலாறாகவே பதியப்படும்.

**காப்பாற்றப்பட்ட இயேசுவின் கிரீடம்**

ஏற்பட்ட பெருந்தீயினால், பேரலாயத்தின் அடையாளமான கூம்புக் கோபுரம் அழிவடைந்து விட்டது. அத்துடன் மேற்கூரையின் மூன்றில் இரண்டு பங்கு பகுதியும் அழிவடைந்து விட்டது. ஆலயத்தில் சேகரிக்கப்பட்ட வரலாற்றுப் பொக்கிசங்கள் பலவும் அழிவடைந்து போயின.

இயேசுநாதரை சிலுவையில் அறைவதற்கு முன்னர், அவரின் தலையில் சூட்டப்பட்ட முள் கிரீடம் இந்த ஆலயத்திலேயே பேணிப் பாதுகாக்கப்பட்டு வந்தது. அத்துடன் இயேசு நாதரை சிலுவையுடன் அறையப்பட்ட ஆணி ஒன்றும் பாதுகாக்கப்பட்டது. இவை எந்தச் சேதமுமின்றி பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளன.

**தீயணைப்பில் அசமந்தமா?**

பேராலயத்தில் ஏற்பட்ட தீயை அணைப்பதற்கு விமானங்களையோ அல்லது ஹெலிகொப்டர்களையோ பயன்படுத்தவில்லை என மக்கள் அங்கலாய்க்கிறார்கள். இதே கருத்தை அமெரிக்க ஜனாதிபதியான டொனால்ட் ட்ரம்பும் தனது ருவிற்றர் பக்கத்தில் வெளியிட்டிருந்தார்.

வான் வழியாக தீயை அணைப்பது இலகுவான வழிமுறைதான் என்றபோதும், அது இங்கு பரிசீலனைக்கு எடுக்கப்படவில்லை. அதற்கு பல காரணங்கள் உள்ளன.

பொதுவாக காட்டுத் தீ போன்ற, பரந்த பிரதேசங்களில் ஏற்படும் தீயைக் கட்டுப்படுத்தவே விமானங்கள் பயன்படுத்தப்படுகின்றன. குடிசன நெருக்கடி மிகுந்த ஒரு நகரின் நடுவே சிறிய ஒரு பகுதி மீது வான்வழி தீயணைப்பு முறையை கையாள்வதில் தொழில் நுட்ப பிரச்சினைகளை விடவும் பாதுகாப்பு சிக்கல்கள் உள்ளன. தாழப்பறக்கும் விமானங்களில் இருந்து கொட்டப்படும் நீர்த்தாரைகளின் அழுத்தம் தேவாலயத்தின் அயலில் உள்ள குடியிருப்புகள் மீதும் பாதிப்புகளை ஏற்படுத்தலாம்.

எட்டு நூற்றாண்டுகள் பழமைவாய்ந்த - முழுவதும் மரத்தினாலான- தேவாலய கோபுரங்கள் எந்த வேளையிலும் இடிந்துவிழக்கூடிய அளவுக்கு நலிவுற்றுள்ளன. அவற்றின் மீது வானில் இருந்து தண்ணீரைக் கொட்டுவது ஆபத்தானது. நீரின் எடையும் அதன் வீச்சு வேகமும் தேவாலயக் கட்டமைப்பை முற்றாக சிதைத்து விடக்கூடியது. அதைவிட மிகத் தொன்மையான, விலை மதிப்பற்ற ஓவியங்கள் மற்றும் கலைப் பொக்கிஷங்கள் ஆலயத்தின் உள்ளே பேணப்படுகின்றன. வான்வழியாக பெருமளவு தண்ணீரைக் கொட்டுவது அப்பொருள்கள் அழிவுறும் நிலைமையை உருவாக்கலாம்.

முழுவதுமாக தீ சூழ்ந்த நிலையிலும் தேவாலயக் கட்டமைப்பை (structure) சிதைவுறவிடாமல் காப்பதற்கே முன்னுரிமை அளிக்கப்பட்டதாக பிரான்ஸின் உள்துறை அமைச்சும், தீயணைப்புத் துறையினரும் விளக்கமளித்துள்ளனர்.

எது எப்படி இருந்தாலும், பேராலயத்தில் - அதுவும் ஈஸ்டர் திருநாள் அண்மித்த சமயத்தில் ஏற்பட்ட தீ விபத்து பிரான்ஸ் மக்களை மட்டுமல்ல உலகெங்கும் பரந்துவாழும் கிறிஸ்தவர்களையும் - கலை ஆர்வலர்களையும் கவலையில் ஆழ்த்திவிட்டது.





புதுவிதி
PUTHU VITHI

இனியொரு விதி செய்வோம் - அதை
எந்த நாளும் காப்போம்
தனி ஒருவனுக்கு உணவில்லையெனில்
ஜகத்தினை அழித்திடுவோம்.

புதுமை : 03 20 ஏப்ரல் 2019 விதி : 150

# ஜனாதிபதி திருப்பதி விஜயம்: நாடு திரும்பியதும் புதிய அறிவிப்பு

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன திருப்பதி வெங்கடேசப் பெருமாளைத் தரிசிக்கக் கடந்த புதனன்று இந்தியா சென்றுள்ளார். இவர் பதவியேற்ற பின்பு திருப்பதிக்கான மூன்றாவது விஜயம் இதுவாகும். அண்மையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அங்கு விஜயம் செய்து திருப்பதியானை வழிபட்டுத் திரும்பியிருந்தார். எதிர்க்கட்சி தலைவர் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருக்கும்போதும் அதன் பின்பும் பல முறை திருப்பதி சென்று வந்துள்ளதுடன் அவர் தனது நண்பரான சுப்பிரமணிய சுவாமியையும் சந்தித்து வருவதுண்டு.

இவர்கள் சிங்களத்தில் தங்கள் வழிபாடுகளை மேற்கொள்வதால் வெகு விரைவில் திருப்பதியான் சிங்களத்தை விளங்கிக் கொள்ளக் கற்றுக் கொண்டு வருவாரெனவும் கருதப்படுகிறது. இம்மக்கள் தங்கள் பாவங்களைப் போக்க காசி, இராமேஸ்வரம் போன்ற தலங்களுக்கு தீர்த்த யாத்திரை சென்று கங்கையில் நீராடி வருவதுண்டு.

இலங்கையின் அரசியல்வாதிகள் போரைச் சாட்டாக வைத்து லட்சக்கணக்கான தமிழ் மக்களைக் கொன்று குவித்தும், போரின் பின்பும் தொடர்ந்தும் அநீதிகளை மேற்கொண்டும், செய்யும் பாவங்களுக்கு விமோசனம் பெறவே அவர்கள் திருப்பதி செல்கிறார்களோ எனச் சிலர் கேள்விகளை எழுப்புகின்றனர்.

திருப்பதி தெப்பைக் குளத்தில் நீராடினால் பாவங்கள் போய் விடுமா என்பது பற்றித் தெரியவில்லை. தெற்பைக் குளத்தின் நீர் ஓடுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. எனவே அது பாவங்களைக் கழுவ வாய்ப்பில்லை என்றே நம்பப்படுகிறது.

தெப்பக் குள நீர் பாவங்களை கழுவுகிறதோ இல்லையோ மைத்திரி கழுவும் நோக்குடனேயே சென்றுள்ளார். ஏனெனில் நாடு திரும்பியதும் தனது அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பாகப் புதிய அறிவித்தலை விடுக்கப் போவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொதுசன பெரமுனவுடன் பல சுற்றுப் பேச்சுகள் நடத்திய போதும் அடுத்த தேர்தலில் ஜனாதிபதி வேட்பாளராக மைத்திரி போட்டியிட்டால் அவரை ஆதரிக்கத் தயாரில்லை. இன்னொரு புறம் ஐ.தே. கட்சி எல்லாத் தேர்தல்களிலும் தனித்தே போட்டியிடுமென்ற அதிரடி அறிவிப்பை பிர்தமர் ரணில் வெளியிட்டுள்ளார்.

இந்த நிலையில் மைத்திரிபால சிறிசேன தனித்து விடப்படும் பரிதாப நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார். ஐ.தே.கட்சி அரசைக் கவிழ்த்து மஹிந்தவை பிரதமராக்க முயன்ற நிலையில் அவர் ரணிலால் மட்டுமின்றி மஹிந்தவாலும் கைவிடப்பட்டுள்ளார். இந்த நிலையிலேயே திருப்பதி ஆண்டவனிடம் ஆலோசனை பெற்று அடுத்த கட்ட நடவடிக்கையை மேற்கொள்ளப் போகிறார் போல் தெரிகிறது.

அரசனை நம்பி புருஷனைக் கைவிட,
இப்போ அரசனுமில்லை
புருஷனுமில்லை

# நில ஆக்கிரமிப்பில் களமிறங்கும் தெங்கு அபிவிருத்திச் சபை

வடக்கு, கிழக்கில் தமிழ் மக்களுக்கு உரிமையான காணிகளை அபகரிப்பதில் மகாவலி அபிவிருத்தி சபை, தொல்பொருள் திணைக்களம், வனபரிபாலனத் திணைக்களம், சுற்றுச் சூழல் பாதுகாப்புத் திணைக்களம் என்பன பல சாதனைகளை நிலை நாட்டியுள்ளன.

தமிழ் மக்களின் விவசாய நிலங்களையும், குடியிருப்புக்களையும் ஆக்கிரமிப்பதிலும் பாரம்பரிய இந்து ஆலயம் உள்ள இடங்களில் பௌத்த விகாரைகளை அமைப்பதிலும் அவை தீவிரம் காட்டி வருகின்றன.

தற்சமயம் அவற்றுக்கு நிகராக தெங்கு அபிவிருத்தி சபையும் தமிழ் மக்களின் காணிகளை அபகரிக்க ஆரம்பித்துள்ளது. 1989ம் ஆண்டு காணி மறு சீரமைப்பு ஆணைக்குழுவால் 101 தமிழ் குடும்பங்களுக்கு தலா ஒரு ஏக்கர் வீதம் பளை கரந்தாய் பகுதியில் காணிகள் வழங்கப்பட்டன. அங்கு மக்கள் வீடுகளை அமைத்து கிணறுகளை வெட்டி குடியிருந்தனர்.

போரின் போது இடம்பெயர்ந்த மக்கள் மீளக்குடியேற வந்த போது தெங்கு அபிவிருத்தி சபையினர் அவை தமக்குச் சொந்தமான காணிகள் எனச் சொல்லி அவர்களை மீள்குடியேற அனுமதிக்கவில்லை.

மக்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்ததை அடுத்து அது மேற்கொண்ட விசாரணையின் பின் அக்காணிகளில் தெங்கு அபிவிருத்திச் சபைக்கு எந்த வித உரிமையுமில்லை எனத் தீர்ப்பு வழங்கியது. ஆனாலும் தெங்கு அபிவிருத்தி சபை மக்களை மீளக்குடியேற அனுமதிக்கவில்லை. மக்கள் பல முறைப்பாடுகளைச் செய்தும், முயற்சிகளை மேற்கொண்டும் மீள் குடியேற முயன்ற போதும் அவர்கள் அனுமதிக்கப்படவில்லை. தற்சமயம் எவரையும் எதிர்பாராமலே மக்கள் தங்கள் காணிகளில் தாங்களாகவே குடியேறிவிட்டனர்.

சகல அரச திணைக்களங்களினதும் அதிகார பீடங்கள் இனவாத சக்திகளால் நிரப்பப்பட்டுள்ளன. அவை என்னென்ன வழிகளில் தமிழ் மக்களின் உரிமைகளைப் பறிக்க முடியுமோ அத்தனை வழிகளிலும் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். ஆட்சியாளர்களின் இன ஒடுக்கல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். ஆட்சியாளர்களின் இன ஒடுக்கல் நடவடிக்கைகளை நிறைவேற்றுவதில் அரச திணைக்களங்களும் கச்சை கட்டிக் கொண்டு இறங்கியுள்ளனர் என்பதே உண்மை.

தாய் ஐந்தடி பாய்ந்தால்
குட்டி ஆறடி பாயுமாம்

# வடக்கில் மேலும் 43 இடங்களை சுவீகரிக்க படையினர் முயற்சி

அண்மையில் இடம் பெற்ற யாழ்ப்பாணம் அபிவிருத்திச் சபை கூட்டத்தின் போது அரச அதிபர் யாழ். மாவட்டத்தில் 8,479 ஏக்கர் படையினரால் சுவீகரிக்கப்பட்டன என்றும், 71,138 ஏக்கர் விடுவிக்கப்பட்டு விட்டதாகவும் இன்னும் 13,497 ஏக்கர் விடுவிக்கப்பட வேண்டியுள்ளதாகவும் அறிக்கை சமர்ப்பித்தார்.

ஏற்கனவே அபகரித்து வைத்துள்ள தமிழ் மக்களின் காணிகளுக்கு மேலதிகமாக 43 இடங்களை சுவீகரிக்க படையினர் முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர் என்றும் அங்கு மக்கள் பிரதிநிதிகளால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இதில் கீரிமலை நகுலேஸ்வர ஆலயக் காணி சீமெந்து தொழிற்சாலைச் சுற்றாடலில் உள்ள மக்கள் குடியிருப்புக் காணிகள் பலாலி விமான ஓடுதளத்துக்கு அருகில் உள்ள காணிகள் என்பன உள்ளடங்குவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜவர்த்தன இராணுவத்தினர் காணிகளை விட்டு வெளியேறப்போவதில்லை எனவும் மக்களுக்கு வேறு இடங்களில் காணி வழங்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார். அரசாங்கம் கட்டளையிட்டாலும் நாம் மக்களின் காணிகளை விட்டு வெளியேறப்போவதில்லையென இராணுவத் தரப்பு உறுதிபடத் தெரிவித்துள்ளது.

இப்படியான அறிவிப்புகள் மூலம் காணிகளை விட்டுப் படையினர் வெளியேறப் போவதில்லையென்பதும் புதிதாகக் காணிகள் சுவீகரிக்கப்படும் என்பதும் தெரிவிக்கப்பட்டுள்ளது. என்பதை கவனத்தில் எடுக்க வேண்டும்


இடது கையால் கொடுப்பது போல் நீட்டிய
நாச்சியார் வலது கையால் இடுப்புத் துணியையும்
உருவினாளாம்

# கடந்தவார சமூக வலைத்தளங்களில்





































புதுவிதி
PUTHU VITHI

தொடர்புக்கு:
ஆசிரிய பீடம் : 021 493 7777
விநியோகம் : 021 493 2222
விளம்பரம் : 021 493 1111

107, இராசவீதி,
கோப்பாய் - திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
puthuvithi@gmail.com

## 'தர்பார்' கேவலங்கள்

'வடக்கு காணிகளில் இருந்து ஒருபோதும் இராணுவத்தினர் வெளியேறப் போவதில்லை. அந்த மக்களுக்கு வேறு இடங்களில் காணி வழங்கலாம்" எனத் திருவாய் மலர்ந்திருக்கிறார் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்த்தன. இதுதவிர, வடக்கில் மேலும் மக்களின் காணிகளை இராணுவத்திற்காக சுவீகரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

அரசின் இந்நடவடிக்கை தமிழ் மக்களிடையே - காணி விடுவிப்புக்காக வருடக் கணக்கில் அகிம்சைப் போராட்டம் நடத்தும் மக்களிடையே கடும் அதிருப்தியையும் விரக்தியையும் ஏற்படுத்தியுள்ளது. தமிழ் மக்கள் மத்தி யில் ஏற்பட்டுள்ள கவலலை - அதிருப்தி - விரக்தி பற்றி பேரினவாத தர்பார் நடத்துபவர்கள் ஒருபோதும் கவலைப்பட்டதோ அல்லது அவர்களுக்கு கருணை காட்டியதோ இல்லை என்பதே கடந்த கால வரலாறு. இந்த வரலாற்றை இப்போதும் அவர்கள் அடியொற்றுவதில் எவ்வித வியப்பும் இல்லை.

சர்வதேசத்துக்கு ஒரு முகமும் தென்னிலங்கை மக்களுக்கு ஒரு முகமும் தமிழ் மக்களுக்கு இன்னொரு முகமும் எனக் காட்டி தர்பார் நடத்தும் இவர்களின் அரசியல் கேவலங்களும் தமிழ் மக்களுக்கு புதியதுமில்லை. ஆட்சி மாற்றத்துக்காக வாக்குப் பிச்சை கேட்டபோது, வடக்கில் இருந்து இராணுவம் வெளியேற்றப்படும் என்ற உறுதிமொழியை அளித்திருந்தார்கள். ஆட்சிக் கட்டிலில் அமர்ந்ததும், வழக்கம் போல தங்கள் வாக்குறுதிகளை காற்றில் பறக்க விட்டார்கள். இது பேரினவாதிகளின் நெடுநாளைய் பழக்கம்தான்.

இப்போது வடக்கில் இருந்து இராணுவம் வெளியேறாது. மக்களுக்கு வேறு இடங்களில் காணி வழங்கப்படும் எனக் கூறுகிறது பேரினவாத தர்பார். தமிழரின் வளம் நிறைந்த பூமியைக் கைப்பற்றி, மக்களை ஏதிலிகளாக்கியவர்கள் இப்போது அந்த மண்ணின் வளங்களைப் பயன்படுத்தி விவசாயம், மேய்ச்சல் மற்றும் பல வேலைத்திட்டங்களில் ஈடுபட்டு பொருளீட்டிக் கொள்ள, நிலத்துக்கு உரியவர்களான மக்களை எந்த வளமும் வசதிகளும் இல்லாத பகுதிகளில் கொண்டு சென்று தள்ளிவிட திட்டம் போடுகிறது இந்த பேரினவாத தர்பார்.

தமிழர் தாயகத்தின் பல வளம்மிக்க பகுதிகளையும் இவ்வாறுதான் பேரினவாத தர்பாரின், ஆயுத சக்திகள் கூறுபோட்டு விழுங்கிக் கொண்டுள்ளன. சொந்த இடத்தின் மக்களை எப்போதும் ஏதிலிகளாக்குவதில் பேரினவாத தர்பார்காரர்களுக்கு எப்போதும் அலாதிப் பிரியம் உள்ளது. தங்களது வழமையான உத்தியுடன் இப்போதும் நடக்கிறார்கள். இந்நிலையில், இந்தத் தர்பாரின் இன்னொரு அமைச்சரான ரவி கருணாநாயக்க, 'இலங்கையை ஒற்றுமையாக வைத்திருக்கவே இனப்பிரச்சினை தீர்வைத் தாமதிக்கிறோம்" என்று புதுப் புரளியைக் கிளப்பி விட்டிருக்கிறார்.

தமிழ் மக்கள் ஒருபோதும், தெற்கில் அமையும் எந்தப் பேரினவாத தர்பாரையும் நம்பவில்லை. தெற்கில் தர்பார் நடத்துபவர்கள் இவ்வாறான கேவல அரசியல் நுட்பங்களை நிறுத்த வேண்டும். மக்கள் விருப்புக்காகவே ஆட்சியே தவிர ஆட்சியாளர்களின் விருப்புக்காக மக்கள் அல்ல என்பதிலும் தெளிவுற வேண்டும்.

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'

# ஈழத்தின் இறுதிப் போர் சாட்சியாய்...! 47

- வன்னிமகள்
எஸ்.கே.சஞ்சிகா

தேங்காய்க்காக ஓட்டோவைக் கொடுத்து தேங்காய் வாங்கிய சம்பவமும் இறுதிப் போர்க் காலத்தில் பதிவாகிற்று. இருப்பிட வசதியின்மை, உணவில்லாமை, குண்டுகளில் இருந்து உயிரைக் காக்கும் போராட்டம் என மனவிரக்தியும் அலைச்சலும் புகைச்சலும் நிறைந்த வாழ்வாக கடைசிப் போர்க் காலமிருந்தது.

ஓடியோடிக் களைத்துப் பசித்த வயிறோடு தண்ணீரை ஆகாரமாக்கி மயங்கித் துயின்றெழுந்தவர் வரலாற்றைக் கொண்டது இறுதிப்போர். இதில் கருகிப்போனவர்கள் ஆயிரம் ஆயிரம். யாரிடமும் யாரும் கேட்டு வாங்க முடியாத கௌரவப் பொருளாக உணவு இருந்தது. இந்த நிலையில் உணவின்றி பதுங்குகுழிக்குள் இறந்து போனவர்கள் பலர். நன்றாக சூரியன் மறைந்த போது மேற்கொண்டு போக முடியாத களைப்பில் அன்று வலைஞர்மட மாதா கோவிலடியில் கொண்டு சென்றவற்றை பங்கிட்டு உண்டு, அந்தக் களைப்பில் ஓர் மரத்தின் கீழே உறங்கினோம்.

பனை வடலியின் சிறிய ஓலைகள் குடை பிடித்திருந்தாலும் நெருப்பாக சூரியன் சுட்டெரித்துக் கொண்டிருந்தான். சுட்டெரித்த நினைவுகள் மட்டும் சுழன்று சுழன்று மனதை தின்று கொண்டிருந்தது. என்னதான் இருந்தாலும் சண்டை பிடித்த உறவுகளிடமே சாப்பாடு வாங்கி உண்ணாத மானஸ்தர்களாய் வாழ்ந்த இனம் இன்று ஏதிலிகளாகி எதிரி என நினைத்துப் போரிட்டவர்களிடமே உணவேந்தி உண்ணும் கொடிய சாபத்தை தந்த நிலையை என்னவென்பது?

மாலை நேரம்தான். ஆனாலும் வெட்டவெளி என்பதால் வெப்பம் மண்டையை பிளந்து ஊடுருவ வழி தேடிக்கொண்டிருந்தது.

'அக்கா.... அக்கா... என்ற ஆர்ப்பரிப்போடு சந்தோஸ் ஓடி வந்தான்.

'அக்கா சனங்களை பஸ்ல ஏத்தப் போறாங்களாம். சனம் வரிசைகட்டுது. வெளிக்கிடுங்கோ"

'அத்தான் எழும்பி மெல்லமா போற வழியை பார்ப்பம்", அவன் இரண்டு நாட்களிலே எனது கூடப்பிறந்த தம்பியாகவே ஒட்டிக்கொண்டான்.

சந்தோஸ் தனித்திருந்ததால் அவனுக்கு பாதுகாப்பாக ஒரு குடும்பம் தேவைப்பட்டது. எங்கள் குடும்பம் சின்னக் குடும்பமாக இருந்ததால் அவன் எனக்கு தம்பியாகி பயணிப்பது பாதுகாப்பு எனக் கருதினான். அது எங்களுக்கு ஒருவித பய உணர்வைத் தந்தாலும் அவனுடைய உயிரைக் காப்பாற்ற உதவுவது நல்லதென நினைத்தேன். ஆனாலும் ஒட்ட வழிக்கப்பட்ட அவனது தலையலங்காரம் நிச்சயமாக புலி உறுப்பினர் என்பதை எதிரிக்கு காட்டப்போகிறது என்ற கலக்கம் சந்தோஸிடமும் இருந்தது.

எல்லோரையும் போலவே வரிசை வரிசையாக பெரும் படையணியாக நின்றோம். இப்படி மாணவர் படைப்பயிற்சி, கிராமியப் படைப்பயிற்சி, எல்லைப் படைப் பயிற்சி, களமுனைப் பயிற்சி என கம்பீரமாக நின்ற மனிதர்களே நாம். ஆனால் இப்போது நிற்கும் வரிசையில் கம்பீரம் இல்லை. களைத்த மனிதர்களாக, கறுத்த மனிதர்களாக, வஞ்சிக்கப்பட்ட மனிதர்களாக, வாழ்வு நிலையை தொலைத்த மனிதர்களாக, இருப்பைப் பறிகொடுத்தவர்களாக, இதயமும் எலும்புகளுமே மிஞ்சிய எலும்பு மனிதர்களாக, இனி என்ன நடக்குமோ? என்ற ஏக்கம் நிறைந்த மனிதர்களாக அங்கு வரிசை வரிசையாக நின்றிருந்தோம்.

சந்தோஸ் ஏற்கனவே யாரிடமோ இடம் கேட்டு இருந்த காரணத்தால் அந்த இடத்துக்கு கூட்டிச்சென்று முன்னால் இடம்பிடித்துத் தந்தான். முன்னுக்குப் போனாலே முரண்டு பிடித்து அடிபட்டு புறுபுறுக்கும் மனிதர்கள் முன்னுக்கு நாம் இடம் பிடித்ததுக்கு எந்தவித மறுப்பும் தெரிவிக்கவில்லை. கைக்குழந்தையோடு நின்றாலும் இரங்காத மனிதர்களால் முன்னுக்கு விட எப்படி மனம் வந்தது? என சிந்தித்துப் பார்த்தால், அடுத்து என்ன நடக்குமோ என்ற பயத்தால் ஏற்பட்ட ஒருவித சுயநலமே என்பதைப் புரிந்து கொள்ள முடிந்தது. தமிழர்களிடம் பெரும்பாலும் ஆபத்துக் காலத்தில் பூக்கும் அருவருப்பான பூ சுயநலம்.

இரவு ஏழு மணி எங்களை முள்ளுக்கம்பி கடந்து வருமாறு பணிக்கப்பட்டோம். நான் , எனது பிள்ளைகள், கணவர், சந்தோஸ், தோழி ,தோழியின் மகன் ஆகியோரை உள்ளே எடுத்தபின் வரிசையை நிறுத்திக் கொண்டார்கள் இராணுவத்தினர். கணவரின் அத்தானும், தோழியின் மாமியும் முள்ளுக்கம்பி கடந்து வர அனுமதிக்கப்படவில்லை. விட்டு விட்டு சென்றால் அங்குமிங்குமாக பிரிந்து போய் விடுவோம். ஆதலால் அவர்கள் வரும் வரை காத்திருந்தோம்.

அங்கு நிறைய இராணுவம் குவிந்திருந்தது. நாங்கள் அவர்களைப் பார்த்து பேருந்தில் ஏறாமல் காத்திருப்பதால் விசாரணைக்கு உட்படுத்தப்படலாம். கணவரின் அத்தானை விட தோழியின் மாமியே எனக்கு முக்கியமாகத் தெரிந்தார். வாழ்நாளில் மறக்க முடியாத மனுசியாக அவர் இருந்தார். களைத்த முகம் அறிந்து கருணையோடு நிறைந்த தாய்ப் பாசத்தோடு தழுவிய கரங்களைக் கொண்டவர். என்னிடம் அசட்டுத் துணிவிற்கு எப்போதும் பஞ்சம் இருப்பதில்லை.

குழந்தையையும் மார்போடு அள்ளி அணைத்துக்கொண்டு மீண்டும் இராணுவத்தினர் அருகில் சென்றேன். இராணுவத்தின் இடுப்பளவிற்கே நானிருந்தேன். அவனிடம் கணவரின் அத்தானை எனது அப்பா எனவும் தோழியின் மாமியை அம்மா எனவும் கூறி அவர்களை என்னுடன் விடுமாறு கெஞ்சிக் கொண்டிருந்தேன். தோழியின் மாமியோ 'சஞ்சி நாங்கள் எப்பிடியும் வருவம். நீ போம்மா. " என அழுதழுது கலைத்துக் கொண்டிருந்தார்.

(சாட்சியம் நீளும்)

# வன அழிப்பை மறைக்க மர நடுகை



■ யோகநாராயணன்

தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு ஏப்ரல் 15 ஆம் நாளை மர நடுகை நாளாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பிரகடனம் செய்ததுடன், இலங்கை மக்கள் அனைவரும் அன்று ஒவ்வொரு மரக் கன்றாவது நடவேண்டுமெனக் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

இதன் உள்தாக்கம் எப்படியிருந்த போதிலும் கூட மரநடுகைக்கு நாட்டின் தலைவர் முக்கியத்துவம் கொடுத்திருப்பது வரவேற்கக் கூடியது என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. நாடு போதிய மழை வீழ்ச்சியைப் பெறவும், காற்றில் கரியமில வாயு அதிகரித்து வெப்பநிலை உயர்வதைத் தடுக்கவும் வனவளம் முக்கியமானதாகும் அது மட்டுமின்றி வனங்களில் வாழும் மிருகங்கள் முதல் பூச்சி புழுவினங்கள் வரை உயிர்வாழ்வதற்கும், இனப்பெருக்கம் செய்யவும் வளமான வளங்களும், அவற்றில் ஆங்காங்கே காணப்படும் குட்டை,குளங்களும் அவசியமானவையாகும்.

இந்தியாவில் உள்ள உத்தரப் பிரதேசத்தில் உள்ள ஒரு கிராமத்தில் ஒவ்வொரு திருமணங்கள் இடம் பெறும் போதும் குழந்தைகள் பிறக்கும் போதும் மரம் நடுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அந்தத் தம்பதியரே அந்த மரத்தைப் பராமரித்து வளர்க்கும் பொறுப்புக்கும் உரியவர்களே.

இதே போன்று இமயமலை அடிவாரத்திலுள்ள பெரும் மழைக்காடுகளை பெரும் அணையொன்றை அமைத்து பிரமசுந்திரா நதியைத் திருப்பவும், தொழிற்சாலைகளை அமைக்கவும் பெரும் திட்டமிட்டமொன்று விடுக்கப்பட்டது. அப்போது சுற்றுச்சூழலியலாளர் அருந்ததி ராய் தலைமையில் அக்காட்டில் வாழும் ஆதிவாசிகள் போராட்டங்களை நடத்தினர். அதையும் மீறிக் காடுகளை அழிக்க முயன்ற போது பெருவாரியான பெண்கள் மரங்களைக் கட்டிப்பிடித்துக் கொண்டு தங்களை வெட்டி விட்டு மரங்களை வெட்டும்படி போராடினார்கள். இறுதியில் அத்திட்டம் கைவிடப்பட்டு காடு அழிவிலிருந்து தப்பியது.

சில வருடங்களின் முன் பெண் எழுத்தாளரும், சுற்றுச்சூழலியலாளருமான மத்தாய்க்கு “சூழல் பாதுகாப்புப் போராட்ட வீராங்கனை என்ற அடிப்படையில் நோபல் பரிசு வழங்கப்பட்டது. இப்படி உலகம் முழுவதுமே ஆதிவாசிகள் முதற் கொண்டு, இலக்கிய வாதிகள், கலைஞர்கள், உட்படப் பல புத்தி ஜீவிகள் சுற்றுச்சூழலைப் பாதுகாக்க பல்வேறு போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

அவ்வகையில் பார்க்கும் போது ஜனாதிபதி மைத்தரிபால சிறிசேனவும் உலகம் முழவதும் உள்ள சூழ்லியல் பாதுகாவலர்களில் ஒருவராக இனம் காண முடியுமா? என்ற கேள்வி எழத்தான் செய்கிறது. இலங்கையில் தொல்பொருள் திணைக்களத்தாலும் மகாவலி அபிவிருத்தி சபையாலும் காடுகள் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்க மறுபுறம் அபிவிருத்தி என்ற பெயரில் பெரும் வனப்பகுதிகள் அந்நிய நிறுவனங்களுக்கு தாரை வார்க்கப்பட்டுள்ளன.

அண்மையில் ஒரு பொது நிகழ்வொன்றின் போது உரையாற்றிய ஜனாதிபதி போர் காலத்தில் வடக்கு, கிழக்கில் வனங்கள் நன்கு பாதுகாக்கப்பட்டன என்றும் போரின் பின்பு 33 வீதமாக இருந்த வனப்பகுதியின் பரப்பளவு 30 வீதமாக சுருங்கி விட்டதெனவும் தெரிவித்திருந்தார். வன்னி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த போது இரணைமடுவின் மேல் கரையில் கரிப்பட்ட முறிப்பு முதல் மணவாளன்பட்ட முறிப்பு வரை தேக்க மரங்கள் நடப்பட்டுப் பராமரிக்கப்பட்டுக் காடு வளர்க்கப்பட்டது. அவ்வாறே ஒட்டுசுட்டான் வெள்ளாமலை தொட்டு முள்ளியவளை மட்டும் கேப்பாப்பிலவிலிருந்து வற்றாப்பளை வரையும் தேக்கம் காடுகள் வளர்க்கப்பட்டன. காடுகளில் மரங்கள், தடிகள் வெட்டுவது முற்றாகவே தடை செய்யப்பட்டிருந்தது. அதேபோன்று மடு காடுகள், பாலைப்பாணி, மூன்று முறிப்புப் பகுதிப் பெருங்காடுகள் மிகவும் இறுக்கமாகப் பாதுகாக்கப்பட்டன.

ஒரு ஆயுத போராட்ட அமைப்பினால் காடுகளை அழிய விடாமல் பாதுகாத்து வளர்க்கவும், புதிய காடுகளை வளர்க்கவும் முடிந்ததென்றால் ஏன் சகல அதிகாரங்களையும் கொண்ட அரசாங்கத்தினால் அது முடியவில்லை. அடிப்படையில் வன அழிப்பில் முன் நின்று செயற்படுபவர்கள் அரசியல்வாதிகள், அரச திணைக்களங்கள், ஆயுதப்படையினர், மதவெறியர்கள் ஆகிய தரப்பினராரும் சுற்றுச்சூழல் பாதுகாப்புத் தொடர்பாக உரத்துக் கொந்தளிக்கும் ஜனாதிபதி அவற்றை கண்டு கொள்வதோ, தடுத்து நிறுத்துவதோ கிடையாது. பல சந்தர்ப்பங்களில் அவற்றுக்கு மறைமுகமாக அனுசரனை வழங்கியுள்ளார் என்றும் கருத வேண்டியுள்ளது.

முறிகண்டியிலிருந்து கொக்காவில் பதினெட்டாம் போர் ஏற்றம் வரை அமைத்துள்ள இரணைமடுக்குளத்தின் நீர் வரத்துப் பகுதியில் 4,000 ஏக்கர் காடுகள் படையினரின் குடும்பங்களைக் குடியேற்றவென அழிக்கப்பட்டன. அங்கு வெட்டப்பட்ட பாலை, முதிரை, மகோகனி போன்ற பெரும் மரங்கள் தென்பகுதிக்கு ஏற்றப்பட்டுச் சில தரப்பினர் இலட்சக்கணக்கில் பணம் பெற்றனர். பல விதமான எதிர்ப்புகளின் பின்பு அத்திட்டம் கைவிடப்பட்டது. ஆனால் வெட்டப்பட்ட காடுகள் அழிக்கப்பட்டவைதான்.

இவ்வாறே ரிசாட் பதியுதீனின் அனுசரணையுடன் முஸ்லிம் மக்களைக் குடியேற்றுவது என்ற பேரில் ஜனாதிபதியின் செயலணியால் விடுதலைப் புலிகளால் முள்ளியவளையில் உருவாக்கப்பட்ட தேக்கம் காடுகள் அழிக்கும் முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டன. ஆனால் மக்களின் தொடர்ச்சியான கடும் எதிர்ப்பு காரணமாக அந்த முயற்சியும் கைவிடப்பட்டது.

வன்னி மக்களின் வீரத்தின் அடையாளமாக பாதுகாக்கப்படும் கற்பூரப்புல் வெளிக் காடுகளும் முஸ்லிம்களின் குடியேற்றம் என்ற பேரில் அழிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதில் ஒரு பகுதி அழிக்கப்பட்ட போதும் மக்களின் பலத்த எதிர்ப்பு காரணமாக உரிய நேரத்தில் அது தடுத்து நிறுத்தப்பட்டடு விட்டது. ஆனால் இம்முயற்சி அரசாங்க ஆதரவுடனேயே மேற்கொள்ளப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

தென்னைமரவாடி குளக் கோட்ட மன்னன் காலத்திலிருந்து அந்த ஆட்சியின் கீழ் உள்ள ஒன்பது வன்னிமைகளில் ஒன்றாக இருந்து வந்துள்ளது. ஆனால் தற்சமயம் தென்னைமரவாடியில் 500 ஏக்கர் தொல்பொருள் திணைக்களத்தின் கீழ் கொண்டு வரப்பட்டு காடுகள் அழிக்கப்பட்டு மூன்று விகாரைகள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றைச் சுற்றி சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டு வருகின்றனர். ஆனால் இது சில ஏக்கருடன் நின்று விடாது என்பதும், பெரும் மழைக்காடுகள் அழிக்கப்பட்டு விரிவிக்கப்படும் என்பதில் சந்தேகம் கொள்ள இடமில்லை.

வவுனியா தெற்கில் 300 ஏக்கர் காடுகள் அழிக்கப்பட்டு ஒரு புத்த பிக்குவின் தலைமையில் கம்பஹா, அம்பாந்தோட்டை, குருநாகல் ஆகிய பகுதிகளிலிருந்து குடியேற்றப்படுகின்றனர். அதாவது தமிழர் தாயகப் பகுதிகளில் காடுகள் விடுதலைப் புலிகளால் பாதுகாக்கப்பட்டது மட்டுமன்றிப் புதிய காடுகளும் உருவாக்கப்பட்டன. ஆனால் இன்று அரசாங்கக் கட்டுப்பாட்டின் கீழ் இப்பகுதிகள் கொண்டு வரப்பட்ட பின் காடுகள் வேகமாக அழிக்கப்பட்டு வருகின்றன.

தொகை தொகையாகக் காடுகளை ஒருபுறம் அழித்துக் கொண்டு ஒவ்வொரு மரங்களாக நடும்படி அறைகூவல் விடுக்கப்படுவது எவ்வளவு தூரம் அப்பட்டமான ஏமாற்று என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். எனவே மரநடுகை இயக்கம் என்பது அடிப்படையில் பெருமளவில் காடுகள் அழிக்கப்படுவதை மறைப்பதற்கான ஒரு நாடகம் என்றே கருதப்பட வேண்டியுள்ளது.

■ தமிழரசன்



# அன்னை இட்ட தீ!

பத்துப் பிள்ளைகளின் தாயாக இருந்த பூபதி பின்னர் அன்னை பூபதியாக அவதாரம் எடுத்து ஈழத் தமிழரின் தாயாகி மரணத்தை அரவணைத்தார். அன்னை பூபதி. நெஞ்சில் பற்றி எரியும் இலட்சிய நெருப்புடன் உணவை ஒறுத்து, நீரை மட்டுமே அருந்தி ஒன்றல்ல, இரண்டல்ல 31 நாள்கள் மெல்ல மெல்ல தன்னை பட்டினித் தீயில் எரித்து சாவைத் தழுவியவள்.

அமைதிப் படையாக வந்த இந்திய இராணுவம் யுத்த சன்னதம் கொண்டு, தமிழர் உரிமைக்காக ஆயுதம் தூக்கிப் புலியான இளைஞர்களை தேடித் தேடி அழிக்க முயன்றது. இதனால் காடுகளை உறைவிடமாக்கிய விடுதலைப் புலிகளோ தம்மை அழிக்க முனைந்த படைகளுக்கு மரண அடி கொடுத்தனர். புலிகளை நெருங்க முடியாத இந்தியப் படைகள் தங்கள் இயலாமையைக் காட்ட அப்பாவி மக்களைப் பகடை யாக்கினர். இந்தியப் படைகளின் கொடூரங்கள் - வன்செயல்கள் - சித்திரவதைகள் - அடக்குமுறைகளால் தமிழர் தாயகத்தின் தெருவெங்கும் ஓலங்களும் - அவலக் குரல்களும் - அழுகுரல்களும் கேட்டன.

இதைப் பொறுக்க மாட்டாமல் மக்கள் சாத்வீகப் போராட்டங்களில் ஈடுபட்டனர். இதில் மட்டக்களப்பு - அம்பாறை அன்னையர் முன்னணி இரு கோரிக்கைகளை முன்வைத்து போராட்டங்களைத் தொடங்கியது. போர் நிறுத்தம் உடன் நடைமுறைக்கு வர வேண்டும், புலிகளுடன் பேச்சு நடத்திப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்பவையே அவை. இவை எதையும் அந்நிய இந்தியப் படை காதில் வாங்கிக் கொள்ளவில்லை. மாறாக அன்னையர் முன்னணியினரை கொழும்புக்கு அழைத்து புலிகளை ஆயுதங்களை ஒப்படைக்கக் கூறுமாறு மிரட்டியது. மிரட்டலுக்கு அடிபணியாத அன்னையர் முன்னணியோ விடுதலைப் புலிகளே தமிழரின் பாதுகாவலர்கள் நீங்கள்தான் பேச்சுக்கு வரவேண்டும் எனக் கூறித் திரும்பினர்.

நிலைமையில் எந்த மாற்றமும் ஏற்படாத நிலையில் சாகும் வரையான உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட அந்த அமைப்பு முடிவு செய்தது. இந்தப் போராட்டத்தில் ஈடுபடப் பலர் முன்வரவே குலுக்கல் முறையில் சாகும் வரையிலான உண்ணாவிரதம் இருப்பவரை தெரிவு செய்வது என முடிவானது. இதன்படி அன்னம்மா டேவிட் தெரிவானார். அவர் பெப்ரவரி 16 ஆம் திகதி உணவு தவிர்ப்புப் போராட்டத்தை அமிர்தகழி மாமங்கேஸ்வர் கோயிலில் (மாமங்கப் பிள்ளையார்) ஆரம்பித்தார்.

அகிம்சைப் போராட்டத்தை உலகறியச் செய்தவர்கள் தாங்களே எனத் தம்மைத் தாமே பெருமையாகப் பீற்றிக் கொள்ளும் இந்தியாவால் எங்கள் அகிம்சையைப் பொறுக்க முடியவில்லை. முன்னதாக தண்ணீர் கூட அருந்தாது தியாக தீபம் திலீபன் (1987 செப்ரெம்பர் 14-26) நடத்திய உணவு ஒறுப்புப் போரின் வெம்மை தாங்காது, மானம் இழந்து உலகின் முன் நிர்வாணமாக நின்ற இந்தியா இந்தப் போராட்டத்தை நடத்தவிடாமல் செய்யப் பெரும் திட்டங்களைத் தீட்டி தடைகளைப் போட்டது. இதற்காக மிகமிகக் கீழ்த் தரமான செய்கைகளில் இறங்கிய இந்தியப் படை அன்னம்மாவின் பிள்ளைகளையும் கணவரையும் கடத்தி மிரட்டியது. தொடர்ந்து உண்ணாவிரதப் பந்தலில் இருந்து அன்னம்மாவை கடத்திச் சென்று "கட்டாயத்தின் பேரிலேயே நான் உண்ணாவிரதம் இருந்தேன்" என்று எழுதி வாங்கியது. இதன் மூலம் எங்களின் அகிம்சைப் போரை அவமானப்படுத்த முனைந்தது.

இந்த நிலையில்தான் ஈழத்தின் பிள்ளைகள் எல்லோருக்காகவும் தன்னை ஆகுதியாக்க முன்வந்தாள் அன்னை பூபதி. "யாருடைய கட்டாயத்தின் பேரிலும் நான் உண்ணாவிரதம் இருக்கவில்லை. நான் மயக்கமடைந்தாலோ சுயநினைவை இழந்தாலோ எனது கணவரோ அல்லது பிள்ளைகளோ என்னை வைத்தியசாலையில் சேர்ப்பிக்கக்கூடாது."

## யார் இந்த அன்னை பூபதி?

அன்னை பூபதி என உலகினரால் அறியப்பட்டவரின் முழுப்பெயர் கணபதிப்பிள்ளை பூபதி. மட்டக்களப்பு - கிரான் என்ற ஊரில் 1932 நவம்பர் 3 ஆம் திகதி பிறந்தவர். திருமணத்தின் பின்னர் நாவற்கேணி என்ற ஊரில் வசித்தவர்.

விடுதலைப் புலிகள் போராட்ட அமைப்பாக இயங்க ஆரம்பித்த நாள்களில் நாவற்கேணி கிராமம் அவர்களின் மறைவிடங்களில் முக்கியமாக இருந்தது. அச்சமயத்தில் விடுதலைப் புலி வீரர்களுக்கு உணவு, பாதுகாப்பு அளித்தவர்களில் பூபதியம்மாவும் ஒருவர்.

பூபதியம்மாவுக்கு 10 பிள்ளைகள், இவர்களில் இருவரை இராணுவம் பிடித்துச் சென்றது. இவர்கள் பற்றிய தகவல் பின்னர் கிடைக்கவில்லை. ஒரு மகன் 1990 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் அமைப்பில் கண்ணதாசன் என்ற பெயரில் தன்னை போராளியாக இணைத்துக் கொண்டார். ஏனையோர் திருமண பந்தத்தில் இணைந்திருந்தனர்.

மட்டக்களப்பு - அம்பாறை அன்னையர் முன்னணி அமைப்பின் முக்கிய உறுப்பினரான இவர், அமைப்பால் முன்னெடுக்கப்பட்ட அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்றதுடன் பல உதவிகளையும் வழங்கியவர். அன்னையர் முன்னணி நடத்திய உணவு ஒறுப்புப் போராட்டத்தை இந்திய - இலங்கை அரசுகளின் மிரட்டல்கள் - அச்சுறுத்தல்களால் குழம்ப, 1988 மார்ச் 19 ஆம் நாள் தொடக்கம் உணவைத் தவிர்த்து தண்ணிரை மட்டும் அருந்தி போராட்டத்தில் ஈடுபட்டார். இவரது கோரிக்கைகளை இந்திய அரசு ஏற்கவில்லை. சரியாக ஒரு மாதம் கழித்து 1988 ஏப்ரல் 19 ஆம் நாள் மரணத்தைத் தழுவினார்.

என்று கடிதம் எழுதி வைத்துவிட்டு, மார்ச் 19 ஆம் நாள் அன்னம்மா டேவிட் வேள்வி வளர்த்த இடத்திலேயே தனது வேள்வித் தீயை மூட்டினாள். அந்த வேள்வித் தீயின் வெம்மையை இந்திய வல்லாதிக்காரர்களால் தாங்க முடிய வில்லை. சாம, தான, தண்ட, பேதங்களை கையாண்டது ஆனாலும் அன்னையின் போராட்டத்தை அவர்களால் எதுவும் செய்ய முடியவில்லை.


மகாத்மா என்றும் அகிம்சா மூர்த்தி என்றும் காந்தியைக் கொண்டாடும் இந்தியர்கள் தங்கள் நாட்டின் தேசபிதாவாகவும் அவரேயே இன்றும் போற்றுகின்றனர். அவரின் அகிம்சைப் போராட்டமே தங்களுக்கு பிரித்தானியர்களிடம் இருந்து சுதந்திரத்தைப் பெற்றுத் தந்தது என்று கூறுகிறார்கள். அந்த காந்தியின் வழி வந்தவர்களால் எங்கள் அண்ணன் திலீபன், தாய் பூபதி தொடுத்த அகிம்சைப் போரை சகிக்க முடியவில்லை. மாறாக இந்தியர்களுக்கு பிரித்தானியர்கள் இழைத்த கொடுமைகள் - கொடூரங்களையும் விடப் பல மடங்கு அதிகமான கொடூரங்களையும் - அகிம்சைப் போராட்டம் நடத்தியோ ருக்கு எதிராகவும் மக்கள் மீதும் கட்டவிழ்த்து விட்டனர். தன் பிள்ளைகளின் நல் வாழ்வே தன் வாழ்வு என எண்ணி தியாகத் தீயில் இறங்கிய அன்னையை அந்தத் துரும்பர்களால் என்ன செய்யமுடியும். முயன்று பார்த்தார்கள் முடியவில்லை.

அன்னையின் அகிம்சைப் போராட்டத்தின் சக்தி நாளுக்கு நாள் பெருகவே, காந்தியின் குரங்கு பொம்மைகள் போன்று கண், காது, வாய் பொத்தி எதுவும் தெரியாதவர்களாக நின்றார்கள் அந்தக் கயவர்கள். 31 நாள்கள் தன்னை எரித்த அந்தத் தாய் ஏப்ரல் 19 ஆம் நாள் ஈழத் தமிழரின் விடிவுக்காக தன்னை ஆகுதியாக்கினாள். உலகின் முன் மீண்டும் அம்மணமாக நின்றது இந்தியா. ஆனால் அதற்குத்தான் கூச்சம் - வெட்கம் - முதுகெலும்பு எதுவும் இல்லையே. பத்துப் பிள்ளைகளின் அன்னை ஈழத்தமிழரின் தாயாகி இறந்தவளின் இறுதிக்கிரியைகளைக்கூட செய்யவிடாது தடுக்க ஊரடங்கு சட்டம் போட்டது. அன்னை இட்ட புரட்சித் தீ அணைந்து விடுமா? என்ன அன்னையின் போராட்டத்தால் எழுச்சி கண்ட மக்கள் சுமார் ஐயாயிரத்துக்கும் அதிகமானோர் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

இதன் பின்னர் போரில் எழுச்சி கண்டனர் புலிகள். இந்தியாவின் கர்வத்தை அடக்கினர். புலிகளுடனான போரில் வீரமிழந்து கோழைகளாக உலகின் முன்னால் அவமானப்பட்டுப் பின்னர் நாடு திரும்பின இந்தியப் படைகள். தமிழர் தாயகம் மீண்டும் புலிகள் வசமாகின. தலைவர் பிரபாகரன் அன்னை பூபதியின் தியாகத்தை மதித்து நாட்டுப்பற்றாளர் விருது வழங்கிக் கௌரவித்தார். அதுமட்டுமல்ல செய்தற்கரிய சாதனையை செய்த அந்தத் தாயின் நினைவு நாளையே நாட்டுப்பற்றாளர் தினமாகவும் அறிவித்தார்.

விடுதலைப் புலிகளின் காலத்தில் தமிழர் தாயகம் எங்கும் அன்னை பூபதியின் நினைவுநாள் பேரெழுச்சியுடன் கடைப்பிடிக்கப்பட்டது. தெருக்கள் தோறும் பந்தல்கள் அமைத்து அன்னை பூபதியின் உருவப்படம் வைத்து, எழுச்சிப் பாடல்களை ஒலிபரப்பு செய்வது தமிழரின் வழமையாகிப் போனது. அன்னையின் நினைவாக விடுதலைப் புலிகளின் கலை, பண்பாட்டுக் கழகம் "தாயகத் தாய்" என்ற ஒலிப் பேழையையும் வெளியிட்டிருந்தனர்.

# தேடும் கண்கள்



சாம்பல் கொக்கு
இடம் : யாழ்ப்பாணம்
படம் : சமன் அபேநாயக்க



ஆசியக் குயில்
இடம்:முள்ளியவளை
படம் : ம.சாந்தமேனன்



## தூக்கணாங் குருவி

ஆங்கிலம்: Weaver Bird
உயிரியல்: Ploceus philippinus

தூக்கணாங் குருவிகள் அவற்றின் கூடு, கூடமைக்கும் நுட்பத்திற்குப் பெயர் போனவை. இலைகளின் நரம்பு நார்களை தெரிந்தெடுத்து இக்குருவிகள் தங்களுக்கான கூடுகளை பின்னி தொங்கும் கூடுகளை அமைக்கின்றன.

கின்னகம், சிதகம், தூதுணம், மஞ்சள் சிட்டு எனப் பல பெயர்களால் அழைக்கப்படுகின்றது. ஆணும் பெண்ணும் இணைந்து கூடு கட்டும்.

ஊர்க்குருவி வகையைச் சேர்ந்த இவை, வயல்வெளி, பற்றைகளில் கூட்டமாக வாழும். வெண்பழுப்பு, கடும் பழுப்பு நிறங்களைக் கொண்ட இந்தப் பறவைகளில் ஆணின் மார்பிலும் தலையிலும் மஞ்சள் நிறம் காணப்படும்.


கூடுகளை அமைத்ததும் இந்தப் பறவைகள் மின்மினிப் பூச்சியை பிடித்துவந்து கூட்டில் ஒட்டி வைத்து கூட்டை அழகுபடுத்தும்.

புல், அரிசி, சோளம் திணை தானிய வகைகளையும் வெட்டுக்கிளி, பூச்சிகள், கறையான், சிலந்தி, சிறு தவளைகள், சிறிய நத்தைகள், மயிர்கொட்டி, வண்ணத்துப் பூச்சிகளையும் உணவாகக் கொள்கின்றன.


தனது ஆண் துணை இறந்துவிட்டால் பெண் பறவையும் இறந்துவிடும். சங்க இலக்கியங்களில் தூக்கணாங் குருவிக்கு மிகச்சிறப்பான இடம் வழங்கப்பட்டுள்ளன.

இலங்கை, இந்தியா உள்ளிட்ட தென்னாசியா, தென்கிழக்காசியா முழுவதும் பரவி வாழ்கின்றன.





யானை
வைல்ட் ஸ்ரீலங்கா
படம்: சஜித் சாமேந்திர



மயில்
வைல்ட் ஸ்ரீலங்கா
படம் : ஜெயதீஸ்

# வாரபலன்

### மேடம்
சந்தோஷமான காலமிது. உங்களின் கோரிக்கைகள் நிறைவேறும். தேவைகளுக்கு ஏற்ற செலவுகளைச் செய்வீர்கள். தொழிலில் எதிர்பார்த்த முன்னேற்றம் தென்படும். ஆன்மிக தர்ம காரியங்களில் ஈடுபடுவீர்கள். உத்தியோகஸ்தர்களுக்கு பதவி உயர்வு பெறும் வாய்ப்பு உண்டு.

### ரிஷபம்
பொறுமையுடன் செயல்பட வேண்டிய காலமிது. ஆன்மிகச் சிந்தனைகள் தோன்றி நம்பிக்கைகள் பலப்படும். வியாபாரிகள் கணக்கு வழக்குகளில் கவனமாக இருக்கவும். விவசாயிகள் புதிய நிலங்களை குத்தகைக்கு எடுக்க வேண்டாம். கலைத்துறையினருக்கு நல்ல வருமானம் கிடைக்கும்.

### மிதுனம்
பொருளாதார வளம் சிறப்பாக இருக்கும். வெற்றிகள் குவியும். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். கொடுத்த வாக்கை எப்பாடுபட்டாவது காப்பாற்றி விடுவீர்கள். உத்தியோகஸ்தர்களின் கோரிக்கைகள் நிறை வேறும். வியாபாரிகளுக்கு இது லாபகரமான காலம்.

### கடகம்
பொருளாதார சூழல் திருப்திகரமாக இருக்கும். குடும்பத்தில் குதூகலம் நிறைந்திருக்கும். உடன்பிறந்தோரால் நன்மையடைவீர்கள். எதிரிகளும் நேசக்கரம் நீட்டுவர். வாகன யோகம் உண்டாகும். சுபச் செய்திகளைக் கேட்பீர்கள்.

### சிம்மம்
சுப நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு இது சரியான நேரம். எதிர்பார்த்த பொருளாதார வளர்ச்சி ஏற்படும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றியைத் தரும். உத்தியோகஸ்தர்கள் இடையூறுகளைச் சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள்.

### கன்னி
குடும்பத்தில் சந்தோஷம் நிறையும். உங்கள் ஆசைகள் ஒவ்வொன்றாக நிறைவேறும். உங்கள் உழைப்பு உயர்ந்த நிலையை தேடித் தரும். தேக ஆரோக்கியம் நன்றாக இருக்கும். உத்தியோகஸ்தர்களுக்கு உழைப்புக்கேற்ற ஊதியம் கிடைக்கும்.

### துலாம்
எதையும் தைரியத்துடனும் ஆர்வத்துடனும் செய்து முடிப்பீர்கள். தொழிலில் ஸ்திரத் தன்மை உண்டாகும். உற்றார் உறவினர்கள் ஆதரவுக்கரம் நீட்டுவர். வழக்குகள் சாதகமாக முடியும். உடன் பிறந்தோர் வழியில் நன்மை உண்டாகும்.

### விருச்சிகம்
குடும்பத்தில் மகிழ்ச்சி தாண்டவமாடும். எடுத்த காரியங்களை துணிச்சலுடன் நடத்தி முடிப்பீர்கள். பயணங்களால் நன்மை உண்டு. சிறு தொல்லை கொடுத்தவர்கள் அடங்கி விடுவார்கள். அதிக யோசனைகள் செய்வதைத் தவிர்க்கவும்.

### தனுசு
பொருளாதாரச் சூழல் சிறப்பாக இருக்கும். எந்த செயலிலும் உங்கள் தனித்தன்மை வெளிப்படும். எதிரிகள் பலம் குறையும். உடல்நலத்தில் கவனமாக இருக்கவும். பயணங்களால் அனுகூலங்களைப் பெறுவீர்கள். உத்தியோகஸ்தருக்கு உயர் பதவிகள் தேடி வரும்.

### மகரம்
அளவுக்கு மீறிய யோசனைகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். பயணங்கள் நலம் தரும். உடல் ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவீர்கள். உத்தியோகஸ்தர்களுக்குச் சக ஊழியர்களின் ஆதரவும் அன்பும் இருக்கும். அரசியல்வாதிகளுக்கு பெயரும் புகழும் அதிகரிக்கும்.

### கும்பம்
செய்யும் செயல்களில் முன்னேற்றம் தென்படும். உறவினர்களால் நன்மை அடைவீர்கள். வழக்குகள் முடிவுக்கு வரும். உடல் ஆரோக்கியம் சற்று பாதிக்கப்படலாம். உத்தியோகஸ்தர்கள் சிந்தனைகளுக்குச் செயல்வடிவம் கொடுக்க நினைப்பீர்கள்.

### மீனம்
சற்று செலவுகள் அதிகரிக்கும். மனதில் ஏற்படும் கவலைகள் இடையூறுகளை ஏற்படுத்தும். உடல் ஆரோக்கியம் சுமா ராக இருக்கும். எல்லோரையும் அனுசரித்துச் செல்லவும். உறவினர்கள் உதவி செய்வார்கள். பெண்கள் உடல்நலத்தில் கவனமாக இருக்கவும்.




ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி அனுசரணையில் யுனிசெப் மற்றும் ஒபர் சிலோன் நிறுவனத்தின் வழிகாட்டலில் சி.விமல்ராஜ் இயக்கத்திலும், சசிகரன் யோவின் ஒளிப்பதிவு மற்றும் ஒளித்தொகுப்பிலும், சிவா பத்மஜனின் இசையிலும் உருவாகிய "காக்கை குஞ்சுகள்." குறுந்திரைப்பட வெளியீட்டு விழா வருகின்ற 25.04.2019 வியாழக்கிழமை மாலை 2.30 மணிக்கு யாழ்ப்பாணம் ராஜா திரையரங்கில் (ராஜா 02இல்) நடைபெறவுள்ளது. அனுமதி இலவசம்.



கிளிநொச்சி - பெரிய பரந்தன் கிராம மக்கள் புதியதாக அமைக்கப்படவிருக்கும் மதுபான சாலைக்கு எதிராகக் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.



வவுனியா - கந்தபுரம் மக்களுக்குப் புது வருடத்தை முன்னிட்டு மாங்கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டு மர நடுகை ஊக்குவிக்கப்பட்டது.

## 'ஈழத்தின் தமிழிசை' அரங்கேற்று விழா


சங்கப் புலவர் ஈழத்துப் பூதந்தேவனாரில் இருந்து இற்றை வரை இசைபடக் கவிபுனைந்த ஈழத்துக் கவிராயர்களின் பாடல்களில் நூறு பாடல்கள் தெரிவு செய்யப்பட்டு இசைவடிவம் கொடுக்கப்பட்டு ஒரே அரங்கில், ஒரே நாளில் பத்துப் பாடகர்களால் எதிர்வரும் 21.04.2019 அன்று இலங்கைவேந்தன் கல்லூரியில் அரங்கேற்றம் செய்யப்படவுள்ளது.

யாழ்.பல்கலைக் கழக இசைத்துறையின் முதுநிலை விரிவுரையாளர் தவநாதன் றொபேட்டின் நெறிப்படுத்தலில் நிகழவிருக்கும் இந்நிகழ்வின் முதன்மை விருந்தினராக தமிழிசை வாக்கேயக்காரர் பொன்.ஸ்ரீவாமதேவன் அவர்களும் சிறப்பு விருந்தினராக கலைஞர் வேல்.ஆனந்தன் அவர்களும் கலந்து கொள்ள உள்ளனர்.

விபுலாநந்தர், ஆறுமுக நாவலர், யோக சுவாமிகள், விநாசித்தம்பிப் புலவர், வீரமணி ஐயர் போன்ற முப்பதிற்கும் மேற்பட்ட கவிராயர்களின் பாடல்களுக்கு இசைவடிவம் கொடுக்கப்பட்டு இரண்டு ஆண்டுகள் தொடர்ச்சியான பயிற்சிகள் வழங்கப்பட்டு நிகழ்த்தப்படும் இந்நிகழ்வில் த.றெபேட்டுடன் அவரது மாணவர்களான க.ரஜீவன், மு.துஸ்யந்தன், ஸ்ரீ.மதுராங்கி, அ.அமிர்தசிந்துஜன், சி.மதுஜா, ந.சங்கீதவாணி, மு.அனுச்சித்திரா, ப.சாரங்கன், க.சுடரோன் ஆகியோர் ஈழத்தின் புகழ் பெற்ற பக்கவாத்தியக் கலைஞர்களின் துணையுடன் ஈழத்தின் தமிழிசையை அரங்கேற்ற உள்ளனர். நல்லை ஆதீனக் குருமுதல்வர் சோமசுந்தரதேசிக பரமாசாரிய சுவாமிகள், திருமறைக்கலாமன்ற இயக்குநர் நீ.மரிய சேவியர் அடிகள், தென்கயிலை ஆதீன குரு முதல்வர் அகத்தியர் அடிகள் ஆகியோர் ஆசி வழங்க உள்ளனர்.

இந்நிகழ்வானது குரலோசை - நுண்கலைகளின் தாயகம் என்னும் அமைப்பினரால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

# குருடரின் விளக்கு



ஒரு கிராமத்தில் கண்பார்வையற்ற ஒரு முதியவர் வாழ்ந்து வந்தார். அவர் இரவு வேளைகளில் எப்பொழுது வெளியில் சென்றாலும், கையில் ஒரு விளக்கை எடுத்துச் செல்வது வழக்கம். வழமைபோல ஒரு நாள் கையில் விளக்கோடு இரவில் நடந்து வந்த முதியவரை, சில இளைஞர்கள் ஏளனத்தோடு பார்த்துச் சிரித்தனர். “கண் தெரியாத உனக்கு கையில் எதற்கு விளக்கு”? என்று கேலி செய்தனர். வாலிபர்களின் கேள்விக்கு பெரியவர் நிதானமாகப் பதிலளித்தார். “எனக்கு கண் தெரியாது என்பது உண்மைதான். நான் இந்த விளக்கை எனக்காகக் கொண்டுவரவில்லை. உங்களைப் போன்று நன்கு கண் தெரிந்தவர்கள் என் மீது மோதாமல் இருக்கவே இந்த முன்னேற்பாடு” என்றார். முதியவரின் பேச்சைக் கேட்ட இளைஞர் தங்களது முட்டாள்தனமான கேள்விக்கு மன்னிப்பு கோரினர்.

நீதி- எதையும் சிந்தித்தே பேசு.




## நோபல் பரிசு 5

கடந்த 1900 ம் ஆண்டு ஜூன் மாதம் 29 ம் திகதி முதல் நோபல் அறக்கட்டளை ஒரு தனியார் நிறுவனமாக ஆரம்பிக்கப்பட்டு, நோபலின் உயிலின்படி அதன் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. எனினும் நோபல் பரிசு வழங்கும் நடவடிக்கைகளுக்கு , எப்பொழுதும் சில எதிர்ப்புகள் இருந்துகொண்டுதான் இருக்கிறது. அதனையும் தாண்டி, நோபலின் எண்ணங்கள் , நோபல் பரிசினால் நிறைவேற்றப்பட்டு வருகிறது. மேலும் நோபலின் சொத்தை முதலீடாக கொண்டு செயற்படும் குறித்த அறக்கட்டளைக்கு சுவீடன் , அமெரிக்கா, உள்ளிட்ட நாடுகள் முழுமையான வரிவிலக்கீடு அளித்துள்ளது. நோபல் பிறந்த ஊரான, ஸ்டாக்ஹோமை தலைமையகமாக கொண்டு குறித்த நோபல் அறக்கட்டளை இயங்கி வருகிறது.

மீதி அடுத்த வாரம்...




## கழுதையும் கட்டெறும்பும்

கட்டெ றும்பு ஊர்ந்து ஊர்ந்து
கழுதை அருகில் சென்றதாம்
கழுதைக் காலில் ஏறி ஏறிக்
காதுப் பக்கம் போனதாம்

காதில் புகுந்து மெல்ல மெல்லக்
கடித்துக் கடித்துப் பார்த்ததாம்
காள்கா ளென்று கழுதை கத்த
கட் டெறும்பு மிரண்டதாம்!

காதி லிருந்து தரையை நோக்கி
கர்ணம் போட்டுக் குதித்ததாம்
அந்தச் சமயம் பார்த்துக் கழுதை
அதன்மேல் காலை வைத்ததாம்.

காலில் சிக்கிக் கொண்ட எறும்பு
கதை முடிந்து போனதாம்.

# அட அப்படியா?


## அணுகுண்டு என்பது என்ன?

அணுவின் கருவைப் பிளக்கும்போது, அது உருக்குலைந்து பெரிய ஆற்றலை வெளிப்படுத்துகின்றது. ஒட்டோ ஹான் என்ற ஜேர்மனிய விஞ்ஞானி ஒருவரே முதலில் அணுகுணடைச்செய்தார். இரண்டாம் உலகப்போரின் போது இது செய்யப்பட்டது. இது மிகப்பெரிய அழிவை உண்டாக்க வல்லது. யுரேனியம் என்னும் உலோகத்திலிருந்து இது



செய்யப்படுகின்றது. ஹிரோஸிமா, நாஹிஸகாய் ஆகிய ஜப்பானிய நகரங்களில் அமெரிக்க வீசிய அணுகுண்டுகள் பேரழிவை ஏற்படுத்தின. நகரே முற்றாக அழிக்கப் பட்டதோடு, இலட்சக் கணக்கானவர்கள் கொன்றாழிக் கப்பட்டனர்.

# ஆங்கிலம் கற்போம்




இன்று நிகழ்காலத் தொடர்வினை (Present Continuous Tense) பற்றி விரிவாகவும், அதன் இலக்கணப் பயன்பாடுகளையும் பார்ப்போம்.

வாக்கிய அமைவுகள்

Positive (Affirmative)

Subject + Auxiliary verb + Verb with ing +


1. I + am + doing a job
2. He/ She/ It + is + doing a job.
3. You/ We/ They + are + doing a job.

இவ்வாக்கிய அமைப்புகளில், பிரதான வினைச்சொல்லுடன் “ing” யும் இணைந்து பயன்படும் என்பதை மறவாதீர்கள்.

**கேள்வி பதில்**


Are you speaking in English?
நீ ஆங்கிலத்தில் பேசிக்கொண்டிருக்கின்றாயா ?
Yes. I am speaking in English. (I’m)
ஆம், நான் ஆங்கிலத்தில் பேசிக்கொண்டிருக்கின்றேன் .
No. I am not speaking in English. (I’m not)
இல்லை, நான் ஆங்கிலத்தில் பேசிக் கொண்டிருக்கவில்லை.
Are you going to school?
நீ பாடசாலைக்கு போய்க்கொண்டிருக்கின்றாயா ?
Yes. I am going to school. (I’m)
ஆம், நான் பாடசாலைக்கு போய்க்கொண்டிருக்கின்றேன் .
No. I am not going to school. (I’m not)
இல்லை, நான் பாடசாலைக்கு போய்க் கொண்டிருக்கவில்லை .

# இங்கே இவர்கள் இப்படி?



மேற்கு சிம்பாவே (Zimbawe) எல்லைக்குள் வடோமா என்ற பழங்குடியின மக்கள் வாழ்கிறார்கள். இவர்களை தீக்கோழி மக்கள் என்றே எல்லாரும் அழைக்கிறார்கள். அதற்கு காரணம் இந்த மக்கள் எல்லாருக்குமே காலில் இரண்டே இரண்டு விரல்கள் தான் இருக்கிறது. இவர்கள் 200 ஆண்டுகளுக்கும் மேலாக இங்கே வாழ்கிறார்கள் இந்த மக்கள் எல்லாருக்குமே இரண்டு விரல்கள் கொண்ட கால் தான் இருக்கிறது. இது ஒரு அரிய மரபணு நிலை பாதிக்கப்படும் நோயாகும். இவர்களுக்கு இருக்கக்கூடிய இரண்டு விரல்களும் உள்கூட்டியே வளைந்திருக்கிறது.

தீக்கோழி பறவையின் கால்கள் இப்படித்தான் இருக்குமாம். அதனால் இவர்களை தீக்கோழி மக்கள் என்றே அழைக்கிறார்கள்.



## பறவைப் புதிர்

1. கால்களில் இரண்டு விரல்களை மாத்திரமே கொண்டுள்ள பறவை எது?
2. ஓய்வெடுக்காமல் 1000 கி.மீற்றர் வரை பறக்க வல்ல பறவை எது?
3. வெட்டுக் கிளியை வேட்டையாடும் பறவை எது?
4. மணிக்கு 45 மைல் வேகத்தில் பறக்கும் பறவை எது?
5. எந்தப் பறவையின் ஆண் இனம் அடைகாத்து குஞ்சு பொரிக்கின்றது?

**பதில்கள்**

1.தீக்கோழி 2. புறா 3. மைனா
4. காகம் 5. பெங்குயின்



# கல்லறை திறந்தது, காரிருள் மறைந்தது...

# உயிர்த்தெழுந்தார் இயேசு பிரான்...!

கல்லறையில் அடக்கம் செய்யப்பட்ட இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த தினமே 'ஈஸ்டர்' திருநாளாகக் கொண்டாடப்படுகிறது. கி.பி. 29 ஆம் ஆண்டிலிருந்து ஈஸ்டர் திருநாள் கொண்டாடப்பட்டு வருவதாக வரலாறு கூறுகிறது. இயேசு கிறிஸ்து சாவிலிருந்து விடுதலை பெற்று உயிர்த்தெழுந்த நிகழ்வை கத்தோலிக்கக் கிறிஸ்தவர்கள் மட்டுமன்றி பிற கிறிஸ்தவச் சபைகளால் 'பாஸ்கா திருவிழிப்பு' என்ற பெயரில் நினைவுகூரும் ஒரு நிகழ்வாக இது அமைந்துள்ளது. ஈஸ்டர் பண்டிகைக்கு முந்தைய நாளான சனிக்கிழமை மாலை அல்லது முன் இரவில் (நள்ளிரவுக்கு முன்) தொடங்கப்பட்டு ஞாயிற்றுக்கிழமை வரை தொடரும் விதமாக இந்த நிகழ்ச்சி அமையும்.

**பாஸ்கா திருவிழிப்பு**

பாஸ்கா திருவிழிப்பு சடங்கானது ஒளி வழிபாடு, இறைவாக்கு வழிபாடு, திருமுழுக்கு வழிபாடு மற்றும் நற்கருணை வழிபாடு என நான்காகப் பிரிக்கப்பட்டு நடைபெறும். இதில் ஒளி வழிபாட்டின்போது ஆலயத்தில் உள்ள விளக்குகள் அனைத்தும் அணைக்கப்பட்டுக் கோவிலின் வெளியே ஓர் இடத்தில் தீ மூட்டப்பட்டு அதில் பாஸ்கா மெழுகுதிரி ஏற்றப்படும். உயரமான கனமான அந்த மெழுகுதிரியை மதகுரு கையில் தூக்கிக்கொண்டு ஆலயம் நோக்கி வருவார். அப்போது, 'மகிமையுடன் உயிர்த்தெழும் கிறிஸ்துவின் ஒளி அக இருள் அகற்றி, அருள் ஒளி தருவதாக" என்ற முன்னுரையுடன் 'கிறிஸ்துவின் ஒளி இதோ" என்று பாடுவார். மேலும் அப்போது, 'நெருப்புத் தூணின் வெளிச்சத்தால் பாவத்தின் இருளை அகற்றிய இரவும் இதுவே...' சாவின் தளைகளைத் தகர்த்தெறிந்து, கிறிஸ்து பாதாளத்திலிருந்து வெற்றி வீரராய் எழுந்ததும் இந்த இரவிலேதான்...' என்ற வரிகள் அடங்கிய புகழுரை பாடல் பாடப்படும்.

**திருமுழுக்கு**

இதையடுத்து நடைபெறும் இறைவாக்கு வழிபாட்டின்போது, 'உன்னதங்களிலே இறைவனுக்கே மாட்சிமை உண்டாகுக...", என்ற பாடல் பாடப்பட்டு இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த நிகழ்வு நடைபெறும். இதைத் தொடர்ந்து நடைபெறும் இறைவாக்கு வழிபாட்டை அடுத்து திருமுழுக்கு வழிபாடு நடைபெறும். குழந்தைகள் மற்றும் பெரியவர்களுக்குத் திருமுழுக்கு வழங்கும் பழக்கம் கிறிஸ்தவ மதத்தில் தொன்று தொட்டு இருந்துவரக்கூடிய ஒன்றே. இருந்தாலும், இந்தப் பாஸ்கா திருவிழிப்பின்போது நினைவுகூரப்படும் திருமுழுக்கு சற்று வித்தியாசமானது. இறை மக்கள் அனைவரும் தங்கள் கைகளில் மெழுகுதிரிகளைப் பிடித்திருக்க மதகுரு பாஸ்கா மெழுகுதிரியை தண்ணீர் நிறைத்து வைக்கப்பட்டிருக்கும் பெரிய பாத்திரத்தில் அமிழ்த்தி இறைவனை வேண்டி அந்த நீரை மந்திரிப்பார். அந்த நீரைக்கொண்டே மக்களுக்குத் திருமுழுக்கு எனப்படும் ஞானஸ்நானம் (Baptism) வழங்கப்படும்.

இதைத்தொடர்ந்து நடைபெறும் நற்கருணை வழிபாட்டின்போது, அப்பமும் ரசமும் கடவுளுக்குக் காணிக்கையாகக் கொடுக்கப்படும். இது கடவுளின் வல்லமையின் காரணமாக 'அப்பமும் ரசமும் இயேசு கிறிஸ்துவின் உடலும் இரத்தமுமாக மாற்றம் பெறுகின்றன' என்று கிறிஸ்தவர்கள் நம்பும் ஒரு சடங்காகும். இந்த நிகழ்வுடன் பாஸ்கா முப்பெரும் விழா நிறைவுபெறும்.

**ஈஸ்டர் பாடல்கள்**

ஈஸ்டர் விழாவின்போது, 'இரு விழிகள் மூடியபோது
இதயமே அழுதது
ஒரு கல்லறை திறந்தபோது
உலகமே மகிழ்ந்தது...",
'இருளினைப் போக்கும் கதிரவன் போல்
சாவினை வென்றிங்கு
உயிர்த்தெழுந்தார்...'
'கல்லறை திறந்தது காரிருள் மறைந்தது
கிறிஸ்து உயிர்த்தார் அல்லேலூயா...' - என்பது போன்ற பாடல்கள் பாடப்படும்.

**ஈஸ்டர் முட்டை**

ஈஸ்டர் விடுமுறைக்காலம் அல்லது வசந்த காலத்தைக் கொண்டாடும்விதமாக வழங்கப்படும் அலங்கரிக்கப்பட்ட முட்டைகளை ஈஸ்டர் முட்டைகள் என்று சொல்கிறார்கள். பூமியின் மறுபிறப்பின் அடையாளமாக முட்டை நம்பப்படுகிறது. இதன் பின்னணியிலேயே தொடக்க காலக் கிறிஸ்தவர்கள் இயேசு கிறிஸ்துவின் மறுபிறப்பின் அடையாளமாக முட்டைகளை ஏற்றார்களாம்.

**ஈஸ்டர் லில்லி**

ஆண்டுக்கு ஒருமுறை பூக்கக்கூடிய அதிசய பூ ஈஸ்டர் லில்லி. இந்தப் பூ கோடை காலமான ஏப்ரல், மே மாதங்களில் மட்டுமே பூக்கக்கூடியது. இந்தப் பூ பூத்த நாள் தொடங்கி 15 நாள்கள்வரை வாடாமல் அப்படியே இருக்குமாம். கிழங்கு வகையைச் சேர்ந்த இந்தப் பூ ஈஸ்டர் பண்டிகை நாட்களில் பூப்பதால் இப்பெயர் வந்ததாகக் கூறப்படுகிறது. மேலும், வெள்ளை நிற லில்லி மலர் உயிர்த்தெழுதலின் சின்னமாகக் கருதப்படுவதாலும் அது ஈஸ்டர் சிறப்பு மலராகப் போற்றப்படுகிறது.

**ஒறுத்தல்**

சாம்பல் புதன்கிழமை அன்று தொடங்கும் 40 நாள்கள் நோன்பு ஈஸ்டர் பண்டிகையுடன் முடிவுபெறும். தவக்காலம் என்று சொல்லப்படும் இந்தக் காலகட்டத்தில் பல்வேறு ஒறுத்தல் முயற்சிகள் மேற்கொள்ளப்படும். அதாவது உபவாசம், தர்ம காரியங்களில் ஈடுபடுதல். சிலுவைப்பாதை செய்தல் மற்றும் பல காரியங்களை அவரவர் தகுதிக்கு ஏற்றவாறு செய்வார்கள். (உபவாசம் என்பது ஒருவர் சிறிதளவு உணவுண்டோ அல்லது உணவே இல்லாமலோ இருக்கக்கூடியது. இது அவர்கள் விரும்பியோ அல்லது அவசிய தேவைக்காகவோ இருக்கக்கூடிய ஒரு செயலாகும்). சிலர் தினமும் ஒருவேளை அல்லது இருவேளை சாப்பாடு மட்டுமே சாப்பிடுவார்கள். இன்னும் சிலர் இறைச்சி உணவுகளைத் தவிர்ப்பார்கள். 40 நாட்களும் சில பெண்கள் தலையில் பூ வைக்காமல் இருப்பார்கள்.

# தலைவன் என்றாலே கெத்துதான்

உலகிலிலுள்ள ஒவ்வோர் இனக் கூட்டத்துக்கும் தலைவன் என்பவன் நியமிக்கப்படுகிறான், அல்லது தன்னையே தலைவனாக நியமித்துக் கொள்கிறான். அதற்காக நேரம் பார்த்து காய் நகர்த்துவதிலிருந்து, வஞ்சகம் செய்வது வரை எல்லாமே தனி ரகமாக இருக்கும். தலைவன் என்ற பதவியை நோக்கிய பயணத்தில் பல போராட்டங்கள் இருக்கும். ஒரு கூட்டத்தின் தலைவனாக வரும் வரை பிரச்சினைதான். அந்தத் தலைவன் பதவியைத் தக்கவைப்பதில் மனிதனென்ன, குரங்கென்ன எல்லாமே ஒன்றுதான். ஒவ்வொன்றும் ஒரு வகை அதில் கெலாடா தனி வகை.

குரங்குகள் பற்றி கேள்விப்பட்டிருப்பீர்கள். கெலாடா குரங்கு குறித்து எங்கேனும் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? பார்ப்பதற்குப் பபூன் வகை குரங்கு போல இருக்கும். உண்மையில் அவை பபூன் குரங்குகள் அல்ல. இவை எத்தியோப்பிய மலைக் காடுகளில் வாழும் உயிரினம். கடல் மட்டத்திலிருந்து 1,800 மீற்றரிலிருந்து 4,400 மீற்றர் கொண்ட சிகரம்தான் இவற்றின் வாழிடம்.

கெலாடா குரங்குகள் பெரிய பற்களைக் கொண்டவை. இந்த இனத்தில் ஆண் குரங்குகள் அளவில் பெண் குரங்கைவிட ஒரு மடங்கு பெரியவையாக இருக்கும். ஆண், பெண் வித்தியாசத்தை எளிதில் கண்டறிந்துவிடலாம். இவை பல்வேறு குடும்பங்கள் இணைந்த கூட்டமாக வாழும் இயல்புடையவை. ஒரு கூட்டத்தில் 200 இற்கும் மேற்பட்ட குரங்குகள் இருக்கும். மனிதனைத் தவிர்த்து எண்ணிக்கையில் அதிகமாக வாழும் ஒரே இனம் கெலாடா குரங்குகள் மட்டும்தான். ஆண்கள், கூட்டத்தோடு இருந்தாலும் பெண்களே கூட்டத்தை வழி நடத்தும். ஆண்கள் வருவதும் போவதுமாக இருக்கும். இவை கழுதைப் புலிகள் மற்றும் சிறுத்தைகளுக்கு பயந்து மலையின் சரிவான பாறைகளில் உறங்கும் பழக்கம் கொண்டவை. இவற்றின் சராசரி ஆயுள்காலம் 19 ஆண்டுகள்.

ஆண் கெலாடா குரங்குகளின் நெஞ்சுப் பகுதியில் முடிகள் இல்லாத ஒரு பகுதி இருக்கும். அதற்கு BLEEDING HEART என்று பெயர். அந்த இடம் குரங்கின் மனநிலையைப் பொறுத்து நிறம் மங்கவோ, பொலிவாகவோ மாறும். அதன் உடலில் சுரக்கும் 'டெஸ்டாஸ்டிரோன்' என்ற ஹோர்மோன் சுரப்பின் அளவைப் பொறுத்து அடர் சிவப்பு நிறமாக மாறும். இதுவே ஆண் குரங்கு பெண் குரங்குகளுடன் இணை சேர்வதற்கான நேரமாகப் பார்க்கப்படுகிறது. அந்த நேரத்தில் பெண் குரங்குகள், தலைவனின் ஆணைக்கு இணங்கிவிட வேண்டும்.

அடர் சிவப்பு நிறம் தலைவனுடைய பலத்தையும் வீரியத்தையும் மற்ற குரங்குகளுக்கு தெரியப்படுத்துகிறது. மற்ற ஆண் குரங்குகள் தலைவன் இருக்கிற இடத்தை விட்டே ஓடி விடுகின்றன. கூட்டத்தில் இருக்கிற ஆண் குரங்குகள் தங்களின் எதிர்ப்பைக் காட்ட முயற்சி செய்தால் தலைவர் தன்னுடைய வேலையைக் காட்டிவிடுவார். தலைவனாக இருக்கும் ஆண் குரங்கு தன்னை ஆரோக்கியமானவனாகக் காட்டிக் கொள்ள அடிக்கடி பல்வேறு வேலைகளில் ஈடுபடும். பாறைகளின் உச்சிக்குச் சென்று சத்தமிடுவது, பெண் குரங்குகளிடம் இணை சேருவது, மற்ற ஆண் குரங்குகளை அடித்து ஓட விடுவது என எப்போதும் ஒரு கெத்தோடு சுற்றிக்கொண்டே இருக்கும். கூட்டத்தில் யார் எது செய்ய நினைத்தாலும் அதைத் தலைவனே முடிவு செய்பவனாக இருக்கிறான்.

பெண் குரங்குகள் தங்களுடைய குட்டியைப் பெரும்பாலும் இரவில் பெற்றெடுக்கின்றன. சராசரியாக, புதிதாகப் பிறந்த குட்டியின் எடை 464 கிராம் வரை இருக்கும். கூட்டத்தில் இருக்கிற மற்றப் பெண் குரங்குகள் குட்டியை எப்போது வேண்டுமானாலும் கடத்திக் கொண்டு போய் விடலாம் என்பதால் பிறந்த ஐந்து வாரங்கள் வரை தன்னுடனே வைத்து பெண் குரங்கு வளர்க்கும். குட்டிகள் ஐந்து மாதங்கள் கழித்து தனியாகச் செல்ல அனுமதிக்கப்படுகின்றன.

நான்கு அல்லது ஐந்து ஆண்டுகளில் ஆண் குரங்குகள் பருவமடைந்துவிடுகின்றன. பெண் இணை இல்லாமல் இருக்கும் ஆண் குட்டிகள் தனிக் குழுவாகச் சேர்ந்துகொள்கின்றன. பருவமடைந்த தனியன்கள் உடனடியாகப் பெண் குரங்குகளோடு இணை சேர்ந்துவிட முடியாது. அதற்காக அவை எட்டில் இருந்து பத்தாண்டுகள் வரை காத்திருக்க வேண்டும். அதற்குக் கூட்டத்தில் இருக்கிற தலைவன் தடையாக இருக்கிறான்.

தலைவன் பதவிக்கு எவ்வளவு கஷ்டப்பட்டு வந்திருக்கிறோம் என்பது தலைவனுக்கு நன்கு தெரியும். தலைவனாக இருக்கும் குரங்கும் ஒரு காலத்தில் தனியனாக இருந்ததுதான் என்பதால் தனியன்கள் தலைவனுக்கு எதிராக என்ன செய்வார்கள் என்பதைத் தலைவனாக இருக்கும் குரங்கு தெரிந்து வைத்திருக்கும். தனக்கு எதிராக எந்த ஓர் ஆண் குரங்கும் எழுந்து விடக் கூடாது என்பதில் கவனமுடன் இருக்கும். தனியன் குரங்குகளுக்கு பயத்தைக் காட்டுவதற்காக நேரம் கிடைக்கும் போதெல்லாம் கையில் கிடைக்கும் ஆண் குரங்குகளை அடித்து வெளுப்பதை வழக்கமாக வைத்திருக்கும்.

அடக்கி வைத்திருக்கும் கோபமும் அழுகையும் ஒருநாள் வெடிக்கும் என்பது மனிதனோ, குரங்கோ அதுதான் உலக நியதி. ஆண்டுகள் செல்லச் செல்ல தலைவனாக இருக்கிற குரங்கு தன்னுடைய பலத்தை கொஞ்சம் கொஞ்சமாக இழக்க ஆரம்பிக்கும். உள்ளே பயத்தை வைத்துக் கொண்டு "தான் பலமாக" இருப்பதாக காட்டிக் கொள்ள அவ்வப்போது பாறைகளின் உச்சியில் அமர்ந்து ஆர்ப்பரிக்கும். ஆனால், அதனால் எந்த பலனும் கிடைக்கப் போவதில்லை.


ஏனெனில் தலைவனாக இருக்கும் குரங்கிற்கு வெளிப்படையான ஒரு பலவீனம் இருக்கிறது. அது, அதன் இயல்பான உடலமைப்பு. தலைவனின் நெஞ்சு பகுதியில் சுரக்கிற 'டெஸ்டாஸ்டிரோன்' ஹோர்மோன் சுரப்பி




## பெண்ணுக்
## கெலாடா



இணைசேர வரும் தலைவனை
வழி மறிக்கும் தனியன்கள்








கெத்தைக் காட்ட அச்சுறுத்தும் ஒலி எழுப்பும் தலைவன் குரங்கு

# ...க்காக போர் நடத்தும் ... குரங்குகள்



சூழலை நோட்டமிடும் தனியன்

குறையக் குறைய அதன் நெஞ்சு பகுதியின் அடர் சிவப்பு நிறம் குறைய ஆரம்பிக்கும். எவ்வளவு ஆக்ரோஷமாக இருந்தாலும் அடர் சிவப்பு நிறத்திற்கு மாறாமல் மங்கலாகவே இருக்கும். தலைவன் தன்னுடைய பலத்தை இழக்கிறான் என்பது அந்த நிறத்தை வைத்தே மற்ற குரங்குகள் அடையாளம் கண்டு கொள்ளும்.

கூட்டத்தில் இருக்கிற தனியன் குரங்குகள், தலைவன் மீது கொடூர கோபத்துடன் இருக்க, இணை சேராமல் இருப்பது மட்டுமே காரணமாக இருக்கிறது. கெலாடா கூட்டத்தில் இருக்கும் ஆண் குரங்குகள் பெண்களுக்காக நடத்தும் சண்டைகளே அதிகம். பருவமடைந்த ஆண் தனியன் குரங்குகள் எப்படியாவது தலைவனை சாய்த்துவிட வேண்டுமென நேரம் பார்த்து காத்துக்கொண்டிருக்கும். தலைவனைச் சாய்ப்பது அவ்வளவு எளிதில்லை என்பது தனியன் குரங்குகளுக்கும் தெரியும். அதற்காக தனியன்கள் சில காலம் காத்திருக்க வேண்டி இருக்கும்.

தலைவனின் நெஞ்சு பகுதியில் சுரக்கிற 'டெஸ்டாஸ்டிரோன்' ஹோர்மோன் சுரப்பி குறையக் குறைய அதன் அடர் சிவப்பு நிறம் குறைய ஆரம்பிக்கும். எவ்வளவு ஆக்ரோஷமாக இருந்தாலும் மங்கலாகவே இருக்கும். தலைவன் தன்னுடைய பலத்தை இழக்கிறான் என்பது அந்த நிறத்தை வைத்தே மற்ற குரங்குகள் அடையாளம் கண்டுகொள்கின்றன.

இப்போது தனியன் குரங்குகள் பருவ வயதில் இருப்பதால் அதனுடைய ஹோர்மோன் சுரப்பி அதிகமாகச் சுரக்க ஆரம்பித்திருக்கும். இந்த நேரத்தில் இணை சேர கூட்டத்துக்கு வருகிற தலைவனை தனியன்கள் சுற்றி வளைத்து விடுகின்றன. தலைவனாக இருக்கும் ஆண் குரங்கு தனியன் குரங்குகளை எதிர்த்து நிற்கும், ஆனால் தனியன் குரங்குகள் கண்மூடித்தனமாகத் தாக்குதலைத் தலைவன் மீது தொடுக்கும். இந்தச் சண்டையைக் கூட்டத்தில் இருக்கும் எல்லா ஆண், பெண் குரங்குகளும் பார்த்துக் கொண்டிருக்கும். ஒரு கட்டத்தில் இதிலிருந்து தப்பித்தால் போதுமென்று தலைவன் அங்கிருந்து தப்பித்து ஓடிவிடும். தனியன் கூட்டத்தில் பலம் பொருந்திய ஆண் அடுத்த-தலைமுறை தனியன்கள் வரும் வரை அதாவது அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குத் தலைவனாக இருக்கும்.

தென்னாபிரிக்காவின் University of the Free State (UFS) பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சியாளர்கள் கெலாடா குரங்குகளின் வாழ்வியலை ஆராய்ந்து அது குறித்து அறிக்கையைச் சமர்பித்திருக்கிறார்கள்.

தலைவனை ஏமாற்றி வேறோர் ஆண் குரங்கிடம் தொடர்பு வைத்திருக்கும் பெண் குரங்குகள் கூட்டத்தில் இருக்கின்றன. அவை தலைவனால் கண்டுபிடிக்கப்பட்டால், கூட்டத்தில் வைத்துச் சம்பந்தப்பட்ட குரங்கைக் கண் மூடித்தனமாக தாக்கும். சில நேரங்களில் உயிரிழப்புகள்கூட நிகழும். குரங்குகளுக்குள் ஏமாற்றுவது மற்றும் கண்டுபிடிப்பது பற்றிய பயம் இருப்பதற்கான சான்றுகள் இதில் பதிவு செய்யப்பட்டுள்ளன. விலங்குகள் உலகில் 'பயம்' மற்றும் 'கண்டுபிடிப்பு' குறித்துப் பதிவு செய்யப்பட்டிருப்பது இதுவே முதல் முறை. குரங்குகள் பலவிதம்... அதில் ஒவ்வொன்றும் ஒருவிதம்..!



தலைவனுடன் மோதும் தனியன் குரங்கு பார்வையாளராக நிற்கும் பெண் குரங்குகள்




தலைமைக் குரங்கு தனது குட்டிகளுடன்

# வெயிலைக் கொண்டாடுவோம்!

வெயில் காலம் என்றதுமே ஒருவித அச்சம் எழுகிறது. வெக்கையும் புழுக்கமும் அச்சத்தை ஏற்படுத்த அதைத் தணிக்கும் வழி தேடி ஓடிக் கொண்டிருக்கிறோம்.

வெயில் காலத்தில்தான் திடீர் மரணங்கள் - குறிப்பாக மாரடைப்பு மரணங்கள் மிகக் குறைவாகவே நிகழ்கின்றன என்கிறார்கள் மருத்துவ நிபுணர்கள்.

குளிர்காலத்தில் அதிகாலை நேரத்தில் மாரடைப்பு அதிகமாக ஏற்படும் உடலின் வெப்பநிலை குறையும்போது, அதைச் சமன் செய்ய வளர்சிதை மாற்றங்கள் அதிகரிக்கும். அதிகமாகப் பசி எடுப்பது, வளர்சிதை மாற்றம் அதிகமாவதன் அறிகுறியே. இப்படி வளர்சிதை மாற்றம் அதிகமாகும்போது இதயத்துடிப்பு தானாகவே அதிகரிக்கும். அத்தகைய சூழலில் இதய இரத்தக் குழாய்களில் அடைப்பு இருப்பவர்கள், இரத்தக்குழாய் வெடிக்கும் நிலையில் இருப்பவர்களுக்கு அவை வெடித்துவிடும் அல்லது சிதைந்துவிடும்.



900 பேர் இத்தகைய அபாய நிலையில் இருக்கிறார்கள் என்றால், அவர்களில் 100 பேருக்கு மாரடைப்பு ஏற்பட வாய்ப்பிருக்கிறது. ஆனால், வெயில் காலத்தில் வளர்சிதை மாற்றத்தின் அளவு இயல்பாக இருக்கும் என்பதால், இதயத்துடிப்பும் இயல்பாகவே இருக்கும். அதனால், கோடையில் மாரடைப்பு ஏற்படுவதற்கான வாய்ப்புகள் குறைகின்றன.

குளிர்காலத்தில் அதிகாலை நேரங்களில் ஏற்படும் நிகழ்வுகளை ஒப்பிடும்போது பக்கவாதத்தைவிட மாரடைப்புதான் அதிகமாக ஏற்படுகிறது. காரணம், மூளைக்குச் செல்லும் இரத்தக்குழாய்கள் 10 மில்லிமீற்றர் அளவு இருக்கும். இரத்தம், அவற்றின் வழியாகச் செல்லும்போது அழுத்தம் குறைவாக இருக்கும். ஆனால், இதயத்துக்குச் செல்லும் இரத்தக் குழாய்களின் அகலம் அதிகபட்சம் 5 மில்லிமீற்றரும், குறைந்தபட்சம் 2.5 மில்லிமீற்றராகவும் இருக்கும். அதனால் இதயத்துக்குச் செல்லும் அழுத்தமும் அதிகமாகி மாரடைப்பு ஏற்படும்.

கோடை காலத்தில் மூளைக்குச் செல்லும் இரத்தத்தின் அழுத்தம் இயல்பாக இருப்பதால், பக்கவாதம் ஏற்படுவதற்கான வாய்ப்பு குளிர்காலத்தை விட வெயில் காலத்தில் குறைவாக இருக்கும். அதற்காக இக்காலத்தில் இதய நோய்கள் ஏற்படாது என்றும் கூற முடியாது.

விற்றமின் டி குறைபாடு மாரடைப்பை உருவாக்குவதற்கான முக்கிய காரணியாக இருக்கிறது. கடந்த ஐந்தாறு ஆண்டுகளாகவே விற்றமின் டி குறைபாட்டால் மாரடைப்பு ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகரித்து வருகின்றன. சூரிய ஒளி மூலம் உடலுக்குத் தேவையான விற்றமின் டி கிடைக்கிறது. சூரிய ஒளி உடலில்படும்போதுதான் விற்றமின் டி ஐ உடல் உற்பத்திசெய்யும்.

குளிரூட்டிய அறைகளில் வேலை பார்ப்பவர்கள் மற்றும் இரவுப்பணி செய்துவிட்டு பகலில் தூங்குபவர்களுக்கு விற்றமின் டி குறைபாடு ஏற்படும். இவர்களில் பெண்களுக்கு மாரடைப்பு ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம். காரணம், ஆண்கள் கொஞ்ச நேரமாவது வெயிலில் வெளியே வருகிறார்கள். பெண்கள் கூடுதல் கவனத்துடன் வெயிலைத் தவிர்க்கிறார்கள். எலும்பு அடர்த்தி குறைவதற்கான காரணமும் விற்றமின் டி குறைபாடுதான். வெயில் காலத்தில் பல்வேறு வழிகளில் விற்றமின் டி கிடைக்கிறது.



## வெயிலை விரட்டலாம் உடலை உறுதியாக்கலாம்

வெயில் சுட்டெரிக்கிறது, வியர்வை அதிகமாக வெளியேறுகிறது, கொஞ்ச தூரம் நடந்தாலே உடல் சோர்ந்துவிடுகிறது. வெயில் ஏற்படுத்தும் இப்படியான எல்லா விளைவுகளுக்கும் தீர்வு, தண்ணீர்தான். வழக்கமாக நாம் அருந்தும் நீரைவிட, கோடைக்காலத்தில் அதிகமாக அருந்த வேண்டும்.

வீதிக்கு வீதி மண்பானை விற்கிறார்கள். அதை வாங்கிக் கொள்ளுங்கள். கீழே கொஞ்சம் மணலைக் குவித்து வைத்து, அதன் மேல் பானையை வைத்து தண்ணீர் ஊற்றி மூடிவைத்துவிட்டால், அடுத்த இரண்டு மணி நேரத்தில் "குளு குளு" தண்ணீர் ரெடி. மண்பானை நீர் உடலைக் குளிர்ச்சியடையச் செய்யும்.

தேற்றான்கொட்டையை சுத்தமான பருத்தித்துணியில் கட்டி, பானையின் உள்ளே போட்டால் கிருமிகள் அழிக்கப்பட்டு நீர் சுத்திகரிக்கப்படும். (வாரம் ஒருமுறை தேற்றான்கொட்டைகளை மாற்ற வேண்டும்.) வெட்டிவேர் அல்லது தேசிப் பழத்தை மண்பானை நீரில் போட்டு வைத்தால், நீர் மேலும் குளிர்ச்சியடையும். இந்த நீரைக் குடித்தால், உடல்சூடு தணியும் வயிறும் சுத்தமாகும். அடிவயிற்றுவலி, நீர்ச்சுருக்கு, மலச்சிக்கல் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளுக்கு இது தீர்வு தரும்.


# உணவே மருந்து

## வெற்றிலை ரசம்

வெற்றிலை சமிபாட்டுக்கு உதவக்கூடியது. அதில் ரசம் செய்யும்போது சமிபாட்டுத் திறன் அதிகரிக்கும் என்பதால், உணவின் இறுதியில் இதைச் சேர்த்துக்கொள்ளலாம்.

பலன்கள்: இதில் பூண்டும் சேர்க்கப்படுவதால், உடலில் சேர்ந்திருக்கும் கெட்ட கொழுப்புக் கரையும். வயிறுமுட்டச் சாப்பிட்டு முடித்ததும், இந்த ரசத்தைக் கட்டாயம் குடிக்கவும். சிலருக்குப் பூண்டு வாசனை பிடிக்காது. அவர்கள் பூண்டு சேர்க்காமல் இந்த ரசத்தை முயற்சி செய்யலாம். கோடையில் ஏற்படும் தொற்றுப் பிரச்சினைகளைத் தடுக்க வெற்றிலை ரசம் பயன்படும். வெற்றிலையுடன் மிளகு சேர்க்கப்படுவதால், நார்ச்சத்து கிடைக்கும். உடலிலுள்ள நச்சுகள் வெளியேறும்.

வெற்றிலையில், எதிர்ப்பு சக்தி நிறைந்திருப்பதால், குடல் ஆரோக்கியம் பாதுகாக்கப்படும் மலச்சிக்கல் பிரச்சினை



தடுக்கப்படும். பசியின்மையால் அவதிப்படுபவர்கள், இந்த ரசத்தை உணவில் சேர்த்தால், அதைத் தவிர்க்கலாம். வெற்றிலையை மென்று சாப்பிடுவதால் வாயில் கிருமித்தொற்று, பற்சிதைவு, வாய்நாற்றம், ஈறுகளில் வலி என வாய் தொடர்பான அனைத்து பிரச்சினைகளையும் தவிர்க்கலாம். கல்சியம் அதிகமிருப்பதால், தாய்ப்பால் சுரப்பு அதிகமாகும்.

**தேவையானவை:**

வெற்றிலை : 5
பூண்டு : 3 பல்
தக்காளி : ஒன்று
பச்சைமிளகாய் : ஒன்று
உப்பு, மிளகுத்தூள் : தேவையான அளவு
கடுகு, மஞ்சள்தூள், பெருங்காயம் : தலா கால் மே.கரண்டி
நெய் : இரண்டு மே.கரண்டி
கடுகு : கால் மே.கரண்டி
செத்தல்மிளகாய் : 3
சீரகம் : ஒரு மே.கரண்டி
புளி : எலுமிச்சை அளவு
தேசிக்காய் சாறு : இரண்டு மே.கரண்டி
கறிவேப்பிலை, கொத்தமல்லித்தழை : சிறிதளவு

செய்முறை: தக்காளியை விழுதாக அரைக்கவும். கொத்தமல்லி இலையைப் பொடியாக நறுக்கவும். மிளகு, பூண்டு, சீரகத்தை அரைத்து வைக்கவும். புளிக்கரைசல், அரைத்த தக்காளி விழுது, பொடியாக நறுக்கிய கொத்தமல்லி, கறிவேப்பிலையைச் சேர்த்து ஒன்றாகக் கலந்து தேவையான தண்ணீர் சேர்த்து வைத்துக்கொள்ளவும். சட்டியில் நெய்விட்டு, அது காய்ந்ததும் கடுகு, செத்தல் மிளகாய் சேர்த்துத் தாளிக்கவும். இப்போது அரைத்த மிளகு, பூண்டு, சீரகத்தை வாணலியில் போட்டு அரை நிமிடம் வதக்கவும். அதனுடன் புளிக்கரைசல், பெருங்காயத்தூள், உப்பு சேர்க்கவும். தீயைக் குறைத்துவிட்டு, ரசம் சூடாகி நுரைகட்டியதும், நறுக்கி வைத்திருக்கும் வெற்றிலையை அதில் சேர்த்தால், வெற்றிலை ரசம் தயார்.

# யாழ்ப்பாணத்தின் சின்னம் யாழா? எருதா?

**கலாநிதி எஸ்.தியாகராஜா உயிரியல், மருத்துவம், மனோவியல், தொல்லியல் ஆகிய வேறுபட்ட பலதுறைகளில் பல்கலைக்கழகப் பட்டங்கள் பெற்றதோடு 'திராவிட நாகரிகத்தின் தோற்றமும் வளர்ச்சியும்'** (The Origins and Evolution of Dravidian Civilizatin) **என்ற ஆய்வுக்கு தத்துவ கலாநிதிப் பட்டமும் பெற்றவர். அவர் எழுதி தேசம் வெளியீடாக 2004 ஆம் ஆண்டு வெளிவந்த 'ஈழத்தமிழரின் ஆதிச் சுவடுகள்' என்ற நூலில் உள்ள 'பௌத்தமும் தமிழரும்' என்ற கட்டுரையின் ஒரு பகுதி முக்கியத்துவம் கருதி இங்கு பிரசுரமாகின்றது.**




மாதகல் மயில்வாகனப் புலவர் எழுதிய யாழ்ப்பாண வைபவ மாலையில் பின்வரும் யாழ்ப்பாடியின் கதை சொல்லப்படுகின்றது. அக்காலத்தில் சோழ நாட்டில் இருந்து இரு கண்ணுங் குருடாகிய கவிவீரராகவன் என்னும் யாழ்ப்பாணன் செங்கட நகரில் இருந்து அரசாட்சி செய்யும் வாலசிங்க மகாராசன் பேரிற் பிரபந்தங்களியற்றிச் செங்கட நகருக்குப் போய் ராச சமூகத்தில் யாழ் வாசித்துப் பாடினான். அரசன் மிகச் சந்தோசப்பட்டு இலங்கையின் வட திசையிலுள்ள மண்திடல் என்னும் நாட்டை அவனுக்குப் பரிசாகக் கொடுத்தான். அவன் உபகாரம் பெற்ற இந்த நாட்டுக்கு யாழ்ப்பாணம் எனப் பெயரிட்டு இவ்விடம் வந்து சேர்ந்து வட திசையில் இருந்து சில தமிழ்க்குடிகளை அழைப்பித்துக் குடியேறினான்.

இக்கதை யாழ்ப்பாணம் என்ற பெயரை விளக்குவதற்காகக் கூறப்பட்ட ஒரு புனைகதையே என்றும் இதில் வரலாற்று உண்மை ஏதுமில்லை என்பதும் வரலாற்று ஆசிரியர்களான பேராசிரியர் இந்திரபாலா (யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றம்), பேராசிரியர் சி.பத்மநாதன் (The Kingdom of Jaffna) ஆகியோர்களின் கருத்தாகும். இக்கட்டுக்கதை ஒன்றைத்தவிர யாழ்ப்பாணத்தின் சின்னமாக யாழ் வாத்தியத்தை உபயோகிப்பதற்கான ஆதாரம் வேறேதுமில்லை.

அப்படியிருந்தும் யாழ்ப்பாண மாநகர சபையும் யாழ்ப்பாணப் பொது நூலகமும் யாழையே யாழ்ப்பாண மண்ணின் சின்னமாக உபயோகித்து வருகின்றன. அதேசமயம் யாழ்ப்பாணத்தின் சின்னம் எருது என்பதற்கு நீண்ட கால ஆதாரங்கள் உள்ளன.

புராதன யாழ்ப்பாணத்தின் தலைநகராக விளங்கிய கந்தரோடையில் (கந்த மாதனம், கந்த கோட்டம், கதிரமலை) நடைபெற்ற அகழ்வுகளில் எருதுச் சின்னம் பதித்த நாக நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன. கி.பி 1215 இல் 24,000 கேரள, சோழ வீரர்களுடன் யாழ்ப்பாணம்(மணிபுரம்) வந்து அங்கிருந்து பொலநறுவை மேல் படையெடுத்துச் சென்ற விஜயகாலிங்கன் கலிங்க மாகன் எருதுக் கொடியைத் தாங்கிய வண்ணமே படை நடத்திச் சென்றான்.

எருதுக் கொடியை ஏந்திய வண்ணமே சங்கிலி மன்னன் போர்த்துக்கேயரை எதிர்த்தான். நந்திக் காவலன் புவிராஜ பண்டாரம் போர்த்துகேயருடன் போரிட்டு வீர சொர்க்கம் அடைந்தான். யாழ்ப்பாண மண்ணின் இருபது
நூற்றாண்டு கால அரச சின்னம் எருதுதான். யாழ் அல்ல.

**(நூலசிரியரின் இந்தக் கருத்துத் தொடர்பில் ஆரோக்கியமான விவாதங்களை வாசகர்களிடம் இருந்து 'புதுவிதி' வரவேற்கிறது)**




உங்கள் ஆக்கங்களை 'வாசிகை', ஆசிரியர், புதுவிதி, 107 : இராச வீதி, கோப்பாய், திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கோ அல்லது sinnarajavimalan18@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ அனுப்பி வைக்கலாம்.



வார்த்தைகளின் முடிவிலிருந்து
நீள்கின்ற மௌனத்தில்
உயிர்த்தெழும் காலம்
இறகிலிருந்து
பறவையாகிப் போகையில்
பின்னிரவொன்றின் அமைதியை
அறுத்துச்செல்லும் மின்குமிழென
ஞாபக அடுக்குகளில் கசிவு.

இருவேறு ரேகைகளென
வெட்டிக்கொள்ளும் நேசத்தில்,
ஆதிக்கல்தச்சனின் உளி
ஒற்றைப்புன்னகையை எழுதுகிறது.

நதிப்படுக்கைகளில் முகிழ்க்கும்
செடியின் வேர்களில்
ஓடிக்கொண்டு இருக்கும்
நதியொன்றைப்போல,
யாரும்
வரையமுடியாத
குறிப்புக்களைச் சொல்லும்
ஒருவனின் தடத்திலிருந்து
கிளைக்கும் பெருநதி
கவிதையாகிவிடுவதில்
தாள்களில் நிறையும் பறவைகள்.

**- நெற்கொழு தாச**

# நெருஞ்சி முள்: ஒரு நோக்கு

**அழ. பகீரத**

ஈழத்துத் திரைப்படமான 'நெருஞ்சிமுள்' புத்தாண்டு வெளியீடாக இலங்கையின் பல பாகங்களிலும் திரையிடப்பட்டிருக்கின்றது. சுமார் ஒன்றரை மணிநேரம் ஓடக்கூடிய முழுநீளத் திரைப்படத்தின் கிட்டத்தட்ட 25 வீதம் உரையாடல்கள் சிங்களத்திலேயே அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. மிக இயல்பாகப் பேசப்படும் சிங்கள மூல உரையாடல்கள் தமிழ் உபதலைப்புகளுடன் உள்ளமை விளங்கிக்கொள்வதற்கான வாய்ப்பை வழங்குகின்றது.




போர் முடிந்து பத்து ஆண்டுகள் கடக்கும் தறுவாயில் இலங்கை மக்களின் வாழ்நிலையை விளக்கும் பாங்கில் அமைந்துள்ள இந்தத் திரைப்படம் உலகளாவிய ரீதியில் இலங்கையில் ஈழத்தமிழரின் இன்றைய வாழ்வியலையும் சிங்கள மக்களின் உணர்வலைகளையும் எடுத்துச் செல்லும் என்பதில் ஐயமில்லை.

காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினையை மையப்படுத்திய கதையோட்டத்தில் அதன் நான்கு கோணங்களை நான்கு வேறுபட்ட பார்வையில் நகர்த்திச் சென்று இயைபு படுத்தியிருக்கின்றார் கதை வசன கர்த்தாவாகிய கேசவராசன்.

ஒன்று காணாமலாக் கப்பட்டோர் குடும்பங்களினதும் மீண்டுவந்த போராளிகளினதும் பார்வை. இன்னொன்று காணா மலாக்கப்பட்டமைக்கு ஒருவகையில் காரணமாக இருக்கக்கூடியவர்களின் சிங்கள இராணுவ வீரர்களின் குடும்பத்தினரினதும் நெருக்கடியில் உதவும் சாதாரண சிங்கள மக்களினதும் புலனாய்வாளர்களதும் பார்வை. மூன்றாவது காணாமலாக்கப்பட்ட குடும்பங்களைப் பார்க்கின்ற சமூகத்தவரினதுப் அரச, சர்வதேச அமைப்புக்களினதும் பார்வை. நான்காவது ஒருவகையில் தேசியத்தின் பாலானதான யுத்த வெற்றிகளை மெச்சி வாழ்ந்த புலம்பெயர்ந்தோர் பார்வை. நான்கு கோணத்தில் கதையை நகர்த்தும் காட்சிகளைச் சிறந்த திரைக்கதை நேர்த்தியுடன் உருவாக்கி பார்ப்பவரை ஈர்க்கும் பாங்கிலே நகர்த்திச் சென்றிருக்கின்றார்கள்.

**திரை விம்பங்களைச் செதுக்குவதற்கான காட்சியமைப்புக்களை கதைக்கேற்ப தேர்ந்து நடிக நடிகையர்களை அவர்களது இயல்பான நடிப்பில் அவர்களை வெளிக்கொணர்வதில் தயாரிப்பாளரும் நெறியாளரும் இசையமைப்பாளருமான டென்மார்க் சண்**

(22ஆம் பக்கம் பார்க்க)

# சுற்றுச் சூழல் பாதுகாப்பில் மாணவர்களின் பங்களிப்பு

**ரிஷோபிகா செயறூபன்**
வவுனியா இறம்பைக்குளம் ம.ம.வி.

உயிரினங்களின் தொடர்ந்தேர்ச்சியான இருப்பிற்காக இயற்கை அளித்த கொடை சூழல். மனிதன் அறிவார்ந்த உணர்வைப் பெற்றுக் கொள்ளாத அந்தக் காலத்திலேயே சூழலோடு தன்னைப் பிணைத்துக் கொண்டு மனிதன் வாழ்ந்த வாழ்க்கை இருக்கிறதே..! சூழலை நேசித்ததால் சூழலால் போசிக்கப்பட்டான். இயற்கை எதிர்வு கூறல் நுட்பங்களை எல்லாம் சூழல் சூட்சுமமாகக் கற்றுக் கொடுத்திருந்தது. பெருமழை, புயல், வறட்சி, வெள்ளம் போன்ற இன்னோரன்ன நிகழ்வுகளை எதிர்கொள்ளும் திறன் அறிவியல் கண் விழிக்காத அந்தக் காலத்திலேயே வாழ்ந்த மனிதனிடம் காணப்பட்டிருக்கிறது. இங்கேதான் அனைவரும் விழித்துக் கொள்ள வேண்டும்.



ஒரு காலத்தில் ஐரோப்பியரின் காலனித்துவ காலத்தில் தேசத்தைக் காக்க வேண்டிய கடமையை மாணவர் கையிலெடுத்திருந் தார்கள். மாணவப் படையணிகள் உருவாக்கப் பட்டிருந்தன. இன்று அதே கருமத்தைக் கரிசனையோடு ஆற்ற வேண்டிய தேவையும் கடமைப்பாடும் மாணவர் களிடையேயுள்ளது என்பதை கருத்தில் கொண்டேயாக வேண்டிய காலம் இது.

மனிதன் தேடுபவனாகவும் சேகரிப்பவனாகவும் இருந்தபோது தேவைகள் சிலவாக இருந்தன. தனது தேவைக்கு அதிகமான எதையும் அவன் சூழலிருந்து எடுத்துக் கொள்ளவில்லை. சூழலுக்குச் சேதாரத்தை ஏற்படுத்தக் கூடிய எதையும் சூழலுக்கு விடவுமில்லை. சூழலும் மாற்றங்களுக்கு உள்ளாகவுமில்லை ஆனால் எப்போது மனிதன் உற்பத்தியாளனாக மாறத் தொடங்கினானோ எப்போது ஒரு நுகர்வாளனாக மாறத் தொடங்கினானோ, அன்றே சூழலுக்கும் மனிதனுக்கும் இடையிலான முரண்பாட்டுத் தாக்கம் ஆரம்பித்து விட்டதென்றே கூற வேண்டும்.

இந்த முரண்பாடுகளின் வீச்சு அல்லது விரிவாக்கம் இன்று உலகம் முழுவதையும் பாரிய பிரச்சனைக்கு உள்ளாக்கிக் கொண்டுள்ளது. இது தொடர்பாக அர்த்தமுள்ள தகவல்கள் விமர்சனப் பார்வைகள் தத்துவரீதியான சிந்தனைகளூ டாக ஆழப்படுத்த வேண்டியது மாணவர்களின் பொறுப்பாகும். இந்த வேளையில் பழைய கருத்துக்களையும் அல்லது கருத்த மைப்புக்களைத் மாணவர் கட்டாயம் மறு சிந்தனை செய்து பகுத்தாராய வேண்டும்.

அப்படியாயின் இன்று வேகமாகச் சீர்குலைந்து வருகின்ற சூழல் கட்டமைப்பு. சுற்றுச் சூழல் சுகாதாரம் அதனால் நிகழ்காலத்திலும் எதிர்காலத்திலும் ஏற்படக்கூடிய விபரீதங்கள் பற்றிய விழிப்புணர்வைச் சமுதாயத்தில் ஏற்படுத்த வேண்டிய செயற்றிட்டம் செயற்பாடுகள் என்பன உடனடியாகவே ஆரம்பித்தாக வேண்டும். மற்றொரு புறத்தில் ஏற்கனவே ஆரம்பிக்கபட்டவற்றைத் தொடர்ந்து முன்னெடுக்க ஆக்கபூர்வ பங்களிப்பினை நல்க வேண்டும்.

தொழில் நுட்ப யுகத்திற்குள் பிரவேசித்த பிறகு சூழல் பாதுகாப்பிற்கு முடிவற்ற குறுக்கீடுகள் தோன்றியுள்ளன குறைந்தது ஒவ்வொரு வரும் தான் பழகும் சுற்றாடலை மையமாகக் கொண்டு செயற்படத் தொடங்கினால் பல விசமாகக் கூடிய கழிவுப் பொருட்கள் தொடர்பாக நிர்ணயமான முடிவொன்றினைப் பெறலாம்.

சிங்கப்பூர் சூழல் பாதுகாப்பில் தீவிரமான ஒரு நாடு. கியூபா பல புரட்சிகளைச் சந்தித்தாலும் சூழலைத் திட்டமிட்டு வழிபடுத்தும் நாடு. புரட்சியின் போதிருந்த வீதமான காட்டின் அளவை இன்னும் அதே நிலையில் பேணி உலகிற்கு முன் மாதிரியாக விளங்கும் நாடு. பாடசாலைக்குள் பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பாவனையைத் தடை செய்ய உறுதியுடன் செயற்படல் அருகி வரும் குடிநீரை வீண் விரயமாக்காத வகையில் நடத்தைப் பாங்கினை மாற்றியமைத்தல் குறைந்த நீரைப் பயன்படுத்திப் பயிர் செய்தல் இஸ்ரேல் நாடு இதற்கு முன்னுதாரணமாகும் குறைவான நீரைப் பயன்படுத்தி இன்று தோடம்பழத்தைக் கூட ஏற்றுமதி செய்யக் கூடியளவிற்கு அந்த நாடு தேர்ச்சி பெற்றுள்ளது.

சுற்றுச் சூழல் காப்பு என்பது வெறுமனே கருத்துப் பரிமாற்றத்திற்கான வெற்று வார்த்தையல்ல. உண்மையில் சூழல் காப்பு என்பதே கற்க வேண்டிய முதல்பாடமாகும்

**புதுவிதி 100 ஆவது இதழை முன்னிட்டு நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் உயர்தரப் பிரிவில் இரண்டாம் பரிசு பெற்ற கட்டுரை.**

மூன்று படிநிலைகளாக இதனைந் செயலாக்க முடியும். சூழலை அழிவு நிலையிலிருந்து காத்தல், மீளுருவாக்கல், கழிவு முகாமைத்துவம் என்றவாறு பணிவேறாக்கம் செய்ய முடியும்.

வேறு நாடுகளை நோக்கினால் மாணவர்களே ஆயத்த நிலைப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். தன்னார்வத்துடன் இணைந்து பணிபுரிகிறார்கள். 12.05.2018 ஒளிபரப்பான டிஸ்கவரி நிகழ்வு ஒன்றில் பாடசாலை செல்லும் நேரத்திலேயே வெற்றுப் பிளாஸ்ரிக் போத்தல்களை மாணவர்கள் சேகரித்து மீள்சூழற்சி வாகனத்திற்குக் கொடுக்கிறார்கள். மரக்கன்றுகளை நாட்டுகிறார்கள். சூழல் மாசடைவதைத் தடுக்கும் புதியனவற்றை உருவாக்கத் தூண்டப்படுகிறார்கள்.

தனது கடைசிச் சுவாசங்களைக் கணக்குப் பார்த்துக் கொண்டிருக்கிறது. சூழல் இப்போதேனும் நச்சு வேர்களை நாம் துப்பறியாவிட்டால் மனித இருப்பு மட்டுமல்ல ஏனைய உயிரினங்களின் இருப்பு என்பதும் சாத்தியமற்றதே. ஒரு நாளில் ஓரிரவில் சரியாக்கி விடக் கூடியதல்ல. நிலம், நீர், காற்று எல்லாமே நஞ்சடைந்து செல்கின்றன. இனி அழிவை தொடங்கியவனே நினைத்தாலும் கூட தடுக்க முடியாத எல்லையை நோக்கி நகர்கிறது சுற்றுபுறம்.

எனவே சூழலும் மனிதனும் நட்பாயிருந்த காலங்களைக் கடந்து நீண்ட நெடுந் தொலைவு வந்து விட்டோம். இனி எப்படியும் தொடக்கத்திற்கும் போக முடியாது என்பது தெளிவு ஆனாலும் மேலும் அதிகரித்துச் செல்லும் அழிவைத் தடுக்க மாணவர் நாம் ஒன்றாக இணைவோம்.

---

**புதுவிதி 100 ஆவது இதழை முன்னிட்டு நடத்தப்பட்ட கவிதைப் போட்டியில் மூன்றாம் பரிசு பெற்ற கவிதை.**



ஊதா
சிவப்பு
நீலம்

அங்கொரு செம்மஞ்சள்
அதே போல் கருநீலமும்
பச்சையும் கொண்டதோ
மஞ்சளும் இடையிடையே...

எதற்கித்தனை வர்ணம்
ஏணிந்த வெட்கத் தோற்றம்...?

ஆனாலும் கவர்ச்சி தான்
வளைந்து வளைந்து
வர்ணத்தால் வளைந்து விட்டதே
என் நெஞ்சையும்
அந்த வானம் அம்பை விட்டிருந்தால்
இழந்திருப்பேன்
என் உயிரை மாத்திரம்
அனுப்பியது
அதன் வில்லை அல்லவா.

நாணாய்
மாறிக்கொண்டேன்
நான்
அந்த வர்ணஜால வானவில்லில்...

- தேனூர் கௌசிகன்



தென்னிந்தியாவின் முன்னணி நாயகி இப்போது நயன்தாராதான். அஜித்துடன் விஸ்வாசம், ஐரா வெளியாகின.

கொலையுதிர்காலம், மிஸ்டர் லோக்கல் படங்கள் விரைவில் வெளியாகவுள்ளன. தவிர, தர்பார், விஜய் 63, மலையாளத்தில் லவ் அக்ஷன் ட்ராமா, சைரா நரசிம்ம ரெட்டி படங்களில் தற்போது நடித்து வருகிறார்.

2019 இலும் அதிக படங்களில் (8) நாயகி என்ற அந்தஸ்தை வைத்துள்ளார் நயன்தாரா.



முன்னணி நாயகிகளில் ஒருவரான காஜல் அகர்வாலுக்கு இப்போது பட வாய்ப்புக் குறைந்து விட்டது. வாய்ப்புகளை அதிகரிக்க தள்ளுபடி உத்தியை கையாள்கிறார்.

ஒரு படத்தில் நடிக்க 2 கோடி இந்திய ரூபா வாங்குகிறார். தன்னை இரு படங்களில் ஒப்பந்தம் செய்யும் தயாரிப்பாளருக்கு சம்பளத்தில் பெரும்பகுதியை தள்ளுபடி செய்கிறாராம்.



விக்ரம் நடிப்பில் உருவாகி வரும் 'கடாரம் கொண்டான்' வெளியீட்டுக்குத் தயாராகிறது. இந்நிலையில் படம் மே 31 ஆம் திகதி வெளியாகும் என தகவல்கள் வெளியாகின.

அன்றைய நாளில் சூர்யாவின் என்.ஜி.கே. வெளியாகிறது. சூர்யாவுடன் மோதும் விக்ரம் என செய்திகள் பரவவே அவசர அவசரமாக மறுப்பு வெளியிட்டுள்ளது 'கடாரம் கொண்டான்' குழு.

படம் இன்னமும் முடியவில்லை. வெளியீட்டுத் திகதி உத்தியோகபூர்வமாக விரைவில் வெளியாகும் என இயக்குநர் அறிவித்துள்ளார்.

தெலுங்கில் 2017 இல் வெளியான அனந்தோ பிரம்மா படம் பெரு வெற்றி பெற்றது.

இப்போது இந்தப் படத்தை தமிழலில் மீளுருவாக்கம் செய்யவுள்ளனர்.

நாயகியை கருவாகக் கொண்டு உருவான இந்தப் படத்தில் டாப்ஸி நடித்திருந்தார். தமிழில் இந்தப் படத்தில் தமன்னா நடிக்கவுள்ளார்.





'சூப்பர் டீலக்ஸ்' படத்தில் சமந்தா நடித்த கிளுகிளுப்பு காட்சி ரசிகர்களுக்கே அதிர்ச்சியாக அமைந்தது.

இந்தக் காட்சியில் நடிக்க கணவர் நாக சைதன்யாவிடம் சமந்தா அனுமதி கேட்டபோது கோபப்பட்டு மறுத்து விட்டாராம்.

சமந்தாவின் தொடர் வற்புறுத்தலாலேயே படத்தில் நடிக்க அனுமதி கொடுத்தாராம் சைதன்யா.



பிக்பாஸ் (தெலுங்கு) மூலம் பிரபலமானவர் பானுஸ்ரீ. சமீபத்தில்தான் திரைக்கு வந்த இவர் தமிழ் படம் ஒன்றில் நடிக்கிறார்.

ஜெய் நடிக்கும் பிரேக்கிங் நியூஸ் படம் மூலமே அவர் தமிழில் அறிமுகமாகிறார். சுப்பர் ஹீரோ கதையை மையப்படுத்திய இந்தப் படத்தில் பல காட்சிகள் கிரபிக்ஸ் நிறைந்தவையாம்.



ஆண்ட்ரியா நடித்துள்ள மாளிகை படம் விரைவில் வெளியாகவுள்ளது. இதன் டீஸர் வெளியீட்டு விழாவில் பேசிய அவர், 'எனக்கு தமிழில் மார்க்கெட் உள்ளது என்பதை ஹிந்தி தயாரிப்பாளர், கன்னட இயக்குநருக்கு தெரிந்திருப்பது மகிழ்ச்சி. ஆனால் தமிழ் தயாரிப்பாளர்களுக்கு தெரியவில்லை." என்று வருத்தப்பட்டுள்ளார்.

புதுவிதி 100 ஆவது இதழை முன்னிட்டு நடத்திய சிறுகதைப் போட்டியில் மூன்றாம் பரிசு பெற்ற சிறுகதை.

# சொந்தம்

திருமதி ரேணுகா செயரூபன்



வைகாசி மாதத்தின் பிற்பாதி திடீரென்று மூட்டம் போட்டுக் கொண்டு பிசுபிசுக்கிறது வானம் மெல்ல மெல்ல ஊர்கிறது. இரவு தெரு நாய்களின் ஊளைச் சத்தத்தில் சிலிர்க்கிறது தேகம். ஏனோ தூக்கம் வருவதாக இல்லை அருளம்பலம் மாஸ்ரருக்கு. விழித்தபடியே விட்டத்தைப் பார்த்தபடி வெகுநேரம் விழித்துக் கிடந்தார். மனதிற்கு இனம்புரியாத சஞ்சலக் குவியல்கள். எப்போது தூ ங்கினார் எனத் தெரியாது. விழித்தபோது வெளியே சரசுவின் பாதி அழுகைக் குரல் கிரீச்சிட்டுக் கேட்கிறது. கூடவே கணேசனின் அழுகையும் என்னப்பா என்ன...? மயில்வாகனம் மாஸ்ரர் செத்திட்டாராம்... செத்திட்டராம்... செத்திட்டாராம் காதுக்குள் எதிரொலித்த அந்தச் சில சொற்களின் தாக்கம் உயிரில் வலித்தது.

அவரின் ஆப்த நண்பன். அரிவரியிலிருந்து ஒன்றாகவே படித்து ஒன்றாகத் திரிந்து ஒன்றாகவே வேலையும் கிடைத்து, கிடைத்த விடுமுறையில் ஒருநாள் விடாமல் கிடைத்த அனுபவங்களையெல்லாம் சிரித்துச் சிரித்துப் பகிர்ந்து ஒன்றும் எழுதாத வெள்ளைக் காகிதமாக என்ன ஒரு மனது அவனுக்கு என்ரை கடவுளே இதற்குதான் என்ரை மனம் அப்பிடிக் கிடந்து மாய்ஞ்சதாக்கும். தன்னுணர்வின்றித் துவண்டு போனார் அருள் மாஸ்ரர்.

“இஞ்சரப்பா எழும்புங்கோ மாஸ்ரரின்ரை மற்றக் காரியங்களை ஆர் கவனிக்கிறது. ‘சரசுவின் கையைப் பிடித்துக் கொண்டு குலுங்கிக் குலுங்கி அழத் தொடங்கினார். விதனையாரும் கூப்பன் கடை மனேஜரும் மாஸ்ரரின் உடலை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோற அலுவலைப் பார்க்க, அருளம்பலம் மாஸ்ரர் மயில்வாகனம் மாஸ்ரரின் சொந்தங்கள் அறிஞ்சவை தெரிஞ்சவைக்கு வியனம் அனுப்பும் வேலையைக் கவனிக்கத் தொடங்கினார்.

மயில்வாகனம் மாஸ்ரரின் கூடப் பிறந்த சகோதரி வெளிநாட்டிலை இருக்கிறா. இப்போதைக்கு அவதான் நெருங்கின சொந்தம் சாவித்திரி தமையன்காரனிலை வலுவாரப்பாடு அவவின்ரை பெடி, பெட்டையளும் மாமனிலை வலு உசிராய் இருக்குங்கள் தேப்பன்காரன் அதுகளை நண்டும் சிண்டுமாய் நடுத்தெருவிலை விட்டிட்டு ஆரோ ஒருத்தியை இழுத்துக் கொண்டு ஓடிப்போக தன்ரை சுகதுக்கங்களைப் பார்க்காமல், அதுகளை வளர்த்து ஆளாக்கப் பட்டபாடு எக்கணம் கட்டாயம் வரத்தான் ப்பாக்குங்கள். மற்றவைக்கும் கரைச்சல் தானே...”, அந்த நிமிடமே மனது எப்படி உடைந்த பாருங்கள் சுக்குச் சுக்காய்... நூறுநூறாய்...

பந்தல் அலுவல் சாமான் சட்டுக்கு என்று ஆக்களைப் பிரித்து அனுப்பியாகி விட்டது. மயில்வாகனம் மாஸ்ரரின் உடலை வீட்டிற்கு கொண்டு வந்து விட்டார்கள். அருளம்பலத்தரால் உடலின் கிட்டத்தில்கூட போக முடியவில்லை. நேற்று இரவுபட பஸ் வரும் வரைக்கும் வில்லையடி வெள்ளை மணலில் விரல்கள் வெளிநாட்டு இலக்கங்களைத் தேடித்தேடி அழுத்துகின்றன. அந்தப் பக்கம் சின்னக் குயில் செல்லமாகக் கூவுகிறது. நிசப்தம்... மீண்டும்... மீண்டும்... ம்... ம்... இப்போது தூ க்கச் சலிப்போடு எரியும் குரல்...

‘தம்பி ஒருக்கால் சாவித்திரியிட்டைக் குடுக்கேலுமே... கொஞ்சம் அவசரம்”,

‘அம்மாவை இப்ப எழுப்பேலாது விசயத்தைச் சொல்லுங்கோ மனிசன் நிம்மதியா நித்திரையும் கொள்ளேலாது சா... அப்பு... கொம்மான் மோசம் போயிட்டார்...” இவருக்கு அழுகையில் நாக்குப் புரண்டது. அந்தப் பக்கம் கொஞ்சம் நிசப்தம்.

“மாஸ்டர் இப்ப இஞ்ச என்ன நேரம் தெரியுமே சாமம் நடுச் சாமம் விடியட்டும் சொல்லுறன் இப்ப வையுங்கோ...”

‘மோனை செத்தது கொம்மான்...”

‘விளங்குது மாஸ்டர்... வயசு போட்டுதுதானே இனி இருந்து என்னத்தச் செய்யப் போறார். வழக்கம் போல அருளர், மயிலர், சங்கக்கடை தருமன் தனலக்சுமி மில் முதலாளி சுந்தரம், குருக்கள் என்று கூடிய கூட்டம் கலைய பதினொரு மணிபட பஸ்ஸூம் வந்து போய் விட்டது.

‘சரி... சரி போய் படுங்கோ கள்ள பீடி பத்திற பெடியள் பாவம் எப்ப இந்தக் கிழடுகள் கிளம்புங்கள் எண்டு கடுப்பிலை கிடப்பாங்கள்”, மயில்வாகனம் மாஸ்ரர் எழவும் எல்லோரும் எழுந்து கலைந்தார்கள்.

“இந்தப் பிறசர் குளிசையைப் போடுங்கோ... பிறசர் குளிசை யோடு கண்ணீரையும் சேர்த்து விழுங்கிக் கொண்டார் அருள் மாஸ்ரர்.

உள்ளே ரெலிபோன் ஒலிக்கி றது, “சரசு போய் ஆரெண்டு பாரப்பா...”,

‘ஐயோ சாவித்திரியாக்கும் எனக்குச் சதிரம் உதறுது. கதறப் போறாள்...”

‘இஞ்சரப்பா சாவித்திரி உங்க ளோட கதைக்க வேணுமாம்...”

ரெலிபோன் கைமாறுகிறது, “ஓம் பிள்ளை நீங்கள் வாறதைப் பொறுத்துத்தான் காரியங்களைப் பார்க்க வேணும் எத்தினை நாளைக்கு எண்டும் சொல்ல வேணுமாம்...”

‘வாத்தியார் நாங்கள் வாறது சரிவராது கண்டியளோ என்ரை ரெண்டாவதின்ரை பெடிக்கும் பிறந்தநாள் எல்லா ஒழுங்கும்’ செய்து போட்டினம் மாஸ்ரர். அதோட அண்ணைக்கும் போற வயது தானே இனியும் கிடந்து சீரழியாமல் நல்ல சா செத்திட்டார். மாஸ்டர் செலவு சித்தாயமெல்லாம் என்ன மாதிரியெண்டு பிறகு சொல்லுங்கோ மற்றது மாஸ்ரர் சொன்னாப் போலை காணியள், வீடு எல்லாம் எழுதிப்போட்டாரோ. என்ரை மூத்தவனிலை வலுவாரப்பாடு எப்படியும் துரவடிக் காணி, கோணான்பிளவு வீடு எல்லாம் அவனுக்குத்தான் எழுதியிருப்பார்”, மாஸ்ரர் ரெலிபோனைக் காதுக்கு எட்ட வைத்துக் கொள்கிறார்.

அவளுக்கு நான் ஆறுதல் சொல்லிற நேரம். அவள் எனக்கு ஆறுதல் சொல்லுற மாதிரி கிடக்கு... சீ...கூடப்பிறந்தவளே இவள். சரி அதுதான் வேண்டாம். இவளுக்கும் பிள்ளையளுக்கும் அவன் உழைச்ச உழைப்பு...!ஆரோ பிறத்தியார் எண்டாலும் நாலு சொட்டுக் கண்ணீராவது விடாதுகளே...!

இனி இவளோடு கதைக்க என்ன இருக்கு “இஞ்சேர் தம்பி மாணிக்கராசா நாளைக்கு மதியத்துக்குள்ளை எடுக்கிறமாதிரி அலுவலைப் பாருங்கோ...” சாய்மனைக் கதிரையில் சாய்ந்து வெறுமனே கண்களை மூடிக்கொண்டார். அவருக்கு அந்த ஒய்வு தேவையாக இருந்தது. யோசிக்க வேண்டியிருந்தது. கொஞ்சம் முன்னோக்கி ஓட வேண்டியிருந்தது. கொஞ்சம் அழ வேண்டியிருந்தது. சாய்மானைக் கதிரை அவரின் சிந்தனை ஓட்டத்தினூடே மேலும் கீழுமாய் ஆடிக் கொண்டிருந்தது.

மயில்வாகனம் மாஸ்ரரின் உடல் முன் மண்டபத்தில் வளர்த்தப்பட்டிருக்கிறது. அண்டை அயலில் ஒருவரையும் காணவில்லை. தூரத்து உறவுகள் தூரமாகவே உட்கார்ந்திருந்தன. அந்த நன்றி கெட்டதுகளுக்காக நாய்படாப்பாடு பட்ட நேரம் காலாகாலத்திலை ஒரு கலியாணத்தை முடிச்சிருந்தா னெண்டால் இண்டைக்கு அநாதையா கிடக்குமே அவன்ரை பிரேதம் கால்மாட்டில தலைமாட்டிலை பெண்டில்

(மறு பக்கம் பார்க்க)

பிள்ளை கிடந்து மாய்ஞ்சிருக்காதே.

கந்தன்ரை சைக்கிளிலை குரங்குத் தவ்வல் தவ்வி பழகியதுகூட நேற்றுப்போல கிடக்கு... மயிலர் சற்றுக் கட்டை தகப்பனிடம் சைக்கிள் வாங்கித் தரச் சொல்லிக் கேட்டிருக்கிறார். ‘பாக்குவெட்டிக்காம்பு போல அவருக்கு சைக்கிள் வேணுமாம் ஏறி ஓடுவியோ உருட்டிக் கொண்டு ஓடுவியோ...” அந்தச் சொல்லு நல்லாய் சுட்டுப் போட்டுது. இண்டுவரைக்கும் தனக்கெண்டு ஒரு சைக்கிள் வாங்கினதுமில்லை, ஓடினதுமில்லை ஆள் ரோசக்காரன். உயர்தரப் பரீட்சை முடிந்த பிறகு ஊர் சுற்றித் திரிந்தவர்களை ஒரு நாள் வேதமுத்து வாத்தியார் கூப்பிட்டனுப்பினார்.

‘எட பெடியள் அரசாங்கத்திலை வேலை எடுக்கிறதெண்டால் ஏதோ வேலை வங்கியிலை பதிய வேணுமாம் ஓடிப்போய் தபாற்கந்தோரிலை மணியோர்டர் நிரப்பி படிவங்களை சரியாப் பார்த்து அனுப்புங்கோ ஆளுக்கு ஐம்பது ரூபா கொடுத்து அனுப்பி விட்டார். அப்போது இருவருக்கும் பத்தொன்பது வயதோடு சில உதிரிகளும்.

அடுத்த வருடமே இருவருக்கும் ஒன்றாக ஆசிரிய நியமனம் கடிதத்தைக் கையில் வைத்துக் கொண்டு திகைத்துப் போய் வேதமுத்து வாத்தியாரின் வாசலில் நின்ற போது வயது இருபது அதற்குள் எத்தனை வருடங்கள்.

அருளருக்கு மலைநாட்டுப் பக்கம் கொஞ்சம் அறியப்பட்ட ஊர். அக்கம்பக்க ஊராக்கள் அஞ்சாறு பேர் அந்தப்பக்கம் புகையிலை கருவாட்டுக்கடை வைத்திருக்கிறார்கள். மயிலருக்கு முல்லைத்தீவுப் பக்கம் இருவருமாக இலங்கைப் படத்தை விரித்துப் போட்டு மணிக்கணக்காக குப்புறக் கவிழ்ந்து தேடுகிறார்கள்... ம்கூம்...!

கிழக்குவெளுக்கும் முன்னர் முதல் பஸ் சன நெரிசல்பட்ட பஸ்ஸிற்குள் தன்னை திணித்துக் கொள்கிறார் அருளர். மயிலரின் பஸ்ஸைக் காணவில்லை. அருளர் கையசைக்கிறார், மயிலர் கையசைக்கிறார். பஸ்கள் பார்வையிலிருந்து மறைகின்றன.

பொழுது விழும் நேரத்திற்குச் சற்று முன் பின்னாக புழுதிக் குளியலோடு திரும்பி நிற்கிறது மயிலரின் பஸ். கடைசிப் பயணியாக இறங்கிய இவரைக் கண்டு வெருண்டு வெருண்டு குரைக்கத் தொடங்கிய நாயொன்று ஓடிப்போய் இன்னும் சில நாய்கள் நிற்கும் இடத்தில் நின்று குரைத்தன.

ஒரு விநோத பிராணியாக நாய் நினைத்திருக்க வேண்டும். அடுத்த வந்த வருஷ விடுமுறையில் வில்லை மணலில் மல்லாந்து படுத்து வயிறு வலிக்க வலிக்கச் சிரித்தது... இப்ப மாதிரிக் கிடக்கு. விமலின் படமொன்றில் அப்படியொரு பள்ளியைப் பார்த்த ஞாபகம். ஒரு பனையோலை ஆட்டுப்பட்டி, பனைமட்டை வேலி, புதுவாத்தியார் என்றவுடன் ஓடியோடி ஒளித்த பிள்ளைகளை ஒரு மாதிரிக் கூட்டி வந்து உட்கார வைத்து விட்டு, மற்றையவர்களைத் தேடிப் பிடித்து வருவதற்குள் முன்னையவர்கள் ஓடி விடுவார்கள்.

கிராமத்து பெடி, பெட்டைகளின் பாஷை யில் சொல்வதனால் “பிள்ளைபிடிகாரன்” வேலை. எத்தனை அலைச்சல் சிரமம் சீ... என்ன இழவெடுத்த உத்தியோகம் என்ற அளவிற்கு வெறுத்துப் போனது. கிராமத் தலைவர் நாகமணியைப் பகலும் இரவும் காட்டில்தான் பிடிக்க வேண்டும் பெரிய வேட்டைக்காரன். விதானையார் வாறதும் போறதும் மந்திரவித்தை மாதிரி , வாரத்தில் ஒருநாள் வத்தையேறி வாறதும் கொண்டு வாற உரப்பைக்குள் தேன், நெய், இறைச்சிக் கருவாடு, தயிர் எண்டு நிரப்பிக் கொண்டு காணாமல் போறதும் விந்தைதான்.

ஒரு மாதிரி ஒரு புதிய கொட்டில் போட்டு சின்னத் திறப்பு விழாவையும் சத்தமில்லாமல் செய்த பிறகுதான் கல்வி நிர்வாகமும் அவரை அடையாளம் கண்டது. கிட்டத்தட்ட பத்து வருடங்கள் ஒற்றை ஆளாகப் பட்டபாடுகள் அனுபவங்கள் உச்சபட்ச வலிகள் நகைச்சுவையாகச் சொன்னாலும் ஒரு இணைப்பு இல்லாமலில்லை.

ஒரு சித்திரை குறுகிய விடுப்பு. ஊர்த் திருவிழாவிற்கென ஊர் வந்திருந்த நேரம் தனது அணில் கரை வேட்டியின் நுனியைத் திருகிக் கொண்டே அவர் தன் காதலை அருளரிடம் சொட்டுச் சொட்டாகச் சொல்லிக் கொண்டிருந்தார். ஒரு குழந்தை தன் உள்ளங்கைக்குள் கசிய கசிய பொத்தி வைத்த மிட்டாய் துண்டு மாதிரி ஒரு சந்தோஷத் துள்ளலோடு அவரைப் பார்த்தார் அருளர். அப்போது அவருக்குச் சரசுவை நிச்சயப்படுத்தியிருந்தார்கள்.

அன்னக்கொடி. கிராமத்து அத்தியாயங்களின் கதாநாயகி கருமையழகு நெய் பூசிப் படியப்படிய வாரி ரெட்டைப் பின்னல் போட்டிருப்பாள். நுனியில் பஞ்சுமிட்டாய் நிற ரிப்பன். நீளப் பாவாடை, அதேநிறச் சட்டை. கிராமத்து வெகுளித்தனம். துடுக்கென்று கன்னத்தின் இருபுறமும் குழியும் குழிவுகள், மலரும் சிரிப்பு கண்களால் சிரிக்கும் கலை பார்த்த அன்றே பக்குவமாக அடி நெஞ்சில் சப்பணமிட்டு உட்கார்ந்து விட்ட அற்புதம். அவரைப் போல இலக்கண சுத்தமாகக் காதலிக்கத் தெரியவில்லை என்றாலும் காதலிக்கத் தெரிந்திருந்தது.

‘அ”வைக் கூடத் தலைகீழாக எழுதி அந்தப் புறம் உட்கார்ந்து தொட்டும் தொடாமலும் ஒரு கோடு போடும் அன்னம். அன்பு என்ற ஒற்றைச் சொல்லுக்காக மூன்று மாதம் எழுதக் கற்றுக் கொடுத்தவராம் ‘என்னைப்பா ஜெமினியின்ரை படம் போலக் கிடக்கடாப்பா’ ஒன்றும் சொல்லாமல் உதடு சுழித்துச் சிரிக்கிறார் மயிலர்

காலம் பறக்கிறது மயில்வாகனத்தாரின் தங்கைக்காரி நாலு பிள்ளையளோட புருசனை விட்டிட்டுத் தமையன் வீட்டை வந்தும் வரியக்கணக்காச்சுது. மயிலற்றை கலியாண விசயம் பற்றி எந்த அசுமாத்தமும் இல்லை.

“மச்சான் நானொருக்கா வந்து ஆச்சியோட கதைக்கட்டே. மெய்யே கேக்கிறன் எண்டு கோவிக்காதை, உன்ரை தங்கச்சி இனி உன்னோடதான் இருக்கப்போறா கண்டியோ அவையின்ரை முட்டல் மோதலிப்புக்கள் இட்ட இடைஞ்சல்களை பார்த்து கொண்டிரு, அவைக்கு வசதிதானே ஏன் யோசிக்க போயினம். பிறகு அவையின்ரை பாடுபறப்புக்களை ஆர்பாக்கிறதெண்டிட்டுப் பேசாமல் இருக்கினம்”, அருளருக்குக் கோபம் உச்சியைத் தொட்டது. தலையைக் குனிந்து கொண்டு மயில்வாகனம் உட்கார்ந்திருந்த கோலம் மனதை வதைக்கிறது.

“நீ அன்னத்தைக் கூட்டிக் கொண்டு என்ரை வீட்டை வா மிச்சத்தை நான் பாக்கிறன்”

எதுவும் நடக்கவில்லை.

‘அண்ணை நீயில்லையெண்டால் நான் நாலு பிள்ளையளோட நஞ்சுதான் குடிச்சிருப்பன் இப்படிச் சொல்லி சொல்லியே உசுப்பேத்தி உசுப்பேத்தி அவன்ரை வாழ்க்கையைச் சீரழிச்சுப் போட்டுதுகள். நாட்டுப் பிரச்சினையும் ஒன்றும் குறையிற மாதிரி இல்லை. பிள்ளையளும் விருத்தெரிஞ்சு நிண்டுதுகள் ஒண்டிரண்டு காணியளை வித்தும் ஈடுவைச்சும் ஒரு மாதிரி நாலையும் பிடிச்சு வெளிநாட்டிற்கனுப்பிப் போட்டான்.

“இப்பத்தான் தலைப்பாரம் குறைஞ்ச மாதிரி இருக்குது மச்சான். ஏதோ கஞ்சியோ கூழோ கொதிப்பிச்சுக் குடிச்சிட்டுக் கிடக்கலாம். சாவித்திரி என்னைப் பாப்பாள்”.

ஆனால் மயிலரைப் பற்றி ஆரும் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. நாலு மூண்டு வரியத்துக்கிடையிலை அதை இதைச் சொல்லி தாய்க்காரியையும் எடுப்பிச்சிட்டுதுகள். ஒருநாள் நெஞ்சுக்கை வைச்சிருக்கேலாமல் கொட்டிப் போட்டார். “என்னைப் பற்றி என்ரை சகோதரம்கூட யோசிக்கேல்லை மச்சான். துணியிலை ஒட்டின மண்ணை உதறுற மாதிரி உதறிக் கொட்டிட்டு போட்டுதுகள். நாளைக்கு இந்தக் கிழவனுக்கு ஆர் உதவி, என்ன செய்யும் எண்டு ஆராவது நினைச்சினமே”, அவரின் கண்கள் மௌனமாகக் கலங்கின.

‘விசர்க்கதை கதையாதை உனக்கு நாங்கள் இல்லையே பேசாமல் இரு...”

அட இப்பான் ஞாபகம் வருது சாவித்திரியும் காணி பூமி முன்னுரித்து பின்னுரித்து எண்டவள். ஒருக்காப் பாப்பம் மயிலரின் அந்தச் சிறிய அலுமாரியின் கதவை நிதானமாகத் திறக்கிறார் அருளர். கூடவே, விதானையார் ஹெட்மாஸ்டர் பரமகுரு, யூனியன் தலைவர் சிவபாதம்... காகிதக் குப்பைகளை விலக்கி விலக்கி உறுதிகள் என்று எழுதப்பட்ட உறையை அவர் கைகள் அவசரமாகப் பிரிக்கின்றன.

மூன்று நாட்களுக்கு முன் முத்திரையிடப்பட்டிருக்கிறது. “அப்பா சாவித்திரி உங்களோட கதைக்க வேணுமாம்...”, அவருக்குத் தெரியும் சொத்துகள் பற்றி கதைக்கிறதுக்கு மாஸ்ரர்...”

‘என்னுடைய சுயசம்பாத்தியமான ஆறரை ஏக்கர் செம்பாட்டுக் காணியும் அதனோடு சேர்ந்த அசையும், அசையாச் சொத்துக்கள் உள்ளடங்கலாகவும் துரவடி நாலு ஏக்கர் தென்னங்காணி ஊர்மனை இரண்டு ஏக்கர் பனங்காணி கொட்டுக் கிணத்து வயல், பதினொரு ஏக்கர் எனக்குப் பின் எனது வளர்ப்பு மகன் தம்பித்துரை கணேசதுரைக்கும் பள்ளிக்கூடத்தடி நாலு ஏக்கர் காணியை முதியோர் விடுதியமைக்க அன்பளிப்பாகவும் அறுதியாகவும் வழங்கி சுய நினைவுடனும் சுயவிருப்புடனும் சாட்சிகள் முகதாவில் கையொப்பமிடுகிறேன் சாட்சிகள் வைரமுத்து பூசாரி, கதிரவேலு ஆச்சாரி

பூசாரியும் ஆசாரியும் திகைத்துக் கிடக்கிறார்கள், “இதிலை ஒரு கையெழுத்துப் போடுங்கோ எண்டார் போட்டம் என்ன ஏதெண்டு கேக்கேல்லை...”

ரெலிபோனைக் கம்பீரமாகப் பிடித்தபடி மீண்டும் ஒருமுறை அழுத்தி வாசிக்கிறார் மாஸ்ரர் அந்தப் பக்கம் ரெலிபோன் ‘டக்”கடிக்கிறது.

‘இனி என்ன ஒரு சுணக்கமுமில்லை. அவருக்கு முன்னமேயே ஏதோ அசுமாத்தம் தெரிஞ்சிருக்கு. கணேசதுரை கொள்ளி வைக்கலாம். பெஞ்சாதி கர்ப்பணியாம்... அது கூடாது. நான் வைக்கிறன் அவனுக்குக் கொள்ளி நீங்கள் மற்ற விசயங்களை ஆயத்தப்படுத்துங்கோ...”

சங்கத்திட்டி கற்குளத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வு பெற்ற ஆசிரியர் மார்க்கண்டர் மயில்வாகனம் அவர்கள் காலமானார். இவர் ஓய்வு பெற்ற ஆசிரியர் நடேசர் அருளம்பலத்தின் ஒன்றுவிட்ட சகோதரரும் தம்பித்துரை கணேசதுரையின் வளர்ப்புத் தந்தையுமாவார். இவரின் தகனக்கிரியைகள்... ●

நா.யோகேந்திரநாதன்

# நீந்திக் கடந்த நெருப்பாறு 74

நன்றி தமிழ்லீடர் - அவுஸ்ரேலியா

“ஆயிரம் அடி வாழை கிடக்குது... எல்லாம் குலை போட்டதும் போடாதது மாய் கிடக்குது”, என்றார் வேலுப்பிள்ளை ஒரு பெருமூச்சுடன்.

காயும் பழமுமாய் இரண்டு ஏக்கர் மிளகாய்த் தோட்டத்தை விட்டு வந்தது பரமசிவத்தின் நினைவில் வந்துபோனது.

அவர்கள் கதைத்துக் கொண்டிருக்கும்போதே இரு விமானங்கள் வெள்ளாங்குளம் பக்கம் குண்டுகளை வீசிவிட்டு மேலெழுந்தன. விழுந்த குண்டுகளின் அதிர்வு பரமசிவத்தின் தகரக் கொட்டிலை அதிர வைத்தது.



அன்று இரவு எட்டு மணியளவில் சிவம் அணியினர் தங்கியிருந்த முகாமுக்கு அரசியல்துறைப் பொறுப்பாளர் வந்திருந்தார். அவர் வந்து சேர்ந்த சிறிது நேரத்தில் எல்லோரையும் ஒரு இடத்தில் கூடும்படி கட்டளை வந்தது. வழமையாக யாராவது பொறுப்பாளர்கள் வருவதாக இருந்தால் முதலில் போராளிகள் கூட்டப்பட்டு விடுவார்கள். அதன் பின்பே அவர்கள் வருவார்கள்.

இன்று அவர் வந்த பின்பே கூட்டம் கூட்டப்படடது. சிவத்துக்கு ஏதோ வித்தியாசமாகப்பட்டது. யாரோ ஒரு முக்கிய பொறுப்பாளர் வரப்போகிறார் என்ற விஷயம் தங்களுக்கே தெரியக்கூடாது என்பதற்காக அப்படி ஒரு மாற்றம் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் எனக் கருதினான் சிவம்.

மாவீரர் வணக்கத்தைத் தொடர்ந்து பொறுப்பாளர் பேச ஆரம்பித்தார். எந்நேரமும் சிரித்த முகத்துடன் காணப்படும் அவரின் முகம் கூட வாட்டமடைந்திருந்தது, “உங்கள் எல்லோரிட்டையும் அண்ண, தன்ரை சார்பிலை என்னை மன்னிப்புக் கேட்கச் சொல்லியிருக்கிறார்”, போராளிகள் அதிர்ந்து போய்விட்டனர். போராளிகளிடம் தலைவர் மன்னிப்புக் கேட்குமளவுக்கு அப்படி அவர் ஒரு பிழை செய்திருப்பார் என அவர்களால் நம்பமுடியவில்லை.

திடீரென மங்களா எழுந்தாள், “அண்ணை ஒரு நாளும் பிழை செய்யமாட்டார். நீங்கள் சொல்லுறதை எங்களாலை ஏற்கமுடியாது”, சில விநாடிகள் அமைதி நிலவியது.

அரசியல்துறைப் பொறுப்பாளர் தொடர்ந்தார், “அண்ணை நேரடியாக எந்தப் பிழையும் செய்யேல்லை. ஆனால் இயக்கத்தின்ரை முக்கிய பொறுப்பிலை இருக்கிற ஆரோ எதிரியின்ரை கையாளாக மாறிப் பெரிய, ‘துரோகம்’ செய்துகொண்டிருக்கிறதாக தெரிய வந்திருக்குது. அப்பிடி ஒரு நிலைமை எங்கட புனிதமான இயக்கத்துக்கை ஏற்பட்டதுக்கு, அண்ணை, தானே தார்மீகப் பொறுப்பேற்று உங்களிட்டை மன்னிப்புக் கேக்கிறார்.”, பின்பு அவர் தொடர்ந்து கதைக்க முடியாமல் இடைநிறுத்தினார்.

“ஆனபடியால் சகல காவலரண்கள், முகாம்கள் எல்லாத்தையும் இடம் மாத்தச் சொல்லீட்டார். அந்த வகையிலை நாங்கள் இலுப்பைக் கடவை லைனைப் பின்னுக்கு எடுத்ததோட முகாம்களையும் மாத்திப்போட்டம்”, என்றார் அவர்.

‘துரோகம்’ என்ற சொல்லே போராளிகளிடம் ஆவேசத்தை மூட்டியபோதும் அவர்கள் எதுவுமே பேசவில்லை. மேலும், அவர் மூன்றுமுறிப்பு முகாம் தாக்கப்படப்போகும் தகவல் இராணுவத்திற்கு முதலே போய்ச்சேர்ந்துவிட்டதால் அவர்கள் எல்லாவிதத் தயார்ப்படுத்தல்களுடனும் இருந்ததாகவும், எரிபொருள் களஞ்சியம் இருக்கும் இடமும் அப்பிடியே அழிக்கப்பட்டு விட்டதாகவும் தெரிவித்தார். எப்படியும் வெகு விரைவில் துரோகியைப் பிடித்துவிடலாம் என உறுதி கூறி அவர் தனது உரையை முடித்தார்.

போராளிகள் அத்தனைபேருமே அதிர்ச்சியில் உறைந்து போய்விட்டனர். சிவம் கூட ஏற்கனவே ஏதோ ஒரு விதமான காட்டிக்கொடுப்பு நடந்திருக்கலாம் எனக் கருதியிருந்தபோதிலும் இப்படியொரு திட்டமிட்ட பெரும் துரோகம் இழைக்கப்பட்டதை எதிர்பார்க்கவில்லை.

திடீரென மலையவன் எழுந்தான், “அண்ணை! துரோகியைப் பிடிச்சவுடனை எங்கடை கையில தாங்கோ. வீரச்சாவடைஞ்ச போராளியளின்ரை எண்ணிக்கை அளவு துண்டுகளாக அவனை வெட்டவேணும்”

அரசியல்துறைப் பொறுப்பாளர் நிதானமாக, “உங்கடை உணர்வை நான் மதிக்கிறன். எனக்கும் இப்பிடியான கோபம் உண்டு. ஆனால் இந்த வேலையளுக்கு வேறை ஒரு பிரிவு இருக்குது. பிடிபடுகிற துரோகியை வைச்சு அவனோடை தொடர்புடைய கனபேரைப் பிடிக்கவேணும்” என்றார்.

போராளிகள் மத்தியில் நிலவிய அமைதி அவரின் கருத்துக்களை அவர்கள் ஏற்றுக்கொண்டதைக் காட்டியது. அவர் தொடர்ந்தார், “உங்களிலை நிறையப்பேர் சாப்பிடயில்லை எண்டு தெரிவிக்கப்படுது. அதாலை ஒரு பிரயோசனமும் இல்லை. வடிவாய்ச் சாப்பிட்டு அடுத்த சண்டைக்குத் தயாராகுங்கோ. தோல்வியை வெற்றியாலை ஈடுசெய்வம்.”, சில விநாடிகள் இடைநிறுத்திவிட்டு, “தலைவர் நடந்த தவறைத்தானே பொறுப்பேற்று தனக்குத்தானே தண்டனை குடுத்திருக்கிறார். மூண்டு நாள்களுக்கு சாப்பாடு, தண்ணீர் இல்லாமல் உண்ணாநோன்பு இருக்கிறார்”, என்றார்.


போராளிகளிடம் மயான அமைதி நிலவியது. தலைவர் ஒரு முடிவை எடுத்தால் அதை எவராலும் மாற்றமுடியாது என்பதை அவர்கள் நன்கறிவார்கள். இரவு எல்லோரும் ஒன்றாக உணவருந்திவிட்டு இரவு பன்னிரண்டு மணியளவில் அரசியல்துறைப் பொறுப்பாளர் புறப்பட்டுச் சென்றார். அன்று மாலை விமானங்கள் இலுப்பைக்கடவையில் உள்ள போராளிகளின் பிரதான முகாம் மீது குண்டுகளைப் பொழிந்தன.

வெள்ளாங்குளத்திலும் சேவாலங்கா குடியிருப்பின் மீதும் இரண்டு குண்டுகள் வீசப்பட்டன. அன்று பகலே மக்கள் அங்கிருந்து வெளியேறிவிட்டதால் எவ்வித உயிரிழப்புக்களும் ஏற்படவில்லை. இரவு ஏறக்குறைய பன்னிரண்டு மணி வரை இலுப்பைக்கடவையை நோக்கி படையினரின் எறிகணைகள் வீசப்பட்டன. ஒவ்வொரு எறிகணையும் இலக்குத் தவறாமல் இலுப்பைக் கடவையில் பறங்கியாற்றின் கரையிலிருந்த போராளிகளின் காவல் நிலைகள் மேல் விழுந்து வெடித்தன.

இலுப்பைக் கடவையில் நடத்தப்பட்ட தாக்குதல்களின் அதிர்வில் தேவன்பிட்டி ஆலயத்தின் கண்ணாடி யன்னல்கள் நொருங்கி விழுந்தன. இப்படியான ஒரு பெரும்தாக்குதலின் போதுமகூட ஒரு போராளிக்கு சிறு காயம் தன்னிலும் ஏற்படவில்லை. மூன்றுமுறிப்பு முகாம் தாக்குதல் தோல்வியடைந்த சில மணி நேரத்திலேயே தலைமைப் பீடத்திலிருந்து இலுப்பைக்கடவையை விட்டு முற்று முழுதாக வெளியேறும்படி கட்டளை வந்துவிட்டது. அவர்கள் பொழுது விடியும் முன்பே முழுமையாக வெள்ளாங்குளம் நோக்கி நகர்ந்துவிட்டனர். அவர்கள் பின்னோக்கிய நகர்வை மேற்கொண்டிருக்கும்போதே வேறு போராளி அணிகளாலும் பொதுமக்களாலும் வெள்ளாங்குளத்தில் பாம்பு பங்கர்கள் தயாராகிவிட்டன. பிரதான முகாம் பல்லவராயன் கட்டுக்கு நகர்த்தப்பட்டுவிட்டது.

(நெருப்பாற்றில் நீந்துவோம்)

தொகுப்பு: ஏ.ஜே.ஞானேந்திரன்




# அருகும் மரண தண்டனைகள்

மரண தண்டனையை மீண்டும் அமுலுக்குக் கொண்டுவர, இலங்கை மீசையை முறுக்கிக் கொண்டிருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில், உலக நாடுகளில் மரண தண்டனைகள் நிறைவேற்றப்படும் தொகை, கடந்த ஆண்டு வீழ்ச்சி கண்டிருக்கின்றது. கடந்த ஒரு தசாப்த காலத்தில் நிகழாத சம்பவம் இது என்கிறது “அம்னெஸ்டி இன்ரர்நஷனல்” அமைப்பு. குறிப்பாக ஈரானில் நிறைவேற்றப்படும் மரண தண்டனைகளின் தொகை 50 சதவீத வீழ்ச்சியைக் கண்டுள்ளதாம்.

போதைவஸ்து பாவனைக்கு எதிரான சட்டங்களில் மாற்றங்கள் ஏற்படுத்தியமைதான் இதற்கான காரணம் என்கிறார்கள். ரஷ்ய நாடான பெலாறஸ், ஜப்பான். சிங்கப்பூர், தென்சூடான், அமெரிக்கா ஆகிய நாடுகளில் மரண தண்டனை விதிக்கப்பட்டவர்களின் தொகை கடந்த வருடம் அதிகரித்துள்ளது. தாய்லாந்து ஒரு தசாப்த கால இடைவெளியில் மீண்டும் மரண தண்டனையை அறிமுகப்படுத்தியிருக்கின்றது. சமீபத்தில் தூக்கு மேடையைச் சீர்செய்து பார்த்துள்ள இலங்கையும் விட்டேனா பார் என்று தயாராகிக் கொண்டிருக்கின்றது. இன்றைய நிலையில் மரண தண்டனைகளை நிறைவேற்றுவதில் முதலிடம் ஈரானுக்கும்(253) இரண்டாம் இடம் சவுதி அரேபியாவுக்கும்(149) போக மூன்றாம் இடத்தில் வியட்நாமும் உள்ளன.

# உயரமானவன் நான்...

வெப்ப வலய நாடுகளில் ஓங்கி உயர்ந்து வளரும் மரங்களில், மலேசியாவின் மரமொன்று சம்பியன் பட்டத்தைப் பெற்றுள்ளது. உலகின் மிக உயரமான இந்த மரம் மலேசியாவின் “சபா” என்ற மாவட்டத்தில் காணப்படுகின்றது. மலேசிய மொழியில் கோபுரம் என்று பொருள் தரும் வகையில். மெனாரா என்று பெயரிட்டுள்ளார்கள். இதன் எடை 180,000 இறாத்தல்கள்(81646 கிலோ)! இதன் உயரம் 330அடி!

இந்த மரம் வெப்ப வலய நாடுகளில் சரித்திரம் படைக்க, உலகில் அதி உயர்ந்த மரம் எதுவென்ற கேள்வி எழுகின்றதல்லவா? “Hyperion” என்று பெயரிடப்பட்ட 379.7 அடி உயரமான றெட்வுட் என்ற இன மரம்தான் அந்தப் பெருமையைப் பெறுகின்றது. இது கலிபோர்னியாவின் தேசிய பூங்காவில் காணப்படுகின்றது.




# ரோபோக்களின் இராஜாங்கம்

2050ஆம் ஆண்டளவில் வீடுகளில் ரோபோ இருப்பது சாதாரண விடயமாகி விடும் என்கிறார் பிரிட்டனின் பேராசிரியர் டாக்டர் பியர்சன். "செயற்கையான புத்திசாலிகள்” அளிக்கும் வீட்டுச் சேவைகளுக்கு கட்டணமும் அறவிடப்படலாம் என்கிறார் இவர். இன்னும் 30 வருட காலத்தில் அனேகமான பிரித்தானியர்கள் வீடுகளில் தங்கள் வீட்டுச் சமையல் வேலைகளைக் கவனிக்கவோ அல்லது வீடுகளைத் துப்பரவாக்கும் பணிகளை மேற்கொள்ள அங்குமிங்குமாக ரோபோக்களே சுறறிக்கொண்டிருக்கும் என்பது இவரது கணிப்பு.




இப்போதுள்ள “ஸ்மார்ட்” அலைபேசிகளைப் போல, மனி உடல் வெளி வெப்பநிலைக்கு ஏற்ப தன்னைச் சீராக்கி கொள்ளும் விதத்தில் உடலில் கதிர்கள் பாய்ச்சப்படும் என்கிறார். இனிவரும் காலங்களில் காலத்திற்கு காலம் வீட்டுக்கு தனி அழகைச் கொடுக்க, ஒரு “கிளிக்கில” இது சாத்தியப்படும் நிலை வரும் என்கிறார்.

2050இல் உலக றோபோக்களின் தொ 9.4 பில்லியனைத் தொடும் என்றும், உலக சனத்தொகையை விட , 5 சதவீதம் அதிக இருக்கும் என்றும் இன்னொரு அதிர்ச்சிக் குண்டை வீசுகிறார் இந்தப் பேராசிரியர்!

# துப்பாக்கிகளை முந்தும் துர்பாக்கியம்

கலவரங்களால் மிரளும் ஆபிரிக்க நாடான லிபியாவில் துப்பாக்கிச் சூடுகளில் இறப்பவர்கள் தொகையை விட, வீதி விபத்துக்களால் இறப்பவர்கள் தொகை அதிகம் என்று தெரியவந்துள்ளது. தலைநகரான ரிப்பொலியில் உள்ள ஒரு பொதுஜன பூங்காவில் அநாதரவாக விடப்பட்டுள்ள நூற்றுக்கணக்கான சேதமடைந்த கார்கள் இதற்குச் சான்று பகர்கின்றன. சில வாகனங்களில் இன்னும் இரத்தக் கறை காணப்படுகின்றது என்பது நம்மை அதிர வைக்கும் தகவல். சிலவற்றில் அடிப்பட்டவர் அணிந்திருந்த ஆடையின் ஒரு பகுதியும், கிழிந்த காலணியும் தொங்கிக் கொண்டு கிடக்கின்றனவாம்!

2018 இல் மாத்திரம் 4,115 வீதி விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன. 2,500 பேர் கொல்லப்பட, 3,000பேர் வரையில் காயமடைந்தனர் என்கிறது உள்விவகார அமைச்சு. இந்த அமைச்சின் பேச்சாளர் இது பற்றிக் குறிப்பிடுகையில். “வீதி விபத்துக்களில் இன்று உலக சம்பியனாகி இருக்கின்றது லிபியா” என்று குறிப்பிட்டுள்ளார். 6 மில்லியனுக்கு மேற்பட்ட சனத்தொகை கொண்ட இங்கு 4.5 மில்லியனுக்கு மேல் வாகனங்கள் இருக்கின்றன. குடிநீரை விட பெற்றோல் இங்கே மலிவு.



# வாளெடுத்தவனுக்கு வாளால் சாவு



களவில் மிருகங்களை வேட்டையாடி தன் பிழைப்பை ஓட்டிவந்த ஒருவரை, அந்தக் காட்டு மிருகங்களே ஒரு கை பார்த்திருக்கின்றன. தென்னாபிரிக்காவின் பிரபல்யமான குரூகர் தேசிய பூங்காவில்தான் இந்தக் கொலைவெறி அரங்கேறியுள்ளது. வழமைபோல களவாக நுழைந்த இந்த வேட்டைக்காரரை யானை ஒன்று மிதித்து துவம்சம் செய்ய, சிங்கங்கள் அவர் உடலைக் கடித்துக் குதறி இராப் போசனமாக்கி இருக்கின்றன.

இவர் தனியாக காட்டுக்குள் நுழையவில்லை. இவருடன் கூடச் சென்ற நண்பர்கள் யானையிடம் மிதிபடும் நண்பனை நேரில் பார்த்துள்ளார்கள். தப்பினோம் பிழைத்தோம் என்று அலறியடித்துக் கொண்டு வெளியே ஓடி வந்துள்ளார்கள். இருள முன்பு வேட்டைக்காரரது உடலை மீட்கச் சென்ற பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கு, சிங்கங்கள் உண்டு கழித்த, உடம்பின் மண்டையோடு மாத்திரமே கிடைத்துள்ளது.

# ஆரிட்டை சொல்லி அழ?



## இது நாட்டு நடப்பைப் பற்றிய ஒரு (வி)சித்திரத் தொடர்

### அம்மணமா விட்டு அலுவல் பாத்திருந்தால் அப்ப தெரியும் ஏன் போர்க்குற்ற விசாரணை தேவை எண்டு?

சண்டை செய்தனாங்கள். சத்தியமாச் சொல்லுறன். இன்னும் அதை நாங்கள். நெஞ்சிலை வைச்சிருக்கேல்லை. ஆனால் சிலபேர் அதுகளை மறக்கமாட்டன் எண்டு அடம்பிடிக்கினம். ஆனால் ஒண்டு சொல்லுறன். எல்லாரும் பிழை விடுறதுதான். பிறகு திருந்தவேணும். அது மாதிரி நாங்கள் அது தான் எங்கடை ஆமிழ்படையள் புலியளோடை சண்டை செய்தனாங்கள்தான். அவை சண்டையிலை தோத்துப்போனாப் பிறகு. நாங்கள் அதை இப்ப மறந்துபோய் உங்களோடை ஐக்கியப் பட வெளிக்கிட்டிட்டம் எண்டு சொல்லுறார் இப்ப யாழ்மாடவட்டத்துக்குப் பொறுப்பா இருக்கிற ஆமிப் பெரியவர் ஜெனரல் தர்சன ஹெட்டியாராச்சி.

நாங்களும் மனுசர்கள்தானே? எங்களுக்கும் அப்பா, அம்மா. சகோதர சகோதரியள் உறவுகள் எண்டு எல்லாரும் இருக்கினம். இழப்பு என்னதெண்டு எங்களுக்கும் தெரியும். ஏங்கிற ஏக்கம் என்னதெண்டும் எங்களுக்கு நல்ல விளக்கம் இருக்கு. அப்ப நாங்கள் பிழை விடுவமோ?

இப்ப சண்டைக்குப் பிறகு தமிழ் ஆக்கள் இருக்கிறதுக்கு இடம் இல்லாமல், உடுக்க உடுப்புகளுமில்லாமல், சாப்பிடச் சாப்பாடும் இல்லாமல் அந்தரிச்சுக்கொண்டு திரியினம். அதாலை அவைக்கு என்ன என்ன செய்ய வேணுமோ அதைச் செய்து கொண்டு வாறம்.அவைக்குரிய சகல தேவைகளையும் செய்து குடுக்க வேணும் எண்ட அந்தரிப்போடை ஒவ்வொரு ஆமியும் இப்ப பாடுபடுகினம். அதாலை பல தமிழ் ஆக்கள் இப்ப கொஞ்சம், கொஞ்சமா.மனம் மாறிக் கொண்டு வருகினம்.

நாங்களும் இனிமேல் விடாமல் தமிழ் ஆக்களுக்கு உதவியளைச் செய்யப்போறம். காலப்போக்கிலை அவையளா எங்களை விளங்கிக்கொண்டு எங்களை ஏற்றுக் கொள்ளுவினம். அப்ப எல்லாருக்கும் எங்கடை அருமை தெரியும். ஏன் நாங்கள் சண்டைப் பிடிச்சனாங்கள் எண்ட விசியமும் தெரியவரும்.

குடும்பத்துக்கை சண்டை வருகுது. புருசன் பெண்சாதிக்குள்ளையும் சண்டை வருகுது. சகோரங்களுக்குமிடையிலை பிணக்குகள் வருகுது. ஏன் வெட்டுக் கொத்து வரையும் போன பிரச்சினைகள்.. பிறகு ஆற ஆற ஒரு வழிக்கு வந்து ஆக்கள் ஒண்டு சேரேல்லையே? அப்பிடித்தான் ஒவ்வொண்டும்.

இப்பிடி ஆமிப் பெரியவரும் சொல்லுறார். கிட்டடியிலை கிளிநொச்சிக்கு வந்த பிரதமர் ரணிலும் சொன்னவர். ஏன்? எங்கடை தமிழ் தேசியக் கூட்டமைப்புப் பேச்சாளர் சுமந்திரனும் என்ன சொல்லுறார்? எண்டால் "சும்மா பழைய கதையளைக் கிழறிக் கிழறிக் கதைச்சுக் கொண்டு திரியாமை இனிமேல் நடக்கிறதைப் பாருங்கோ. சும்மா நடக்கிற காரியத்தைப் பற்றிக் கதைச்சாலும் ஏதேன் பிரியோசனமா இருக்கும். இது அதை விட்டிட்டு போராட்டம், எதிர்ப்பு எண்டு எல்லாத்தையும் செய்யிறதாலை எங்களாலை தெற்கிலை சிங்களவரோடை சந்தோஷமா இருக்கேலாமைக் கிடக்கு. என்னத்தைக் கதைக்க எடுத்தாலும் அவை உடனை "உங்கடை ஆக்கள் ஏன் எங்களிலை பழி சொல்லிக் கொண்டு இருக்கினம். ஆமிக்குத் தண்டனை வாங்கிக் குடுக்க நிக்கினம்." எண்டு அதை..இதைக் கேட்டு எங்களை மடக்கினம். சரி செத்தவை செத்துப் போச்சினம். இருக்கிறவையாவது சிங்களவர் என்னத்தைத் தர ஆசைப்படுகினமோ? அதை வேண்டிக்கொண்டு எங்கடை அலுவல்களைப் பாப்பம் எண்டுதானே சொல்லுறன்.சும்ம தமிழ் தேசியம், அடிப்படை உரிமை கத்தரிக்காய், புடலங்காய் எண்டு கதைச்சுக் கொண்டிருக்கிறதாலை ஒண்டும் நடவாது.ஏதோ எனக்குத் தெரிஞ்சதைச் சொல்லிப் போட்டன். மிச்சத்தை நீங்கள் யோசிச்சுச் செய்யுங்கோ. என்ன?" எண்டு அவற்றை அப்புக்காத்து அட்வைஸ்.

அப்ப சண்டை நடக்கேக்கை இல்லாததெல்லாம் இப்ப வந்து ஆமிமட்டுமில்லைப் புலியளும் பிழைவிட்டிட்டினம். அப்ப எல்லாம் சரிக்குச் சரியாத்தான் நடந்திருக்கு எண்டு சமாதானம் சொல்லித்திரியினம். அப்புக்காத்துக்கு முன்னாலை அப்புக்காத்தின்ரை மனுசியை அம்மணமா வைச்சு ஆமிக்காரன் அலுவல் பாத்திருந்தால் அப்ப அவருக்குத் தெரியும் ஏன் போர்க்குற்ற விசாரணை வேணும் எண்டு? புலியள் சிங்களக் குடும்பத்தைப் பிடிச்சு ஆம்பிளையளுக்கு முன்னாலை பொம்பிளையளை மானபங்கப்படுத்தேல்லை. பாலுறவு கொள்ளேல்லை. சிதைக்கேல்லை. சின்னா பின்னப் படித்தேல்லை. அப்பிடி ஆமியும் பிடிச்சவையளை. சுட்டுக் கொண்டிருந்தால் பறவாயில்லை. உப்பிடிச் சீரழிச்சிருக்கத் தேவை இல்லை....! ஆமிமாரைச் சொல்லிக் குற்றமில்லை. அதிகாரியளுக்குப் போர்க்குற்ற விசாரணை தேவை. ஏனெண்டால் அவைதான் எல்லாக் கேவலங்களையும் செய்யச் சொன்னவை..?

**- கோளரங்கன்**

---

# நெருஞ்சி முள்....

(15ஆம் பக்கத் தொடர்ச்சி)

தேர்ந்த தனது நெடிய அனுபவத்தினை வெளிப்படுத்தியிருக்கின்றார்.

ஓரிரு குறும்படங்களை மட்டுமே தனது தொலைபேசிக் கமராவின் மூலம் ஏற்கனவே எடுத்து முன் அனுபவம் பெற்ற ஒளிப்பதிவாளரான யூட் குறுகிய தொழில்நுட்ப வசதியுடன் உதவி ஒளிப்பதிவாளர்கள் எவருமின்றித் தனித்து இந்தத் திரை ஓவியத்தைத் தந்தமைக்கு எத்தனை முறை மெச்சினும் தகும்.

ஒவ்வொரு காட்சியும் மனதில் நிற்பதாக அமைந்திருப்பது படத்தின் சிறப்பாகும். அதற்கான காரணம் அது எங்களது மொழியில் அமைந்திருப்பதும் எங்களது வாழ்நிலையைச் சித்திரிப்பதும் என்பதுவே என்றாலும் குறிப்பான காரணம் நடிகர்களின் இயல்பான தோற்றமும் அவர்களது சிறப்பான நடிப்பும் தான் என்று சொல்வது மிகையான கூற்றாக அமையாது. எல்லோருமே நடித்திருக்கிறார்கள் என்றாலும் குறிப்பிட்டுக்கூறத்தக்க வகையில் தமது பண்பட்ட நடிப்பில் மெச்சத்தக்க நிலையில் இருப்பவர்கள் நாயகியின் மாமனாராக நடித்த மகாலிங்கமும் சிங்கள ஆயுள்வேத வைத்தியராக நடித்த காளிதாஸூம். கதையின் நாயகியாக நடித்த அறிமுக நடிகை சஞ்சிதா எதிர்பார்ப்பை விட நடிப்பில் தூக்கலாகவே இருக்கின்றார். குழந்தை நட்சத்திரங்கள் உட்பட துணை நடிகர்கள் நடிப்பும் பாராட்டத்தக்கது.

தனது மகனை அடித்துவிட்டான் என்று கோபத்தோடு வந்த தந்தை தனது மகனின் பக்கமே பிழை இருப்பதைத் தெரிந்துகொண்டு தனது மகனை தண்டிக்கப்போனபோது அந்த மகனின் தாய் சொல்லும் வார்த்தை புருசன் இல்லாத பெண்கள் பற்றிய இந்தச் சமூகத்தின் உணர்வை வெளிப்படுத்துவதாக இருக்கின்றது. இந்த இடத்தில் ஒவ்வொருவரினதும் நடிப்பு மனக்கண் முன் நிற்பதாக இருக்கின்றது.

புலனாய்வுத் துறையினர் விசாரணையின் போது சிங்களவர் புலிகளிடம் காசு வேண்டிக்கொண்டு செயற்படுகிறார்கள். அவர்களைப் போன்றுதான் நீர் காயப்பட்ட புலிக்கு உதவுகிறீர் என்ற வகையில் உரைத்தபோது நான் சுத்தச் சிங்களவன் எனச் சொல்லும் அந்த மனிதநேயமிக்க உரையின் போது இருவரின் நடிப்பும் மனதில் பதியத்தக்க காட்சியாக இருக்கின்றது.

புலம்பெயர்ந்த இளைஞர் போரில் பாதிக்கப்பட்ட விதவைப் பெண்ணைத் திருமணம் புரியவேண்டும் என்று முன்வருகின்றார். காணாமலாக்கப்பட்ட கணவன் இறந்ததாக நம்பவைக்கப்பட்ட பெண் குடும்பத்தவர்களால் நெருக்குவாரத்திற்குட்பட்டு திருமணத்திற்கு சம்மதிக்க இருவரது உரையாடலின்போது என்மேல் பச்சாதாபப்பட்டுத்தானே கலியாணம் செய்கிறீர்கள் என்று பெண் உரைத்த போது அவன் இல்லை பிராயச்சித்தம் என்று கூறி புலம்பெயர்ந்தோர் உணர்வுகளைக் கொட்டும் போது அவர்களது நடிப்பு மீள நினைக்க வைக்கின்றது.

காணாமலாக்கப்பட்ட கணவனைத் தேடும் மனைவியின் ஒவ்வொரு நகர்வும் பிள்ளையோடு படும் வேதனையும் மிக நேர்த்தியாக காட்சிக் கலவையாக மனக் கண் முன் நிற்கும் வகையில் படமாக்கப்பட்டிருக்கின்றது. காணாமலாக்கப்பட்ட கணவனை தேடிக் காண்கிறார்களா? அரசு அதுபற்றி அக்கறை கொள்கிறதா? காணாமல் ஆக்கப்படுவதன் பின் விளைவுகள் என்ன என்பதைக் காண ஒருமுறை இந்தத் திரைப்படத்தை எல்லோரும் பார்த்தாலே புரிந்து கொள்ளமுடியும்.

நெஞ்சில் நெருஞ்சி முள்ளாய் குத்தும் இந்தத் திரை ஓவியம் அதிகார வர்க்க இனவாத அரசியலுக்கு மாற்றாகப் புலம்பெயர் மக்கள் பாதிக்கப்பட்ட ஈழத் தமிழர்கள், பாதிக்கப்பட்ட சிங்கள மக்கள் தங்களுக்கான பங்கெடுப்பு அரசியலை முன்னெடுக்க வேண்டுமென்ற உண்மையை மறைபொருளாக நுட்பமாகப் பேசுகின்றது.

# குதியடிக் குளம்

குதிரையின் காலடித் தடத்தின் வடிவத்தில் அமைந்ததாலேயே இந்தப் பெயர் ஏற்பட்டது எனக் கூறுவர். இந்தக் குளத்துக்கும் சங்கிலியன் மன்னனுக்கும் நெருங்கிய வரலாற்றுத் தொடர்பு உண்டு.


சங்கிலி மன்னன் கோப்பாயில் தனது மாளிகை ஒன்றை நிறுவியிருந்தான். இங்கு தங்கியிருக்கும் நாள்களில் இந்தக் குளத்திலேயே அவன் நீராடினான் என வரலாறு கூறுகிறது.


யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதியில் கோப்பாய் சந்திக்கும் - பிரதேச செயலகத்திற்கும் இடையே கிழக்குப் பக்கத்தில் உள்ள ஒழுங்கை ஒன்றினூடாக சென்றே இந்தக் குளத்தை அடைய முடியும்.

பாழடைந்து கிடந்த இந்தக் குளம் கடந்த சில வருடங்களுக்கு முன்னர் கட்டப்பட்டு திருத்தம் செய்யப்பட்டுள்ளது. போர் காலத்தில் இந்தப் பிரதேசம் பல களங் களைக் கண்டது. இதையொட்டிய பகுதி யில் செங்கல் மேடுகள் நிறைந்து கிடக் கின்றன. இவை சங்கிலியன் மாளிகையின் இடிபாடுகள் என அறியப்படுகின்றன.

ஆய்வுகளுக்கு உட்படுத்தப்பட வேண்டிய இந்தப் பகுதியில் பல

வரலாற்று உண்மைகள் மறைந்து கிடக்கின்றன.





# பச்சைமிளகாய் கறி

பருத்தித்துறை உணவுக்குப் புகழ்பெற்ற பிரதேசம். அதிலும் ஓடக்கரை தோசை, அப்பம் என்பவற்றுக்குப் பெயர்போன இடம்.

பருத்தித்துறை துறைமுகமாக இருந்ததால் அரசர் காலத்தில் இருந்தே இந்தப் பிரதேசம் முக்கியத்துவம் பெற்றிருந்தது. துறைமுக நகரம் என்பதால் உணவு வகைகளும் தாராளம்.

பருத்தித்துறை - ஓடக்கரையில் தோசை, அப்பம் என எந்நேரமும் ஒரு காலத்தில் உணவுகள் கிடைத்தன. தோசையுடன் தொட்டுச் சாப்பிடுவதற்காகப் பலவகை சம்பல் வகைகளும் பிரசித்தமாக இருந்தன.

இவ்வாறு பிரபலமானதே மிளகாய் கறி. பச்சைமிளகாய், வெங்காயம், புளி, உப்பு என்பவற்றைக் கொண்டு தயாரிக்கப்படும் இந்தக் கறி உறைப்புப் பிரியர்களுக்கு மிகப் பிடித்தமான தொடுகறி.


# தட்சிண கைலாய புராணம்

தட்சிண கைலாய / தக்கண கைலாய புராணம் என்பது யாழ்ப்பாணத்து அரசர் காலத்தில் எழுந்த இலக்கியமாகும்.

இந்த நூலின் ஆசிரியர் குறித்து வரலாற்றாசிரியர்களிடத்தில் பெரும் குழப்பம் உள்ளது. தமிழ் கவிதைக் களஞ்சியம் என்ற நூலின் தகவலின்படி இந்நூலை பரராசசேகர மன்னனி சகோதரனும் பின்னாளில் யாழ்ப்பாண இராசதானியை விரிவுபடுத்தி ஆட்சி செய்தவனுமான செகராசசேகரன் இயற்றினார் எனக் கூறுகிறது.

இந்த மன்னனே சரஸ்வதி மகாலயம் என்ற பெரும் நூலகத்தை யாழ்ப்பாணத்தில் அமைத்திருந்தான் என்றும் இது பின்னாளில் போர்த்துக்கேயரால் எரியூட்டி அழிக்கப்பட்டது என்றும் வரலாற்றாசிரியர்கள் கூறுகிறார்கள்.

இந்நூலின் ஆசிரியர்கள் விடயத்தில் குழப்பம் நீடித்தாலும், இது யாழ்ப்பாணத்தரசர் காலத்தில் எழுந்த நூல் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. திருகோணேஸ்வரர் ஆலயத்தின் புகழ்பாடும் இந்தப் புராணம் 7 சருக்கங்களையும் 635 செய்யுள்களையும் கொண்டு, விருத்தப்பாவால் பாடப்பட்டது.



# ஒத்தாப்பு

ஒத்தாப்பு என்ற சொல் இப்போது வழக்கொழிந்து போன ஈழத்து பேச்சு மொழிச் சொற்களில் ஒன்று.

வீட்டை ஒட்டி தாழ்வாரத்துடன் இணைந்ததாக இறக்கப்பட்ட பகுதியே ஒத்தாப்பு என அழைக்கப்பட்டது. இப்போதைய பேச்சுவழக்கில், 'பத்தி" என இது அழைக்கப்படுகிறது.

ஒத்தாப்பு என்ற சொல் ஆதரவு, உதவி என்ற சொல்லுக்கு இணையாகவும் பயன்படுத்தப்பட்டது. 'அவருக்கு ஒத்தாப்பாக இருந்து வேலையை முடி", இங்கு ஒத்தாப்பு என்ற சொல் உதவி என்பதைக் குறித்தது.



# களிமண் விளக்கு

2000 வருடங்களுக்கு முற்பட்ட விளக்கு. களி மண்ணைத தகடு போல் தட்டி நடுவில் குழியும் பின்புறம் சிறிது உயரமான தடுப்பும் முன்புறம் திரியிட முகமும் அமைத்து அதை நெருப்பில் சுட்டு திரியிட்டு நெய் வார்த்து மருத மக்கள் பயன்படுத்திய விளக்கு.



சிட்டிகள் என அழைக்கப்படும் விளக்குகள் உட்பட இவ்விளக்குகள் இன்றும் பலவித வடிவங்களில் எம்மிடையே புழக்கத்தில் உண்டு. இதைப்போல பல்வேறு வகையான விளக்கு வகைகளும் நம் முன்னோர்களிடம் பாவனையில் இருந்தது. உதாரணமாக - கைவிளக்கு, கஜலட்சுமி விளக்கு, சங்கு விளக்கு, மாக்கல் விளக்கு, கல் விளக்கு என்பவற்றைக் குறிப்பிடலாம்.




# மைதானம் மறுசீரமைப்பு

றியல் மட்றிட் அணியின் சொந்த மைதானமாக 1947 ஆம் ஆண்டில் இருந்து விளங்கி வருவது ஸ்பெயினில் உள்ள சண்டியாகோ பெர்னாபே மைதானமாகும். 81,044 பார்வையாளர்களை உள்ளடக்கக் கூடிய இந்த மைதானம் உலகில் பிரசித்தி பெற்ற மைதானங்களில் ஒன்றாகவும் விளங்குகின்றது. அண்மையில் இம்மைதானத்தை மறுசீரமைப்புச் செய்வதற்காக 649.5 மில்லியன் அமெரிக்க டொலர்களை றியல் மட்றிட் நிர்வாகம் கடனாகப் பெற்றுள்ளது.

இந்தப் பருவகாலத்தின் முடிவில் மறுசீரமைப்பு பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. புதிய மைதானம் 2023 ஆம் ஆண்டு போட்டிகளுக்காக அனுமதிக்கப்படுமெனவும் கருதப்படுகின்றது. ரசிகர்களை தொடர்ந்தும் மைதானத்தை நோக்கி ஈர்ப்பதற்கு இத்தகைய மறுசீரமைப்பு பணிகளின் அவசியம் தவிர்க்க முடியாத ஒன்றாகவே காணப்படுகின்றது. அந்தவகையில் மழையால் போட்டிகள் பாதிப்படையா வண்ணம் உள்ளிழுக்கும் தன்மை கொண்டதான கூரையுடன் 360 பாகையில் மைதானத்தின் தோற்றத்தை திரையில் கொண்டு வருவதற்கான திட்டமும் இந்த மறுசீரமைப்பின் முக்கிய அம்சங்களாக விளங்கு கின்றன.

இதேவேளை இந்த மறுசீரமைப்பு பணிகள் அணியின் இதர விடயங்களைக் குறிப்பாக வீரர்களின் கழக மாற்றங்கள் உட்பட எதனையும் பாதிக்காதென அணி முகாமையாளரான சிடேன் தெரிவித்துள்ளார்.

# கருத்துக் கூற மறுப்பு



கடந்தவாரம் விளையாட்டு லகில் அதிகம் சர்ச்சைக்குள் ளான விடயம் என்றால் ஐ.பி.எல் போட்டியில் டோனி நடுவர்க ளோடு வாக்குவாதப்பட்டமை தான்.

ஆட்டத்தின் பரபரப்பான சூழ்நிலையில் நடுவர்களின் முரணான தீர்ப்பு எந்த அணித்தலை வரையும் கோபமடையவே வைத்திருக்கும். அந்த வகையில் டோனியின் கோபத்தில் நியாயம் இருந்தாலும் எப்போதும் நிதானம் தவறாத டோனியா மைதானத்துக்குள் நடுவர்களுடன் வாக்குவாதப்பட்டார் என்பதை நம்பமுடிய வில்லை. அவரின் நன்மதிப்புக்கு இச்சம்பசம் ஒரு களங்கமே.

கோடிகள் புரளும் ஐ.பி. எல். தொடரில் வெற்றிக்காக விளையாட்டு உணர்வை கேள்விக் குள்ளாக்கு வதையே இது வெளிப்படுத்தி யுள்ளது.

இது குறித்து ஐ.சி.சி.யிடம் ‘மும்பை மிரர்’ பத்திரிகை கேட்ட பொழுது “இது உள்நாட்டில் நடைபெறும் தொடர் என்பதால் கருத்துக் கூற மறுத்து விட்டது. ஆனாலும் ஐ.சி.சி விதிப்படி இத்தகைய லெவல் 2 விதிமீறல்களுக்கு 50 - 100 வீதமான அபராதம் விதிக்கப்படுவதோடு 2 தகுதி நீக்கப்புள்ளிகளும் வழங்கப்படும். விதிமீறலின் தீவிரத்தைப் பொறுத்து 8 போட்டிகள் வரை தடைவிதிக்கப் படுவதற்கும் வாய்ப்புள்ளது. டோனிக்கு இது முதல் தடவை என்பதனால் அவர் போட்டித் தடையிலிருந்து இருந்து தப்பி விட்டதாக” தெரிவித்துள்ளது.

# கௌரவம்



பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரான இன்சமாம் உல் ஹக்கும் தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் முன்னாள் விக்கெட் காப்பாளரான மார்க் பவுச்சரும் மெர்லிபோன் கிரிக்கெட் கழகத்தின் (எம்.சி.சி.) கௌரவ வாழ்நாள் உறுப்பினர்களாக அங்கத்துவம் பெற்றுள்ளார்கள்.

அந்தவகையில் 1991 ஆம் ஆண்டு சர்வதேச கிரிக்கெட்டுக்கு அறிமுகமான இன்சமாம் 119 டெஸ்ட் போட்டிகளில் 8829 ஓட்டங்களையும் 378 சர்வதேச ஒருநாள் போட்டிகளில் 11739 ஓட்டங்களையும் பெற்றவர். 2007 ஆம் ஆண்டு சர்வதேச போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றதோடு 2016 ஆம் ஆண்டு முதல் தற்போது வரை பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் தேர்வுக்குழுவின் தலைவராகவும் விளங்கி வருகின்றார்.

இதுபோல 1997 ஆம் ஆண்டு சர்வதேச போட்டிகளுக்கு அறிமுகமான மார்க் பவுச்சர் 146 டெஸ்ட் போட்டிகளில் 5498 ஓட்டங்களையும் 290 சர்வதேச ஒருநாள் போட்டிகளில் 4523 ஓட்டங்களையும் குவித்ததோடு 998 ஆட்டமிழப்புகளையும் மேற்கொண்டுள்ளார். பாகிஸ்தான் சார்பில் இம்ரான் கான், வசீம் அக்ரம், வக்கார் யுனிஸ், சாகிட் அவ்ரிடி ஆகியோரும் தென்னாபிரிக்கா சார்பில் அலன் டொனால்ட், ஜொன்ரி ரூட்ஸ், ஷோன் பொலக், டரில் கலினன் ஆகியோரும் இதற்கு முன்னதாக இந்தக் கௌரவத்தைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இன்று கைகூடுமா?

இத்தாலியில் நடைபெற்று வரும் சீ.ரி.ஏ. உதைபந்தாட்ட லீக் தொடரில் இரண்டு வாரங்களுக்கு முன்னதான புள்ளிப்பட்டியல் நிலவரப்படி 31 போட்டிகளின் முடிவில் றொனால்டோ விளையாடி வரும் ஜுவென்ரஸ்



அணி 84 புள்ளிகளுடன் முதலிடம் வகித்து வருகின்றது. நபோலி அணி 64 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தில் உள்ளது. ஜுவென்ரஸ் அணிக்கு இன்னமும் 7 போட்டிகள் மீதமுள்ள நிலையில் கடந்தவாரம் நடைபெற்ற ஸ்பாள் அணியுடனான போட்டியைச் சமப்படுத்தினாலே கிண்ணத்தை வெல்வதற்கான வாய்ப்பு இருந்தது.

1957 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஜுவென்ரஸ் அணி, ஸ்பாள் அணியிடம் தோல்வி அடையாத காரணத்தினாலும் தற்போது 13ஆவது இடத்தில் அவ்வணி உள்ளதனாலும் இந்தப்போட்டியில் ஜுவென்ரஸ் இலகுவில் வென்றுவிடும் என்ற கணிப்பே இருந்தது. ஆனாலும் துரதிர்ஸ்டவசமாக இந்தப் போட்டியில் ஜுவென்ரஸ் அணி 2 : 1 என்று தோல்வியடைந்ததனால் கிண்ணம் வெல்வதில் சிறிய தாமதத்தைப் பெற்றுள்ளது. இந்தப்பருவகால சீரிஏ தொடரில் ஜுவென்ரஸ் பெறுகின்ற இரண்டாவது தோல்வி இதுவாகும். ஆனாலும் இன்று (20.04.2019) நடைபெறவுள்ள பியோறென்ரினா அணிக்கெதிரான போட்டியில் ஜுவென்ரஸ் வெல்லும் பட்சத்தில் தொடர்ச்சியாக 8 ஆவது தடவையாக கிண்ணம் வெல்வதற்கான வாய்ப்பு அவர்களுக்கு கைகூடும்.

# புதிய ஒப்பந்தம்




காற்றுள்ள போதே தூற்றிக் கொள்வது மனித இயல்பு. இதற்கு விளையாட்டுத்துறையும் விதிவிலக்கல்ல. அந்தவகையில் கடந்த வருட அமெரிக்க ஓப்பன் மற்றும் இந்த வருட அவுஸ்ரேலியன் ஓப்பன் தொடர்களில் கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்ற ஜப்பானின் நயோமி ஒசாகா அந்த வெற்றிகளோடு மகளிர் ரென்னிஸ் தரவரிசைப் பட்டியலிலும் முதல்நிலை வீராங்கனையாக விளங்கி வருகின்றார்.

இந்நிலையில் சில தினங்களுக்கு முன்னர் ஒசாகா நைக் நிறுவனத்துடன் புதிய விளம்பர ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளார். இது குறித்து ஒசாகா ‘நான் நைக் குடும்ப உறுப்பினராக இருப்பதையிட்டு பெருமைப்படுகின்றேன். நைக் புகழ்பெற்ற ஒரு நிறுவனம். இந்த நிறுவனத்தின் பல தருணங்களில் நானும் ஒரு பகுதியாக இருப்பேன் என எதிர்பார்க்கின்றேன்’ எனக் குறிப்பிட்டுள்ளார். அந்தவகையில் ஒசாகா நைக் நிறுவனத்தின் சின்னம் பொறித்த சீருடைகளை முதன்முறையாக இன்று (20.04.2019) ஜேர்மனியில் ஆரம்பமாகவுள்ள கிராண்ட் பிறிக்ஸ் ரென்னிஸ் தொடரில் அணிவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஏற்கனவே ஓசாகா ஜப்பானின் விமான நிறுவனமான ஓல் நிப்போன் ஏர்வேஸ், நிசான் கார் கம்பனி மற்றும் சிட்டிசன் மணிக்கூட்டுக் கம்பனி ஆகியவற்றுடனும் விளம்பர ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தப் பத்திரிகை லக்ஷ்மி பிறின்டர்ஸ் (பிறைவேற்) நிறுவனத்தால் 20.04.2019 அன்று 107, இராச வீதி, கோப்பாய் - திருநெல்வேலி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.